பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 19 வியாழக்கிழமை (02.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :188

## புத்தர் சிலையை அகற்றுவதற்கு 15ஆம் திகதிவரை இறுதிக்கெடு!

திருகோணமலை.ஜீன்2

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் ஆக்கபூர்வமானதும், இறுதியானதும், உறுதியானதுமான நடவடிக்கையொன்றை எடுப்பதற்காக அரசுத் தரப்பிற்கு மேலும் இருவாரகால அவகாசம் இறுதியாக வழங்கப்பட்டிருக்கிறது. நேற்று முற்பகல் திருமலை உவர்மலையில் உள்ள மாகாண ஆளுநர் விடுதியில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சுக்களின் போது இந்தக் கால அவகாசம் வழங்கப்பட்டது. எதிர்வரும் 15ஆம் திகதி வரை இந்த இறுதிக் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

திருமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பிலான நேற்றைய உயர் மட்டப் பேச்சுக்களில் மகாவலி அபிவிருத்தி, ஆற்றுப்படுக்கைகள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் திருமலையில்; ஹர்த்தால் பற்றி அவர்களே முடிவெடுப்பர்

யாழ்ப்பாணம்.ஜீன்2

சர்ச்சைக்குரிய புத்தர் சிலை விவகாரம் மோசமடைவதால் அங்கு நிலைமைகளை நேரில் அவதானிப்பதற்கும் அவற்றை வழிநடத்துவதற்கும் என தமிழ்க்கூட்டமைப்பின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருமலையில் கூடுகின்றனர். இன்று முதல் அவர்கள் அங்கு தங்கியிருந்து செயலாற்றவுள்ளனர்.

புத்தர் சிலை அகற்றப்படுவதற்கு நீதிமன்றம் விடுத்த அறிவுறுத்தல்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் தமிழர்தரப்பு முன்வைத்த காலக்கெடுவும் இன்று முடிவுறுகின்றது. இந்த நிலையில் மாவட்டத்தில் நிலைமை மோசமடையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அங்கு ஏற்படக் கூடும் என எதிர்பார்க்கப்படும்

(16ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு ஏற்பட்டால் அரசிலிருந்து மறுபேச்சின்றி ஜே.வி.பி. உடன் வெளியேறும்

## கட்சியின் அரசியல் குழு மிக உறுதியான தீர்மானம்

கொழும்பு,ஜீன்2

**விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து அரசு பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துமானால் மறுபேச்சின்றி அரசிலிருந்து உடன் வெளியேறுவது என்று ஜே.வி.பி. தீர்க்கமாக முடிவுசெய்துள்ளது. கட்சியின் அரசியல் குழு இந்தத் தீர்மானத்தை உறுதியாக வெளியிட்டுள்ளது.**

நுகேகொடயிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஜே.வி.பியின் அரசியல் குழுக் கூட்டம் நடந்தது. அதில் தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் பற்றித் தீவிரமாக அலசி ஆராயப்பட்டன. பொதுக்கட்டமைப்பு விடயமே அதில் முக்கிய இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற விடயம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

புலிகளுடன் அரசு செய்துகொள்ளவுள்ள உத்தேசப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் இந்தியாவின் ஆலோசனையை ஜனாதிபதி பெறவுள்ளார். இதற்காக அவர் இந்தியா செல்கிறார்.

பொதுக்கட்டமைப்புக்கு இந்தியா பச்சைக்கொடி காட்டிவிட்டால் அதன் பின்னர் இந்த விடயத்தில் ஜே.வி.பி. என்ன நிலைப்பாட்டை எடுப்பது என்பது பற்றிக் கூட்டத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இனிப் பேச்சு இல்லை!

திருகோணமலை.ஜீன்2

எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் திருமலை புத்தர் சிலை விவகாரத்திற்குத் தீர்வு காணப்படாவிட்டால் அதுதொடர்பான எந்தப் பேச்சுக்களிலும் இனித் தமிழர் தரப்பு கலந்துகொள்ளாது.

இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் திருமலை தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்கினேஸ்வரன். நேற்று திருமலை ஆளுநர் விடுதியில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர் இதனைக் கூறினார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

திருமலை நகரில் நிறுத்தப்பட்டுள்ள பாது

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு தீவிர பாதுகாப்பில்!

கொழும்பில்.ஜீன்2

இராணுவப் பலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரி லெப்ரினன்ட் கேணல் ரி.என். முத்தலிப்பின் கொலையை அடுத்து தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தலைநகரின் முக்கிய இடங்களில் இராணுவமும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பின் பிரதான வீதிகள் எங்கும் ஏ.கே.-47ரக இயந்திரத் துப்பாக்கி தாங்கிய இராணுவத்தினர் வரிசையாகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கு இடமான வாகனங்களைப் பொலிஸார் ஆங்காங்கே நிறுத்திச் சோதனையிடுகின்றனர். இரவிலும் பொலிஸாரின் ரோந்து மற்றும் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வீதியில் நடந்து சென்ற 2 வயதுச் சிறுவனை நீதிமன்றுக்குத் தூக்கிச் சென்ற நீதிவான் !

யாழ்ப்பாணம்.ஜீன்2

வீதியால் அநாதரவாக-தனியாகச் சென்று கொண்டிருந்த சுமார் 2 வயது மதிக்கத்தக்க சிறுவனை, அவ்வீதியால் வந்து கொண்டிருந்த நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தமது காரில் ஏற்றி நீதிமன்றத்துக்குக் கொண்டுசென்றார்.

பின்னர் அங்கு வந்த சிறுவனின் தாயார் நீதிவானால் கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் அவரிடம் பிரஸ்தாப சிறுவன் கையளிக்கப்பட்டான்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் ஐந்தாம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று யாழ்.நகரில் பேரணியும் கூட்டமும்

யாழ்ப்பாணம்.ஜீன்2

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று வியாழக்கிழமை குடாநாட்டில் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த மாணவர் எழுச்சி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

'எழுச்சி நிகழ்வுகளில் முன்னதாக யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்றிலில் இருந்து முற்பகல் 10 மணிக்கு மாணவர்கள் பேரணியாக யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தை வந்தடைவர்.

அங்கு மாபெரும் எழுச்சிக் கூட்டம் நடைபெறும்.

இதில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழர் ஆசிரியர் சங்க சிரேஸ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ப.கனகலிங்கம், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சொலமன் சிறில், யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எஸ்.கிருஷ்ணா ஆகியோர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அலுவலகம் மீது அக்கரைப்பற்றில் தாக்குதல்

திருக்கோவில்.ஜீன்2

அக்கரைப்பற்றிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாக சேவை அலுவலகம் நேற்று அதிகாலை அடுத்தடுத்து இரு கிரனேட் தாக்குதல்களுக்கு இலக்கானது.

அக்கரைப்பற்று-அம்பாறை வீதியில் அமைந்துள்ள இந்த அலுவலகம் மீது அதிகாலை 2 மணியளவில் இரண்டு கிரனேட்டுக்கள் வீசப்பட்டன எனப் புலிகள் கூறினர். எனினும், இந்தத் தாக்குதலில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

சம்பவம் இடம்பெற்றபோது புலிகளின் அம்பாறை மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் புவிராஜ் உட்பட 8 போராளிகள் அலுவ

(16ஆம் பக்கம் பார்க்க)

## 3 இளைஞர்கள் ஆயுதங்களுடன் பத்தனைப் பொலிஸிடம் சிக்கினர்

கொழும்பு.ஜீன்2

மலையகத்தில் ஆயுதங்களுடன் நடமாடினார்கள் என்று கூறப்படும் மூன்று முஸ்லிம் இளைஞர்களை பத்தனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பத்தனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகாவத்தைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில் லொறி ஒன்றினைச் சோதனையிட்டபோதே இந்த 3 இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து 303 ரகத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மூன்று இளைஞர்களையும் பத்தனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று நுவரேலிய நீதிவான் முன் ஆஜர்செய்தார்.

அவர்கள் மூவரையும் எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (எ-க)

## குடாநாட்டில் இன்னும் இருவாரங்களில் வீதி ஒழுங்குகள் இறுக்கமாக அமுலுக்கு!

### வடபிராந்திய பொலீஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் வீதிப்போக்குவரத்து நடைமுறைகள் இன்னும் இருவாரங்களுக்குப் பிறகு இறுக்கமாக - தீவிரமாக நடைமுறைப் படுத்தப்படும் என்று வடபிராந்திய பொலீஸ்மா அதிபர் கல்பதாது தெரிவித்திருக்கிறார்.

குடாநாட்டில் இடம்பெற்று வருகின்ற வீதி விபத்துக்களைத் தடுப்பது மற்றும் வீதிப் போக்குவரத்து நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை யாழ். கண்டி வீதியில் உள்ள 'கிறீன் இன்' விடுதியில் நடைபெற்றன.

இந்தக் கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே வடபிராந்திய பொலீஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார். குடாநாட்டில் வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்துமாறு பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனினும், முதற்கட்டமாகச் சகலருக்கும் இருவாரகால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே இரு வாரங்களுக்குப் பிறகு போக்குவரத்து ஒழுங்கு விதிகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படும். அதன்பிறகு ஒழுங்கு விதிகளை மீறுவோர் மீது எந்தவிதமான தயவு தாட்சணியமுமின்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

வீதி விபத்துக்களைத் தடுத்தல் மற்றும் போக்குவரத்து நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணுதல் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இதன் பிரகாரம் பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

★ யாழ். நகரப் பகுதியிலுள்ள ஒருவழிப்

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய கலந்துரையாடலில் பங்குபற்றிய மாநகரசபை ஆணையாளர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள்.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முடிந்தால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்திப் பாருங்கள்!

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சவால் விடுக்கிறது ஜனாதிபதிக்கு

கொழும்பு,ஜூன்2

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் முடிந்தால் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துமாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்று ஜனாதிபதிக்கு சவால் விடுத்திருக்கிறது.

ஆழிப்பேரலையின் பின்னரான நிவாரண மீள்கட்டுமானப் பணிகளுக்காகப் புலிகளும் அரசும் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க உத்ததேசித்துள்ளன. இதற்கு எதிர்ப்பு கிளம்புவதால், அது பற்றி மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதற்குச் சவால் விடும் விதத்திலேயே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் கேட்போர்கூடத்தில் நேற்றுச் செய்தியாளர் மாநாடொன்றைத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நடத்தியது. இயக்கத்தின் தலைவர் எல்லே குணவங்ஸ தேரர் தலைமையில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் இயக்கத்தின் முக்கியஸ்தர்களான விமல் வீரவன்ஸ எம்.பி., குணதாஸ அமரசேகர உட்படப் பலரும் கலந்துகொண்டனர். இந்தச் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய எல்லே குணவங்ஸ தேரர் மேலும் கூறியதாவது:-

இன்று கொழும்பிலுள்ள அரசியல் தலைமைகள், விடுதலைப் புலிகள் குறித்தும் பொதுக் கட்டமைப்புக் குறித்தும் புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கின்றன. மறுபுறம் இங்கு இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகள் கொல்லப்படுகின்றனா .

பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கும் அனைவரும் மேஜர் முத்தலிப்பின் கொலைக்கான முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

இவ்வாறான கொலைகளைத் தொடர்ச்சியான முறையில் மேற்கொள்வதன் மூலம் அரசியல் தீர்வில் தமக்கு நம்பிக்கை இல்லை என்பதையே புலிகள் வெளிப்படுத்திவருகின்றனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை உருவாக்க மேலும் முயற்சிகளை எடுப்பது அர்த்தமற்றது. இந்த விடயத்தை இன்று அனைவருமே எதிர்க்கின்றனர். எனவே, முடிந்தால் பொதுக்கட்டமைப்பு தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துமாறு நாம் ஜனாதிபதிக்குச் சவால் விடுக்கிறோம்.

நாடாளுமன்றத்தில் இந்த விடயத்தை முன்வைத்து மனச்சாட்சியின்படி எம்.பிக்கள் வாக்களிக்க இடமளிக்க வேண்டும். முடிந்தால் இவற்றை மேற்கொள்ளுமாறு நான் அரசுக்குச் சவால் விடுக்கின்றேன்.

பொதுக்கட்டமைப்பு என்ற பெயரிலோ அல்லது வேறு எந்தக் காரணங்களுக்காகவோ நாட்டைக் கூறுபோட நாம் எவரையும் அனுமதிக்கமாட்டோம். அவ்வாறான முயற்சிகளை என்ன விலை கொடுத்தாவது தோற்கடிப்போம்

- இவ்வாறு எல்லே குணவங்ஸ தேரர் மேலும் கூறினார். (எ-க)

## மின் தடை குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச அலுவலகத்தினரால் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், நாளை சனிக்கிழமை கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், நல்லூர், கல்வியங்காடு, அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் போன்ற பகுதிகளிலேயே மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-204)

### மோ.சைக்கிளில் வந்தவர்களில் ஒருவர் துப்பாக்கியை எடுப்பதைக் கண்டேன்

# மேஜர் தனது பிஸ்ரலை எடுப்பதற்கிடையில் அவரை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர்

## முத்தலிப்பின் கார் சாரதி சாட்சியம்

கொழும்பு,ஜூன்2

"மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களில் ஒருவர் தனது ஜக்கற்றுக்குள் இருந்து துப்பாக்கி ஒன்றை எடுப்பதைக் காரின் பக்கக் கண்ணாடி ஊடாக அவதானித்தேன். அது பற்றி மேஜரிடம் கூறினேன். அவர் தனது கைத்துப்பாக்கியை எடுத்து இயக்குவதற்குள் துப்பாக்கிதாரி அவரை நோக்கி சரமாரியாகச் சுட்டார். நான் சாரதி ஆசனத்தில் குனிந்து படுத்துத் தப்பினேன்"- இப்படி பொலீஸாருக்கு வாக்குமூலம் அளித்திருக்கிறார் லெப்டினன்ட் கேணல் துவான் நிஷாம் முத்தலிப்பின் சாரதி.

நேற்றுமுன்தினம் நாரஹேன்பிட்டி, பொல்ஹேன்கொடவில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுத்துறையின் கட்டளையிடும் அதிகாரி ரி.என்.முத்தலிப்பின் கொலை தொடர்பான விசாரணைகளின்போதே அவர் இப்படித் தெரிவித்தார். அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

காரைப் பின்தொடர்ந்துவந்த மோட்டார் சைக்கிள் நபர்கள் பற்றி எனக்குச் சந்தேகம் வலுத்தபோது அதுபற்றி நான் மேஜரிடம் கூறினேன். நான் சொல்லி முடிப்பதற்குள் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் எம்மை நெருங்கிவிட்டனர். மேஜர் உடனடியாக தனது கைத்துப்பாக்கியை எடுத்து அதை இயக்குவதற்குள் அவர் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. சூடுகள் பறந்தன. நான் எனது ஆசனத்துக்குள் குனிந்து படுத்து மறைந்து கொண்டேன்.

துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்ததும் ஆசனத்திலிருந்து எட்டிப் பார்த்தேன். மேஜர் ரத்த வெள்ளத்தில் சரிந்து கிடந்தார். உடனடியாக அவரை அப்பலோ மருத்துமனையில் சேர்ப்பித்தேன். அங்கு சென்றபோது அவரது உயிர்பிரிந்துவிட்டது - என்றார் முத்தலிப்பின் கார்ச் சாரதி.

இதேவேளை, சம்பவம் நடந்த இடத்துக்கு அண்மித்த பகுதியில் கடமையில் இருந்த போக்குவரத்துப் பொலீஸ் கான்ஸ்டபிள் பொன்சேகா என்பவரும் சம்பவத்தைத் தான் நேரில் கண்டார் எனத் தெரிவித்துள்ளார். அவர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதாவது:-

நான் சம்பவம் நடந்த இடத்துக்கு அண்மையில் வாகனம் ஒன்றை நிறுத்தி அந்த வாகனச் சாரதிக்குத் தண்டப்பணம் செலுத்த வேண்டிய படிவம் வழங்கிக்கொண்டிருந்தேன். அச்சமயம் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது கறுப்பு நிற ஜக்கற் அணிந்திருந்த இருவர் ஒரு காரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதைக் கண்டேன். சொற்ப நேரத்துக்குள் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உடனடியாக எனது அருகில் இருந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மபிரியவிடம் சம்பவத்தைக் கூறினேன். நாம் அந்தப் துப்பாக்கிதாரிகளை மடக்கிப் பிடிப்பதற்கு முற்படும் முன்னர் அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றுவிட்டனர். கண் இமைக்கும் நேரத்துக்குள் அவர்கள் பறந்து சென்று விட்டனர் - என்று அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத்திடம் அந்தப் பொலீஸ் கான்ஸ்டபிள் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-க)

# தொழில் அதிகாரி வெற்றிடங்களை நிரப்ப விரைவில் விசேட பரீட்சை நடத்தப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன்2

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவிவரும் தொழில் அதிகாரிகள் பற்றாக்குறையை நீக்குவதற்காக விசேட பரீட்சை ஒன்றை நடத்துவதற்கு தொழில் மற்றும் தொழிற்பயிற்சி, வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரட்ன அனுமதியளித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற மாவட்ட ஆணையாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இந்த அனுமதியை வழங்கினார்.

மேற்படி சந்திப்பின் போது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொழில் அதிகாரிகள் போதியளவு இல்லாமையால் தொழில் திணைக்கள வேலைகள் மிக மந்தகதியில் நடைபெறுகின்றன என்றும்-

தேவையான அதிகாரிகளை நியமிக்கும் போது ஏனைய மாகாணங்களைப் போன்று தொழில் சட்டங்களை இங்கும் நடைமுறைப்படுத்த முடியும் என்றும் - வடக்கு-கிழக்கு மாகாணத்தின் மாவட்ட ஆணையாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்தே தொழில்துறை அமைச்சர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 22 தொழில் அதிகாரிகளை நியமிப்பதற்கு வெகுவிரைவில் விசேட பரீட்சையை நடத்துவதற்கு உததரவிட்டுள்ளார்.

இதேவேளை-

யாழ். மாவட்டத்தில் 10 தொழில் அதிகாரிகள் சேவையாற்ற வேண்டிய நிலையில் ஒரு அதிகாரி மட்டுமே சேவையாற்றுகின்றார் என்றும் -

அவரும் இன்னும் சில மாதங்களில் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளார் என்றும்-

இதனால், தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணி ஸ்தம்பிக்கும் என்றும்-

யாழ். பிராந்திய தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் எஸ்.கனகேஸ்வரன் தெரிவித்தார். (எ-202)

# சுகாதாரத்துறை ஊழியருக்கு ரூ 2.500 அடிப்படைச்சம்பளத்துடன் சேரும்

## மாகாண பிரதமசெயலர் நேற்று அறிவிப்பு

குருநகர்,ஜூன்2

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சேவைபுரியும் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு படியாக (Allowance)வழங்கப்பட்டு வரும் 2 ஆயிரத்து 500 ரூபாவை அவர்களது அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்து வழங்குமாறு வடக்கு -கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். இரங்கராஜா மாகாணத்தில் உள்ள சகல பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்களுக்கும் நேற்று அனுப்பிவைத்துள்ள பக்ஸ் செய்தி மூலம் கோரியுள்ளார்.


பொது நிர்வாகச் சுற்றறிக்கை 09/2004 இன்படி சகல ஊழியர்களுக்கும் 01.10.2004 தொடக்கம் ரூபா 2ஆயிரத்து 500 அவர்களது அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப் பட்டுவருகிறது. இந்த அடிப்படைச் சம்பளத்திற்கிணங்க அவர்களுக்கு ஏனைய படிகளும் மேலதிக நேரக் கொடுப்பனவும் வழங்கப்பட்டு வருவதுடன் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியக் கழிவும் அறவிடப்படுகிறது.

ஆனால், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சுகாதாரத் திணைக்களங்களில் சேவை புரியும் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு மட்டும் இவ் 2ஆயிரத்து 500ரூபா அவர்களது அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படாமல் படியாக மட்டுமே வழங்கப்படுகிறது. இதனால் இவர்கள் ஏனைய படிகளையும், மேலதிகக் கொடுப்பனவுகளையும் பழைய சம்பளத்திலேயே பெற்று வருகிறார்கள். விதவைகள் அனாதைகள் அறவீடும் முன்னைய சம்பளத்துக்கே கணிப்பீடு செய்யப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளரால் நேற்று அனுப்பிவைக்கப்பட்ட பக்ஸ் செய்தியின் படி ஏனைய அரச ஊழியர்களைப் போல சுகாரதாரத்துறை ஊழியர்களுக்கும் 1.12.2004தொடக்கம் 2ஆயிரத்து 500ரூபா அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படவுள்ளது. இதனடிப்படையில் ஏனைய படிகளும், மேலதிக நேரக் கொடுப்பனவும் கணிப்பீடு செய்யப்படும். அத்துடன் புதிய சம்பளத்தின்படி விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய அறவீடுகளையும் அறவிடுமாறும் அவர் பணித்துள்ளார். மேற்படி 2ஆயிரத்து 500ரூபாவை படியாக வழங்காமல் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்து வழங்குமாறு கோரி சுகாதார சேவைகள் தொழிற்சங்க ஒன்றியத்தினர் கடந்த மே மாதம் 26ஆம் திகதிகளில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இரு தினங்கள் அடையாள வேலைநிறுத்தம் செய்ய முடிவெடுத்து பின்னர் அது பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே நேரத்தில் தென்னிலங்கையில் சேவை புரியும் சுகாதாரத் துறை ஊழியர்களுக்கும் இந்த 2ஆயிரத்து 500ரூபா படியாக வழங்கப்படாமல் அவர்களது அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்தே வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே. (எ-51)



செம்மணியில் உள்ள 'யாழ். வரவேற்கிறது' என்ற வளைவு நேற்று மீளத் திறந்து வைக்கப்பட்டது. மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராஜா நாடாவெட்டி வளைவைத் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (வளைவின் படம் உள்ளே) (படம்: பிரபா)

# கௌசல்யன் கொலையைக் கண்டித்த சர்வதேசம் முத்தலிப் கொலையில் மௌனம் சாதிப்பது ஏன்?

## விமல் வீரவன்ஸ கேள்வி

கொழும்பு,ஜூன்2

விடுதலைப் புலிகளின் உறுப்பினர் கௌசல்யன் கொலைக்குக் கண்டனம் தெரிவித்த மேற்குலக நாடுகளும், அதன் பிரதிநிதிகளும் இன்று மேஜர் முத்தலிப் கொலையின் போது மௌனமாக இருப்பது ஏன்?

இவ்வாறு கேள்வியெழுப்புகிறார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் முக்கியஸ்தருமான விமல் வீரவன்ஸ. கொழும்பில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் இலங்கைக்கு அழுத்தத்தை வழங்கிவரும் சர்வதேசச் சமூகம், அரச படைத்துறையினர் சுட்டுத்தள்ளப்படும் போது ஏன் மௌனம் சாதிக்கிறது? அன்று கௌசல்யன் கொலை செய்யப்படும் போது கண்டித்த சர்வதேச சமூகம் இன்று மௌனம் காப்பது ஏன்? இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் புலிகளுக்குச் சார்பாகவே நடந்துகொள்கிறது. - இவ்வாறு விமல் வீரவன்ஸ எம்.பி. மேலும் குறிப்பிட்டார். (எ-க)

# தமிழ் மாணவரின் அடிப்படை உரிமைகளை இலங்கை அரசும் ராணுவமும் மதிக்க வேண்டும்

## எழுச்சிநாள் செய்தியில் தமிழ் மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன் 2

தமிழ் மாணவர்களின் கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை இலங்கை அரசும் அதன் இராணுவமும் மதித்து நடக்க வேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. தமிழீழ மாணவர் எழுச்சிநாள் இன்று தமிழர் தாயகத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்ட சிறப்புச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

வடக்கு - கிழக்கின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் தங்களின் உரிமைக்காக - நிம்மதியான வாழ்வுக்காக - போராடிக் கொண்டு இருக கின்றார்கள். சொந்த நிலத்தில் அகதிகளாக்கப்பட்ட வாழ்வாக அவர்களின் அவலம் நீண்டு கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் சொந்த நிலபுலங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் முட்கம்பி வேலிகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றது. இராணுவத்தினரின் கெடுபிடிகளினாலும் இனவாத அரசியலினாலும் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் காலம் காலமாக அனுபவித்து வருகின்ற அவலம் நிறைந்த வாழ்வுக்கு இலங்கை அரசு முற்றுப்புள்ளி வைப்பதாகத் தெரியவில்லை.

சுயநிர்ணய உரிமையோடு தமிழன் வாழ வேண்டும் என்று அகிம்சை ரீதியாக ஆரம்ப காலத்தில் முன்னெடுக்கப்பட்ட உரிமைப்போர் தமிழ் மாணவர்களால், மக்களால் ஆயுதப் போராக ஆரம்பிக்கப்பட்டு இன்று பேரினவாத சக்திகளுக்குப் பேரிடியாக வளர்ந்துள்ளது. எங்கள் நிலம் மீட்புப் போராட்டம் பல சாதனைகளைக் கடந்து இன்று தமிழ் மக்களது காவலரனாக நிற்கின்றது.

### அரசின் ஒடுக்குமுறை

எங்கள் விடுதலைப் போரின் ஆரம்ப காலப்பகுதி மாணவர் அடக்குமுறைக்கு எதிராகவே ஆரம்பிக்கப்பட்டது. 1972இல் இலங்கை அரசின் திட்டமிட்ட கல்விச் சீர்திருத்தத்தினால பாதிக்கப்பட்ட மாணவர்களினால் அன்று உரிமைக்குரல் எழுப்பப்பட்டதிலிருந்து இன்றுவரை தமிழ் மாணவர்களின் கல்வியில் அரசு ஒடுக்குமுறைகளைக் கையாண்டு வருகின்றது.

ஒரு சமூகத்தை அழிப்பதென்றால் அந்த சமூகத்தில் கல்விக்கான வாய்ப்பினை இல்லாதொழிக்க வேண்டுமென்ற யதார்த்தத்தில் ஸ்ரீலங்கா அரசின் கபடநாடகங்கள் காலத்துக்குக காலம் வடக்கு - கிழக்கில் அரங்கேறிய வண்ணம உள்ளன.

வளர்ந்து வருகின்ற உலகில் தனது தனித்துவமான திறமையால் சர்வதேச ரீதியிலும் சரி இலங்கையிலும் சரி கல்வியில் சாதனை நிலை நாட்டிய - அரசின் ஒடுக்குமுறைகளுக்கும் அடங்காது குப்பி விளக்கிலும் படித்தும் - துப்பாக்கி முனையில் உரிமை பறித்தபோதும் வென்று காட்டிய - தமிழ் மாணவர்கள் தொடர்ந்தும் இனனல் சுமந்த கல்வியைக் கற்பதற்குத் தயாராக இல்லை. சர்வதேச ரீதியில் அடிப்படை உரிமைகள் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கும் உரிமைகளில் தமிழ் மாணவர்கள் அற்பஉரிமைகளை யாவது அடையாத விதத்தில் அரசு நடந்து கொள்வதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கல்வி கற்றலில் தனிமனித பாதுகாப்போ, சுதந்திரமோ, கருத்து வெளியிடுதலோ இன்று காணமுடியாதுள்ளன. மாணவர்களைத் தீயவழியில் திசைதிருப்பிச் சின்னாபின்னப்படுத்துவதில் அரசு கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

### வசதிகளற்ற நிலையில் தமிழ் மாணவர்கள்

தமிழ் மாணவர்களின் கற்றலைப் பொறுத்தவரையில் கற்கக்கூடிய மனநிலையையோ அதற்கான வசதிகளையோ கொண்டிருக்கவில்லை. அடிப்படை வசதிகள் அற்ற முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் தங்கள் கல்வியைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்கியபடி உள்ளார்கள். உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அவர்களின் வளங்கள் எல்லாம் பறிக்கப்பட்டிருக்க வறுமையின் பிடியிலே ஒரு நேர உணவுக்கும் வழியின்றி பள்ளிக்குச் செல்கின்றார்கள். இவர்களுக்கான கல்வியினைத் தொடர்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

மாணவர்களின் வெள்ளைச் சீருடைக்குரிய அந்தஸ்தினை இன்று இலங்கை அரசும் இராணுவமும் உணர்ந்திருக்கின்றனவா? காலம் காலமாக மாணவர்களைப் படுகொலை செய்த நினைவுகளை - கிருஷாந்தி, சஞ்சீவன், ரஜனி, கோபினாத் போன்ற எத்தனையோ மாணவரை அழித்த நினைவுகளைத் தமிழ் மாணவர் சமுகம் ஒருபோதும் மறக்காது.




இன்று பாடசாலைகள் பலவும் இராணுவக் காவலரண்களாக மாற்றப்பட்டு இருக்கின்றன. இதனால் மாணவர்கள் இடம்பெயர்ந்த பாடசாலை என்று கற்பதற்கு ஏற்ற சூழலும் அற்ற நிலையில் வெயிலிலும் மழையிலும் துன்ப சுமைகளோடு கல்வி கற்றுக்கொண்டிருக்கிறார்கள். பாதுகாப்பு வலயத்தில் உள்ள பாடசாலைகள் படையினரின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இன்று எத்தனை பாடசாலைகளில் இராணுவக் காவலரண்களுக்கு மத்தியில் சிறைச்சாலைக் கல்வி கற்கின்ற நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

### முட்கம்பி வேலிக்குள் கற்கின்ற நிலை

சுதந்திரமான கல்வியைக் கற்க முடியாத நிலையில் இன்று எம்மண்ணில் எத்தனையோ பாடசாலைகள் இயங்குகின்றன. முட்கம்பி வேலிகளுக்கு நடுவே தங்களைக் காத்துகொள்ள மாணவர்கள் கவசங்களாக்கப்பட்டுள்ளனர். அங்கு கற்கின்ற மாணவர்கள்-பல்வேறுபட்ட அச்சுறுத்தல்களுக்கும் இன்னல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள். மகளிர் பாடசாலைகளுக்கு முன்னால் முகாம் அமைத்துள்ள இராணுவத்தின் வெறிப்பார்வைக்குப் பயந்து மாணவிகள் இன்று பாடசாலைக்குச் செல்ல அஞ்சுகினறனர். கடந்த காலங்களில் இராணுவத்தால் நடந்த கொடுமைகள் இடம்பெறாது என என்ன நிச்சயம்.

இன்று எங்கள் மண்ணில் வளர்ந்திருக்கும் விடுதலைப் போராட்டமும் சரி, விடுதலைப் புலிகள் அமைப்பும் சரி தமிழ்மக்களால் உருவாக்கப்பட்டவை. விடுதலைப் புலிகள் என்பவர்கள் வேற்று கிரகவாசிகளோ அல்லது அயல் நாட்டவர்களோ அல்ல். எங்களோடு ஒன்றாகப் பிறந்து வளர்ந்த எங்கள் சகோதரர்கள். எங்கள் உறவுகள். அவாகளோடு அன்போடு உறவாடுகின்றோம். எங்களுக்காக இறந்த எங்கள் சொந்தங்களை நினைவு கூர நினைவு நாள்களை ஒழுங்கு செய்கின்றோம். எங்களின் குறைகளைச் சர்வதேசத்திற்குச் சொல்ல எழுச்சி நிகழ்வுகளைச் செய்கின்றோம். எங்களின் கருத்துச் சுதந்திரத்திற்குத் தடையாக இராணுவம் எழுச்சி நாள்களின் போதும் நினைவு தினங்களின் போதும் அடக்குமுறைகளைக் கையாள்கின்றனர்.

கடந்த சில மாதங்களில் பல மாணவர்கள் காட்டுமிரண்டித்தனமாகவும் கண்மூடித்தனமாகவும் தாக்கப்பட்டிருக்கின்றனர். இலங்கைப் பொலீஸார் பாடசாலை வளாகத்தினுள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியிருக்கின்றனர். இவையெல்லாம் மாணவர்களாகிய எங்களை ஆத்திரமூட்டுவனவாக இருக்கின்றன.

இன்று இராணுவம் உளவியல் போரின் மூலம மாணவர்களைச் சிதைக்கும் நடவடிக்கைகளில இறங்கியிருக்கின்றது. இன்று ஆபாசப் படங்களையும் போதைப் பொருள்களையும் இளையவர்களிடம் வழங்கித் திசைதிருப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. இதனை இராணுவம உடனடியாக நிறுத்தவேண்டும்.

இவை அனைத்துக்கும் விரைந்து முடிவெடுத்துச் செயலாற்ற வேண்டிய கடப்பாடு யாழ் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்கு உண்டு. எனவே, மாணவர்களாகிய எங்கள் பிரச்சினைகளுக்கு மிகவிரைவில் முடிவு வராத படசத்தில் தமிழ் மாணவர்களாகிய நாங்கள் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்குவோம். இது சம்பந்தப்பட்ட கோரிக்கைகளையே இந்தத் தமிழீழ மாணவர் எழுச்சிநாளில் முன்வைக்கின்றோம் - என்றுள்ளது. (ஒ)

# ஈழத்தமிழர்களின் உயிர்மூச்சு திருகோணமலை; அதனைக் காப்பது ஒவ்வொருவரினதும் பெருங்கடன்



அண்மையில் திருமலை பேருந்து நிலையத்துக்கருகில் இரவோடிரவாக (15.05.2005 - ஞாயிற்றுக்கிழமை) புத்தர்சிலை நிறுவப்பட்டிருப்பது திருமலையில் மட்டுமல்ல, தமிழீழம் எங்கிலும் ஒரு பதற்ற நிலையை - ஒரு பரபரப்பான சூழ்நிலையை - உருவாக்கியுள்ளது. தென்னிலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும் சரி, அப்பகுதியில் வாழ்கின்ற சிங்கள மக்களும சரி, இச்சிலை நிறுவுதல் சிங்களப் பேரினவாதிகளால் ஒரு போரைத் தொடுப்பதற்குரிய ஒரு முன்னறிவித்தலாக - எச்சரிக்கையாகவே உள்ளது என நம்புகின்றனர்.

சிங்களப் பேரினவாதிகள் இப்புத்தர் சிலையைத் தாம் நிறுவுவதற்கு, தமக்குப் புத்த மதத்திலுள்ள எல்லைமீறிய ஈடுபாடெனக் காரணம் காட்டினும், அவர்களின் கூற்றுக்களை எவரும் ஏற்கும் நிலையிலில்லை. திருமலைப் பேருந்துச் சந்தியில் இப்புத்தர் சிலை ஏதோ புத்தமதப் பற்றினால் நிறுவப்பட்டதென்று கூறும் காரணங்களை, சிந்திக்கின்ற எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

இச்செயலுக்குத் துணையாகத் தேசியப் பற்றுடைய இயக்கமும், ஓட்டோ ஓட்டுநர் சங்கமும் மும்முரமாக இதில் ஈடுபட்டிருந்தது. இவ் வஞ்சகச் செயலுக்குத் திருமலையில் இயங்குகின்ற மக்கள் விடுதலை முன்னணியும் பின்னணியில் துணைநிற்கின்றதென்பதற்கும் சான்றுகள் பலவுண்டு. திருகோணமலையில் ஜே.வி.பி. சிங்கள இன வெறியுடன் செயற்படுகின்றது. இவ் வெறியாட்டம் தலை விரித்து ஆட அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முதன்மைக் காரணம் என்று பேசப்படுகின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 47,735 வாக்குகளால் முதலிடத்தை திரு. சம்பந்தன் பெற, 34,773 வாக்குகளால் 2ஆம் இடத்தைத் துரைரட்ணசிங்கம் பெற்றார். 3ஆவது இடத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் றஜீப் 26, 948 வாக்குகளைப் பெற்றார். 4ஆவது இடத்தை 19, 983 வாக்குகளை மட்டுமே இந்த ஜே.வி.பி. உறுப்பினர் ஜயந்த விஜயசேகர பெற்றுள்ளார். திருமலையில் திட்டமிட்ட முறையில் அமைக்கப்படும் சிங்களக் குடியேற்றத்தின் விளைவுதான் இந்த ஆபத்தான நிலைக்குக் காரணம்.

திருமலையின் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரின் சிங்கள அரசின் ஆதரவு இவருக்கு உண்டு. அத்தோடு, அங்குள்ள அரச அதிகாரிகளின் ஆதரவும் திருமலையில் இயங்குகின்ற வெறிக்கும்பலின் ஆதரவும் இவருக்குண்டு.

## நகரின் மத்தியில் புத்தர்சிலை நோயல்ல அதற்கான அறிகுறி என்பதனை உணரவேண்டும்

### அனைத்துத் தரப்பினரதும் ஆதரவு அவருக்கு உண்டு

இவரின் வெறிப்போக்கினால் ஏற்படப்போகும் விளைவு பற்றி, நாடாளுமன்றத்தில் திரு.சம்பந்தன் அவர்கள் கண்ணீர் மட்டும் விடாத குறையாக மிக உருக்கமாகப் பேசினார். ஜயந்த விஜயசேகரவின் செய்கையினால் திருமலை வாழ் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை அடுக்கி அடுக்கிக் கூறியுள்ளார். செவிடன் காதில் சங்கூதியதற்கமையவும் கழுதைக்கு உபதேசம் செய்ததற்கமையவும் இவரின் பேச்சைக் கேட்டு செவிமடுக்க எந்தச் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரும் அங்கு இல்லை.

அத்தோடு, நிகழ்ச்சிகளை உற்றுக் கவனிக்கின்றபோது அனைத்துச் சிங்களக் கட்சிகளின் வெளிப்படையானதும் மறைமுகமானதுமான ஆதரவு இவருக்கு உண்டென்பதை நாம் உணரமுடிந்தது. தமிழர்களை வேரோடு சாய்ப்பதில் சிங்களக் கட்சிகளிடையே அடிப்படையில் எந்த வேறுபாடும் இல்லையென்பதற்கு இது எடுத்துக்காட்டு. நாடாளுமன்றத்தில் இயங்குகினற அனைத்துச் சிங்களக் கட்சிகளிற்கிடையே ஆயிரம் மோதல்கள் நிலவினும் தமிழர்களை அழித்தொழிப்பதில் அவர்கள் ஒன்றுபட்டுச் செயற்படுவர் என்பதை நாம் நன்கு உணர்ந்துள்ளோம்.

### பௌத்த வல்லாண்மையின் சின்னம்

ஏதோ சடுதியாகத்தான் திருமலையில் புத்தர் சிலை நிறுவப்பட்டதென்று நாம் கருதக் கூடாது. இது ஒரு திட்டமிட்ட சதி. திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் புத்தர் கோயில்கள் நிறுவப்பட்டது மட்டுமன்றி, எங்கெங்கெல்லாம் அரச மரங்கள் உண்டோ அவ்விடங்களில் எல்லாம் புத்தர் சிலைகள் முளைத்துள்ளன. அத்தோடு, அரச மரம் இல்லாத இடத்தில் அரச மரம் நடப்பட்டு பின்பு புத்தர் சிலைகள் அங்கு நிறுவப்படுகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமல்ல அம்பாறையிலுள்ள உல்லையிலும் பொத்துவிலிலும் மற்றும் பல பகுதிகளிலும் புத்தர் சிலைகள் சடுதியாக நிறுவப்பட்டிருப்பதை முஸ்லிம் தலைவர்கள், குறிப்பாக ரவூப் ஹக்கீம் புட்டுக் காட்டி நாடாளுமன்றத்தில் பல உரைகள் நிகழ்த்தியுள்ளார். அப்பொழுதெல்லாம் திரு.ஹக்கீம் அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் பதிலுரையாக நாம் கூறிய கருத்துகளை இங்கு நினைவு கூருதல் பொருத்தமுடையது.

**மா.க.ஈழவேந்தன்**

புத்தர் சிலை உல்லையிலும் பொத்துவிலிலும் மற்றும் இன்னோரன்ன இடங்களிலும் நிறுவப்பட்டிருப்பது உங்களுக்குத் தொல்லை தருவதை நாம் ஏற்கின்றோம். ஆனால், புத்தர் சிலை நிறுவப்பட்டதன் பின்னணியைப் பற்றி - உள்நோக்கைப் பற்றி நாம் அவருக்குத் தொடர்ந்து இடித்துரைத்தபோதும் எம் கூற்றைச் செவிமடுத்து அவரோ அல்லது ஏனைய முஸ்லிம் உறுப்பினரோ செயற்பட்டதாகத் தெரியவில்லை. அம்பாறையிலும் திருமலையிலும், அண்மையில் சடுதியாகப் புத்தர் சிலைகள் பல முளைப்பதற்கோ நிறுவப்படுவதற்கோ காரணம் சிங்கள மக்களுக்கோ சிங்களக் குருமாருக்கோ புத்தமதத்தின் மீது கொண்ட பற்றோ பக்தியோ அல்ல.

மாறாக, எங்கெல்லாம் சிங்களக் குடியேற்றம் இடம்பெற்றதோ அங்கெல்லாம் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டன. அதுபோல எங்கெல்லாம் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டதோ அங்கெல்லாம் சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெற்றன. எனவே, ஜனாப் ஹக்கீம் அவர்களுக்கும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினருக்கும் நான் கூறிய அறிவுரை புத்தர் சிலைகள் நிறுவப்படுவது நோயின் அறிகுறி. புத்தர் சிலை நிறுவப்படுவதுதான் நோயல்ல. வள்ளுவன் கூற்றை நினைவுகொண்டு 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்ற கூற்றிற்கிணங்க புத்தர் சிலை நிறுவப்படுவதற்குரிய மூல காரணம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள் என்பதைக் காட்டுவதேயாகும். மேலும், அவர்களைக குடியேற்றுவதற்காகப் புத்தர் சிலைகள் நிறுவப்படுகின்றன. புத்தர்சிலை நிறுவப்பபட்டதையடுத்து வரலாற்றைத் திருத்திக் கூறுகினற முறையில் எங்கெங்கெல்லாம் புத்தர் சிலைகள் உண்டோ அவையெல்லாம் சிங்களவரின் மரபுவழித் தாயகம் பாரம்பரிய பிரதேசம் எனச் சிங்களப் பேரினவாதம் ஓங்கி ஒலிக்க வழிவகுக்கின்றது.

எனவே, புத்தர் சிலைகள் நிறுவப்படுவதை எதிர்ப்பதுடன் நில்லாது, 1948 ஆம் ஆண்டு தொடக்கம் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு சிங்கள அரசும் அரச ஆதரவுடன் நடைபெற்ற சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்து நீங்கள் நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என ஜனாப் ஹக்கீம் உட்பட அனைத்து முஸ்லிம் தலைவர்களிடமும் நாம் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்தபோதும் எம் பொருள் பொதிந்த வேண்டுகோளுக்குச் செவிமடுப்போர் எவருமில்லை. மாறாக, உங்களுடைய தொலைநோக்குச் சிந்தனையை - உங்கள் பெருந்தன்மையை - எங்கள் மீது உங்களுக்கு இருக்கும் பற்றை - துணிவை - நாம் பாராட்டு

(13ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய -பாக். பிரச்சினைகள் மிகவிரைவில் தீர்வது உறுதி

## முஷாரப் -அத்வானி நம்பிக்கை



சந்திப்பின்போது...

இந்திய ஜம்மு காஷ்மீர் பிரச்சினை உட்பட இருநாடுகளுக்கிடையிலான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிச்சயமாகத் தீர்வு காணப்படும் என்ற இந்திய பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி மற்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் ஆகியோர் நம்பிக்கை தெரிவித்தனர்.

பாகிஸ்தானுக்கு ஒருவாரகால விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய பா.ஜ.க. தலைவரும் அந்நாட்டு ஜனாதிபதியும் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்திய பின்னரே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்திய - பாகிஸ்தான் இடையிலான சமாதான நடவடிக்கைகளை யாரும் தடுக்கமுடியாத நிலையை உருவாக்கவேண்டும். அந்தச் சமாதான முயற்சிகளின் இறுதிக் குறிக்கோள் நிறைவேறவேண்டும் - என்றும் அவர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைப் பற்றி அவர்கள் விவாதித்தனர்.

பிரதமர் மன்மோகன்சிங்குக்கும் எனக்கும் (முஷாரப்) இடையில் நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது. சமாதானப் பேச்சின் நோக்கம் தெளிவாக இருக்கிறது.

ஆனால், அதன் மூலம் எட்டப்படவுள்ள இறுதித்தீர்வு எப்படி இருக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. அந்த இலக்கை நோக்கி ஏராளமான தயாரிப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது. அப்போது பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்துப் பேச ஆர்வமாக இருக்கிறேன்.

இப்போது சமாதான நடவடிக்கைகள் இரு நாட்டு மக்களின் கைகளுக்குச் சென்றுவிட்டன - அவர் மேலும் கூறினார். காஷ்மீரில் வாழும் முஸ்லிம்கள், இந்துக்கள், பௌத்தர்கள் இடம்பெயர்ந்து வாழும் காஷ்மீர் பண்டிட்டுக்கள் ஆகிய அனைவருக்கும் ஏற்புடைய வகையில் காஷ்மீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் - என்று அத்வானி கூறினார்.

இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பின் பாகிஸ்தானுக்குச் சென்றிருக்கும் பா.ஜ.க. தலைவர் அத்வானி, பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை ராவல்பிண்டியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்தார். இருவரும் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தினர். (க-8)

## பள்ளிவாசலில் குண்டுவெடிப்பு: ஆப்கானிஸ்தானில் 14 பேர் பலி!

காபூல்.ஜூன் 2

ஆப்கானிஸ்தானின் தென்நகரான கந்தகார் பள்ளிவாசலில் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரேஷ்ட மத குரு ஒருவரைக் கிளர்ச்சியாளர்கள் சுட்டுக் கொன்றனர். அவருக்காக மக்கள் தொழுகை நடத்தச் சென்றவேளையே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தலிபான் இயக்கத் தலைவர் முல்லா ஓமருக்கு எதிராக உரையாற்றிவிட்டுத் திரும்பிய வேளை இரு துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளில் வந்து அவரைச் சுட்டுக்கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# பொலிவிய நாடாளுமன்றில் விவாதம் நடக்கவிடாது மக்கள் ஆர்ப்பாட்டம்

லண்டன்.ஜூன் 2

பொலிவிய நாடாளுமன்றத்தில் நேற்று நடக்கவிருந்த விவாதத்தை நடக்கவிடாது தடுத்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொலிவியாவின் வளமிக்க மாநிலங்களுக்கு அதிகளவு சுதந்திரம் வழங்குவதற்கான மசோதாவை விவாதத்திற்கு எடுக்கவிருந்ததை எதிர்த்து வளமற்ற மாநில மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்திருந்தனர். காங்கிரஸ் அங்கத்தவர்கள் பலரைக் காங்கிரஸ் கட்டடத்தை நெருங்கவிடாது தடுத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொலிவிய காங்கிரஸ் கட்டடமே அந்நாட்டு நாடாளுமன்றம் என்பது குறிப்பிடத்தக்கது.

தலைநகர் லாபாஸில் நேற்று இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் புதியதொரு சதிக்கான முதற்படி எனப் பொலிவிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கான மக்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டத்தைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்டடத்தைச் சுற்றிப்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் -

இதனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தினுள் நுழைவது தடைசெய்யப்பட்டது என்றும் - அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுரங்கத் தொழிலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள் ஆகியோர் இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பொலீஸார் கண்ணீர் புகைக் குண்டுகளையும், நீர்ப்பீரங்கிகளையும் பயன்படுத்தினர் எனச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

பொலிவியாவின் வளம்மிக்க கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களுக்கு அதிகளவு சுதந்திரம் வழங்கப்படுவதை பின்தங்கிய செழிப்பற்ற உயர் நிலங்களில் வசிக்கும் மக்கள் விரும்பவில்லை.

எனவேதான். இத்தகைய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என அவதானிகள் தெரிவித்தனர். (க-8)

# நேபாள மன்னரின் நடவடிக்கைகளுக்கு நடிகை மனிஷா முழுமையான ஆதரவு

காத்மண்டு, ஜூன் 02

நேபாளத்தில் கடந்த பெப்ரவரி மாதம் பிரதமர் ஆட்சியைக் கலைத்து நெருக்கடி நிலைமையை பிரகடனப் படுத்திய மன்னர் ஜியானேந்திராவின் செயலுக்குப் பிரபல நடிகை மனிஷா கொய்ராலா ஆதரவு தெரிவித்துள்ளார்.



நேபாள நாட்டவரான அவர் செய்தியாளர்களுக்குத் தெரிவித்ததாவது:

நம்முடைய மரியாதைக்கும், அன்பிற்கும் உரிய மன்னர் நேபாள நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார். இந்த நடவடிக்கையை வரவேற்பதை விட்டுவிட்டு அவரை குற்றஞ்சாட்டும் முயற்சியில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

மன்னர் சுயநலம் இல்லாமல் செயற்பட்டு வருகிறார். நமது நாட்டுக்கு ஏற்படவிருந்த அவமானத்தை அவர் தடுத்து நிறுத்தியிருக்கிறார். நாட்டில் அமைதி மற்றும் பாதுகாப்பு கட்டுப்பாட்டுக்குள் வந்தபிறகு ஜனநாயக முறையில் அரசை நிறுவ அவர் உத்தரவிடுவார்.

ஆனால், மக்கள் உரிமைக்காக பாடுபடுவதாக அரசியல் கட்சிகள் கூறிக்கொண்டு அதிகாரத்தை கைப்பற்றும் போட்டியில் ஈடுபட்டு வருகின்றன. உண்மையிலேயே மக்களுக்காகப் போராடுபவர்களாகயிருந்தால் மக்களுடன் இணைந்து மாவோயிஸ்ட் அமைப்பினருக்கு எதிராக பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று போராடட்டும்.

12 ஆண்டுகள் அரசியல் கட்சிகள் ஆட்சியிலிருந்து அமைதி மற்றும் பாதுகாப்பை மக்களுக்கு அளித்தார்களா? அவர்கள் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்திச் சொத்துக்களையும், கார்களையும் வாங்கிக் குவித்தனர் - என்று அவர் கூறினார்.

மும்பை எக்ஸ்பிரஸ், முதல்வன், பம்பாய், பாபா உட்படப் பல்வேறு தமிழ்த் திரைப்படங்களில் நடித்த மனிஷா கொய்ராலா, பல ஹிந்தித் திரைப்படங்களிலும் கதாநாயகியாக நடித்துள்ளார்.

இவரது தந்தை பிரகாஷ் கொய்ராலா நேபாள அரசியலில் மிக முக்கிய பிரமுகராகவும் காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் இருந்தார்.

இதேபோன்று அவரது தாத்தா கிரிஜா பிரசாத் கொய்ராலா நேபாளத்தில் நான்கு முறை பிரதமராக இருந்தவர். மனிஷாவின் மற்றுமொரு தாத்தா நேபாளத்தில் முதலாவது பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவ்வாறு அரசியலில் நெருங்கிய தொடர்புள்ள மனிஷா கொய்ராலாவுக்கு அரசியல் ஆசைவந்தவிட்டதோ எனக் கேள்வி யெழுப்புகின்றனர் செய்தியாளர்கள். (க-8)

# சீனப் பொலீஸ் காவலில் சிங்கப்பூர் பத்திரிகையாளர்

ஹொங்ஹொங்,ஜூன்2

சிங்கப்பூரில் முன்னணிப் பத்திரிகையான 'ஸ்ட்ரெயிட் ரைம்ஸின்' பத்திரிகையாளர் சிங்சியாங்கை சீனப் பொலீஸார் கடந்த ஒரு மாதமாகக் கைதுசெய்து விசாரித்து வருகின்றனர் என்று அவரது மனைவி ஹொங்கொங் பத்திரிகையாளர் சங்கத்தில் தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்துக்கு முன் சிங்சியாங் சீனா சென்றார். அப்போது அவரை சீனப் பொலீஸார் காவலில் வைத்து விசாரித்து வருகின்றனர். அவரிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை என்று சிங்சியாங்கின் மனைவி பத்திரிகையாளர் சங்கத்தில் புகார்செய்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டாலும்கூட அவர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர் எனப் பொலீஸார் கூறுவது வழக்கமானதுதான். ஆனாலும், சீனப் பொலீஸாருக்கு ஒரு வழக்கு விசாரணையில் சிங்சியாங் உதவி செய்து வருகிறார் என 'ஸ்ட்ரெயிட் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேகாரணத்தைச் சிங்கப்பூரிலுள்ள சீனத் தூதரகமும் தெரிவித்துள்ளது. ஆனால், அந்த வழக்கு விசாரணை சிங்சியாங் பணிபுரியும் பத்திரிகை சம்பந்தப்பட்டது அல்ல என்றும் தூதரகம் தெளிவுபடுத்தியுள்ளது.

'சிங்சியாங்' பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து கட்டுரைகள், செய்திகளை எழுதக் கூடியவர். பல தகவல்களை விரல்நுனியில் அறிந்து வைத்திருப்பவர். அவர் பணியில் சேர்ந்தது முதல் சீனா குறித்து விமர்சித்துச் செய்திகள் எழுதியதில்லை.

ஒரு பத்திரிகையாளராக அவர் தமது கடமையைச் செவ்வனே செய்து வந்தார். ஹொங்கொங்கிலுள்ள சிங்சியாங்கின் மனைவியுடன் அடிக்கடி தொடர்புகொண்டு அவருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்துவருகிறோம் என்று 'ஸ்ட்ரெயிட் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (க-8)

# இந்திய பீகார் மாநிலத்தில் 4 மாதங்களின் பின் தேர்தல்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

புதுடில்லி,ஜூன்2

இந்திய பீகார் மாநிலத்தில் நான்கு மாதங்களுக்குப் பின்னரே சட்டசபைத் தேர்தல் நடத்த முடியும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அண்மையில் தேர்தல் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட தூதுக்குழு அரசியல் கட்சித் தலைவர்கள், அரச உயரதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சு நடத்திய பின்னரே தேர்தல் ஆணைக்குழு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்ததாவது:-

ஒரே நாளில் தேர்தல் நடத்துவதா பல கட்டங்களில் தேர்தல் நடத்துவதா தேர்தலின்போது பாதுகாப்புக்குத் தேவையான படைகள் எவ்வளவு என்பன குறித்து தகவல்களை எமது தூதுக்குழு ஆராய்ந்துள்ளது.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் டில்லியில் தேர்தல் ஆணைக்குழு ஆலோசனை நடத்தியது. ஜூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் தேர்தலை நடத்துவது இயலாத காரியம் என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் - நவம்பர் மாதங்களிலேயே தேர்தல் நடத்தமுடியும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

பீகாரில் சமீபத்தில் நடந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதையடுத்து கூட்டணி அரசு அமைக்க கட்சிகள் பலவாறு முயன்றனர்.

29 எம்.எல்.ஏக்களைக் கொண்ட மத்திய அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வானின் லோக் ஜனசக்தி, ஐக்கிய ஜனதா தள கூட்டணியை ஆதரிக்க நிபந்தனை விதித்தது.

அதேபோல, காங்கிரஸை ஆதரிக்கவும் சில கோரிக்கைகளை முன்வைத்தது. இந்த நிலையில் அரசு அமையாமல் தேக்கநிலை தொடர்ந்து இருந்தது.

இதற்கிடையில், பாஸ்வான் கட்சியின் எம்.எல்.ஏக்கள் சிலரை ஐக்கிய ஜனதா தளம் கடத்தியது. எம்.எல்.ஏக்கள் விலை பேசப்படுவதாக புகார் எழுந்தது. இச்சூழ்நிலையில் சட்டப்பேரவையை ஆளுநர் பூட்டாசிங் கலைத்தார். இதையடுத்து அங்கு மீண்டும் தேர்தல் நடத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-8)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 077 3151647

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

80% OFF

Batch IV-03-06-2005
Batch V -04-06-2005
Batch VI-11-06-2005

15-06-2005க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.


# சதாம் மீதான வழக்கு இன்னும் இருமாதங்களில்

## ஈராக் ஜனாதிபதி அறிவிப்பு

பக்தாக்,ஜூன்2

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீதான வழக்கு எதிர்வரும் இரு மாதங்களுக்குள் ஆரம்பமாகும் என அந்நாட்டு ஜனாதிபதி ஜலால் தலபானி அமெரிக்க தொலைக் காட்சியொன்றில் தெரிவித்தார்.

சதாம் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் அவருக்கு மரணதண்டனை நிறைவேற்ற ஈராக் மக்கள் பெரும் ஆவலுடன் உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்கா தலைமையில் பன்நாட்டுப் படைகள் சதாம் ஹுசைனின் ஆட்சியைக் கவிழ்த்தது. ஆட்சி கவிழ்க்கப்பட்டு 9மாதங்களின் பின்னர் 2003ஆம் ஆண்டு சதாம் ஹுசைன் ஆட்சி கவிழ்க்கப்பட்டு கைதுசெய்யப்பட்டார்.

தற்போது ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமெரிக்கப் படையினரால் நடத்தப்படும் அதி உயர்மட்ட பாதுகாப்பு முகாமொன்றில் சதாம் ஹுசைன் சிறைவைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## பயன்தராப் போக்கு

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்வு காண்பதற்கான எத்தனங்கள் தொடர்பான விவகாரம் இப்போது தீர்க்கமான ஒரு கட்டத்தை அடைந்திருக்கின்றது.

சுமார் இரண்டு தசாப்த காலக் கொடூரப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட மூன்றரை ஆண்டுகால யுத்த நிறுத்தம், அமைதி முயற்சிகளில் பலன் ஏதும் தராமல் அவமே கழிந்துவிட்டது. இனிமேலும் பொறுமை பேணுவது - தமிழர்களை ஏமாற்றும் அரசின் போக்கிரித்தனத்துக்குப் பொறுத்திருப்பது - தமிழர்களை முட்டாள்களாக்கும் வேலை என்ற இறுதிக் கட்டத்துக்கும் தமிழர்கள் வந்து விட்டார்கள்.

இடைக்காலத் தீர்வுமின்றி, இயல்பு வாழ்வுமின்றி, பேரலைப் பேரவல மீட்சிக்கான பொதுக்கட்டமைப்புமின்றி, அரசியல் அந்தகாரத்துக்குள் தமிழர்களின் எதிர்காலம் இருள் மண்டிப்போய்க் கிடக்கின்றது.

அமைதித் தீர்வுக்கான முயற்சிகளில் பயன் ஏதும் தராத இந்த யுத்த ஓய்வினால் தமிழருக்கு நன்மை ஏதும் இல்லை. இவ்வாறு இலக்கில்லாத ஒரு தடத்தில், மிக முக்கியமான காலகட்டத்தில், பெறுமதியான காலத்தை வெறுமனே கடத்துவது, போராட்ட இக்கட்டில் இருக்கும் தமிழர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கி விடலாம்.

உரிமைகள் மறுக்கப்பட்டு, கௌரவமான - நிம்மதியான - சுதந்திரமான - வாழ்வுரிமை பறிக்கப்பட்டுச் சொந்தத் தாயகத்தில் மூன்றாம் தரப் பிரஜைகளாக்கப்பட்டதால்தான் தமிழர்கள் தமது உரிமைக்கான போராட்டத்தை ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் அஹிம்சை வழியில் - சாத்வீக நெறியில் - அமைதி முறையில் - மேற்கொள்ளப்பட்ட உரிமைக்கான போராட்டம் பௌத்த சிங்களப் பேரினவாதத்தால் ஆயுத முனையில் அடக்கப்பட்டதை அடுத்து, பின்னர் அதுவும் அதே ஆயுத வழிக்குத் திரும்பியது. இப்போது இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள், இரண்டு கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள், இரண்டு அதிகார மையங்கள் என்பன உள்ளன என்பதைப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் இலங்கை அரசே உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் விஞ்சி நிற்கின்றது. தமிழர்களின் காப்பரணான விடுதலைப் புலிகளின் இராணுவக் கட்டமைப்பு ஒரு தேசத்தின் பாதுகாப்புக் கட்டமைப்பாகப் போற்றப்படும் அளவுக்கு மரபுவழி இராணுவ அமைப்பாக உயர்ந்து நிற்கின்றது.

இந்த நிலையில்தான், ஈழத் தமிழர்கள் தமது ஆயுத வழிப் போராட்டத்தை இடைநிறுத்தி, சமாதான முறையில் அமைதித் தீர்வைக் காண்பதற்கான வாய்ப்பை அளிப்பதற்கான ஏற்பாடுகளில் இறங்கவேண்டியவர்களானார்கள்.

அதன் பின்னர் நடந்தது என்ன?

ஈழத் தமிழர்களுக்கு அவர்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய ஓர் அமைதித் தீர்வைவழங்குவதற்கு விரும்பாத சிங்களப் பேரினவாதம், அமைதி முயற்சிகளை முடக்கிவிட்டு வேடிக்கை பார்க்கிறது. மறுபுறத்தில், தனது படைவலிமையைப் பெருக்கித் தன்னைப் பலப்படுத்துகின்றது; தமிழர் தரப்பை முடக்க முயல்கின்றது.

எந்த அமைதித் தீர்வை எட்டுவதற்காக யுத்த நிறுத்தம் செய்யப்பட்டதோ அந்த அமைதித் தீர்வுக்கான முயற்சிகளே முற்றாக முட்டுக்கட்டை போட்டுத் தடுக்கப்பட்ட பின்னர், அந்த யுத்த நிறுத்தமும் அவசியம் தானா என்ற கேள்வி இயல்பாகவே பிறக்கின்றது.

சரி, இப்போது தேக்கமடைந்துவிட்ட அமைதி முயற்சிகள் என்றோ ஒரு நாள் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கையில் - நப்பாசையில் - நல்லவாவில் - காத்திருக்கலாம் என்றால், யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தித் தன்னைப் பலப்படுத்தவும், இராணுவ சமநிலையைக் குழப்பி புலிகளைப் பலவீனப்படுத்தவும் அல்லவா சிங்களதேசம் முனைகிறது.

இப்படி அமைதித் தீர்வுமின்றி, ஆதாரமான பலத்தையும் கோட்டைவிட்டு, தொடர்ந்தும் பௌத்த - சிங்களப் பேரினவாத ஆதிக்கத்தின் கீழ் தமிழர்கள் முடங்கிக் கிடப்பதை உறுதி செய்யும் நிலையையே - புதிய பயன் எதையும் தராத இந்த யுத்த நிறுத்தம் ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்வாறு நம்மைப் பலவீனப்படுத்தும் இந்த யுத்த நிறுத்தம் தேவைதானா? என்ற இயல்பான கேள்வி தமிழர் தம்மனதை இப்போது நெருடத் தொடங்கியிருக்கின்றது.

அமைதி வழியில் நியாயத் தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்கு வழங்கும் எண்ணம் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் கைப்பொம்மையாகியிருக்கும் தென்னிலங்கை அரசுக்கு இல்லை என்பது துலாம்பரமாகி - நிதர்சனமாகி - வருகின்ற இந்த வேளையில் யுத்தநிறுத்தம் குறித்து இத்தகைய கேள்வி தமிழர் தம் மனதில் பிறப்பதை யாரும் குறை சொல்லமுடியாது.

சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளையும், சர்வதேச உதவும் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் வெளிநாட்டுத் தூதர்களையும் சந்தித்துக் கலந்துரையாடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமது ராஜ்ஜிய ரீதியான இந்தச் சந்திப்புகளின் போது அமைதி முயற்சிகள், யுத்த நிறுத்தத்தின் பெறுபேறு ஆகியவை தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தி, சந்தேகம், மனநெருடல் போன்றவற்றை அவர்களுக்கு விளக்கி, சர்வதேச சமூகத்துக்கு உண்மை நிலைப்பாட்டைப் புரியவைக்க முயலுவார் என எதிர்பார்க்கலாம்.

யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து பேண வலியுறுத்தி வரும் சர்வதேச சமூகம் தமிழரின் இந்த இக்கட்டு நிலைமையைப் புரிந்துகொள்ள முன்வரவேண்டும்.

## பிரதமர் செயலக முகாமைத்துவத்தின் கீழ் வடக்கில் 50 தொழில்நுட்ப நிலையங்கள்

கொழும்பு.ஜூன்2

வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அரச பாதுகாப்பற்ற பிரதேசங்கள் உள்ளடங்கலாக அறிவியல் தொழில்நுட்ப நிலையங்களை அமைப்பதற்குப் பிரதமரின் செயலகம் தீர்மானித்துள்ளது.

வடக்கில் நிறுவப்படவுள்ள 50 அறிவியல் தொழில்நுட்ப நிலையங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டமொன்று அண்மையில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. பிரதமர் செயலக உயர் அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

பிரதமர் செயலக முகாமைத்துவத்தின் கீழ் நாடுமுழுவதும் 10 ஆயிரம் அறிவியல் தொழில்நுட்ப நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. இதன் ஆரம்ப கட்டமாக முதலில் வடக்கில் 50 தொழில்நுட்ப நிலையங்களை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களிலும் இந்தத் தொழில்நுட்ப நிலையங்கள் நிறுவப்படவுள்ளதால் அங்கு வாழும் பொதுமக்கள் சர்வதேச இணையத்தள வலைப்பின்னல் வசதிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முதலில் நாடுபூராகவும் 400 நிலையங்கள் நிறுவப்படும் என்றும் பின்னர் படிப்படியாக அது விஸ்தரிக்கப்படும் எனவும் பிரதமர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (8-206)

## திக்கம் வடிசாலை ஊழியர்கள் தொடர்ந்தும் போராட்டம்

கரவெட்டி.ஜூன்2

திக்கம் வடிசாலையின் ஊழியர்கள் சம்பள உயர்வுகோரி மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்தும் இடம்பெறுகின்றது.

அரச வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக 2ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு தமக்கும் வழங்கப்படவேண்டும் என்று கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடிசாலை வாசலில் நேற்று முன்தினம் ஒன்று கூடிய ஊழியர்கள் வடிசாலைக்கு உள்ளேயும், வெளியேயும் எவரையும் செல்லவிடாது மறியலில் ஈடுபட்டனர். தமது கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

இதுவிடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பிலிருந்து இதுவரை எவரும் உத்தியோகபூர்வமாக தம்மைச் சந்தித்துப் பேசவில்லை என்று ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-70)

## கரம்பைக்குறிச்சி குளத்திலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

தென்மராட்சி.ஜூன் 2

வரணி கரம்பைக் குறிச்சி மேற்கு முத்தெட்டுப் பகுதி குளமொன்றில் ஒரு நாள் சிசுவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து கொடிகாமம் பொலீஸார் இந்த ஆண் சிசுவின் சடலத்தை மீட்டெடுத்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து பதில் நீதிவான் சு.கந்தசாமி சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

மேலதிக விசாரணை நடத்தி சிசுவைக் குளத்தில் வீசியவரைக் கண்டுபிடித்துக் கைதுசெய்யுமாறு நீதிவான் பொலீஸாரைப் பணித்தார். (த-117)



மறைந்த ஊடகவியலாளரான நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் ஓராண்டு நினைவு தின நிகழ்வு நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில், யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா, வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் ஆகியோர் சுடரேற்றி அஞ்சலி செலுத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

## தமிழ் பாடத்துறைக்கு உதவிப் பணிப்பாளர் நியமனம்

அச்சுவேலி.ஜூன்2

யாழ்.கல்வி வலயத்தின் தமிழ்பாடத்துறை உதவிப்பணிப்பாளராக திருமதி மீரா அருள்நேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும் தமிழ் பாடத்துறை உதவிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய எம்.எஸ்.தயாளன் இந்து கலாசார அமைச்சிற்கு இடமாறிச் சென்றதையடுத்து திருமதி மீரா அருள்நேசன் உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (8-11)

## அச்சுவேலி வைத்தியசாலைக்கு புதிய இரண்டு மாடிக் கட்டடம்

அச்சுவேலி.ஜூன்2

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு ஒரு கோடி 50 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் நிர்மானிக்கப்படுகின்றது.

பொருத்தமான கட்டட வசதிகள் இன்றிச் செயற்பட்டுவந்த அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு இரண்டு மாடிகளைக் கொண்டதாக இப்புதிய கட்டடம் அமைக்கப்படுகின்றது.

நிர்வாகப் பிரிவு, ஆய்வுகூடம், சிறுசத் திரசிகிச்சை பிரிவு உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரிவுகளைக் கொண்டதாக இக் கட்டடம் நிர்மானிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு மூன்று கட்டங்களாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 60 லட்சம் ரூபாவும் இரண்டாம் கட்டமாக 30 லட்சம் ரூபாவும் மூன்றாம் கட்டமாக 60 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

முதலாம், இரண்டாம் கட்ட வேலைத் திட்டங்கள் பூர்த்தியடையும் நிலையில் இருப்பதால் மூன்றாம் கட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கட்டட வேலைகள் இவ்வாண்டு இறுதிக்குள் முழுமையாக முடிவடைந்து கட்டடம் வைத்தியசாலையின் பயன்பாட்டிற்கு கையாளப்படவுள்ள்தாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-11)

## வடக்கு-கிழக்கு சுகாதார ஊழியர்கள் 7ஆம், 8ஆம் திகதிகளில் வேலைநிறுத்தம்

கொழும்பு.ஜூன்2

வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நான்கு தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கும் சுகாதார சேவைகளைச் சேர்ந்த ஊழியர்கள் எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளதாக ஐக்கிய இலங்கை சுகாதார ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒருங்கிணைந்த சேவையில் உள்ளீர்க்கப்பட்டுள்ள எழுதுவினைஞர்கள், தொலைபேசி இயக்குநர்கள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர்கள் ஆகியோரே இவ்வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர் எனவும், மேற்படி பிரிவுகளில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் இதுவரையில் தீர்க்கப்படாதிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையாகவே இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் சுகாதார சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது. (8-206)

### நாளை

*வைகாசி 20*
*வெள்ளிக்கிழமை*
*03.06.2005*
*திதி : துவாதசி*
*பின்னிரவு 02.57 வரை*
*நட்சத்திரம் : அச்சுவினி*
*பின்னிரவு 02.49 வரை*
*சுபநேரம் : 05.52 - 07.22*
*ராகுகாலம்: 10.22 - 11.52*
*(யாவும் பழைய நேரப்படி)*

## உலக வங்கியின் உதவியுடன் வலி.வடக்கில் 65 வீடுகள்

வலி.தெற்கு. ஜூன் 2

உலகவங்கி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் 65 வீடுகள் அமைப்பதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளீதரன் தெரிவித்தார்.

உலகவங்கி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் புதியவீடு ஒன்றை அமைப்பதற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வீட்டின் ஒரு பகுதியைக் கட்டுவதற்கு அல்லது வீட்டைத் திருத்துவதற்கு ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

65 வீடுகளை அமைப்பதற்கு இப்பிரிவிலுள்ள ஜே/221, ஜே/222, ஜே/227, ஜே/244 ஆகிய நான்கு கிராம சேவையாளர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் வீடுகள் தெரிவும் பயனாளிகள் தெரிவும் விரைவில் இடம்பெறும் எனவும் பிரதேச செயலர் கூறினார்.

இத்தெரிவுகளில் கிராம சேவை அலுவலகர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அப்பகுதி கிராமியக் குழுவின் தலைவர், சமூகமட்ட நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் ஆகியோர் ஈடுபடுத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், செவன மானியம் இப்பகுதியில் உள்ள மூன்று பேருக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக வறுமைக்கோட்டின் கீழ்வாழும் அதிக அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் வலிகாமம் வடக்குப் பிரிவைச் சேர்ந்த வீடமைப்பு உத்தியோகத்தர் தெரிவித்தார். (8-152)

### உதயவாக்கு

ஒருவர் சொல்வதையெல்லாம் ஏற்றுக் கொள்வதைப் போல் சிரிப்பவனை நம்பக்கூடாது. ஏனெனில் சிரித்துக்கொண்டே அவருக்கு எதிரியாக மாறிவிடலாம்.
ஷேக்ஸ்பியர்

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### புறோயிலர் தேவை

புறோயிலர் இறைச்சிக்கோழி தேவை. கூடுதல் விலை தரப்படும். தொடர்பு: சிவா இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (36048)

### தவறிவிட்டது

டாக்டர் செல்வி கமலநாயகி வைரமுத்து என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 665351700V), தொழில் அடையாள அட்டை, நூலக அங்கத்துவ அட்டை 4 ஆகியன யாழ்ப்பாணத்துக்கும் கந்தர்மடத்துக்கும் இடையில் 30.05.2005 அன்று கறுப்பு நிறப் பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'கலைச்சோலை' இல.20, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்துதவவும் T.P.: 077 6163429. (36062)

### வீடு வாடகைக்கு

சுண்டிக்குளியில் பிரபல பாடசாலைகள், கச்சேரி முதலியவற்றிற்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: T.P.:222 7801. (36074)

### சங்கீதம்

செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம் (ஆசிரிய ஆலோசகர்) எழுதிய தரம் 10, 11 கர்நாடக சங்கீதப் புத்தகங்களும் G.C.E. O/L ஒலி நாடாவும் வெளிவந்துள்ளன. இவை சங்கீதசபைப் பரீட்சைக்கும் பொருத்தமானவை. பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். (36075)

### அபூர்வ ஜோதிடம்

தீராத கொடிய வியாதிகளை குணமாக்கும் மருந்தியல் காண்டமுறையில் அதிர்ஷ்டபலன் அறிதல். 05.06.2005இல் இருந்து தினமும் 8.30 - 1 p.m. தொடர்பு: உயரப்புல பிள்ளையார் கோயிலடி, ஆனைக்கோட்டை. (36081)


# தம்மை நாட்டுப்பற்றாளர் எனக் கூறிக்கொள்பவர்கள் அநுராதபுரத்துக்கு அப்பால் செல்லத் துணிவற்றவர்கள்!



## இப்படிச் சாடுகின்றார் நிதி அமைச்சர்

கொழும்பு,ஜூன்2

நாட்டுப்பற்றாளர் என்று வெறும் வாய்ச்சவடால் விடுபவர்கள் அநுராதபுரத்துக்கு அப்பால் செல்லத்துணிவற்றவர்கள். இப்படியே இவர்கள செய்து கொண்டிருப்பார்களேயானால் இந்த நாட்டை யாராலும் காப்பாற்றமுடியாது. அரசியல் செய்வதை விட்டுவிட்டு பின்கதவால் நாம் நடையைக் கட்டவேண்டிவரும். இப்படி பொருமுகிறார் நிதியமைச்சர் சரத் அமுனுகம.

கடந்த ஞாயிறன்று கண்டி அம்பிட்டியவில் தொழில்நுட்ப மத்திய நிலையமொன்றை திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை என்ற நாடு ஆசியாவின் நோயாளியாக இருக்கின்றது. மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும்போது நாம் முடவர்களாகவே இருக்கின்றோம். எமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வழிகள் எத்தனையோ உண்டு. எம்மை முன்னேற்றிக் கொள்வதற்கு உரிய அடித் தளத்தை இட்டுள்ளோம். அதை நடைமுறைப்படுத்த எம்மில ஒருசாரார் இடம் தருகிறார்கள் இல்லை.

எமது நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் மேற்கொள்ளப்படும் எந்த அபிவிருத்தித் திட்டமும் செயலுருப்பெறாது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்ற தாக்குதலால் ஒருசில மணித்தியாலத்தில் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தோம். இதை ஒரு உதாரணத்துக்காகக் கூறுறேன்.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தாமல் நாம் எது பற்றியும் சிந்திக்கமுடியாது.

யுத்த அபாயம் இருக்கும்வரை நாட்டில் முதலீடு செய்ய முடியாது. தொழில் வாய்ப்பைப் பெறமுடியாது. பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியாது. நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லமுடியாது.

இன்று ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்புப் பற்றி பல்வேறு கருத்துகளை கூறிவருகின்றனர். நடைமுறைக்கு ஒவ்வாத இவர்களின் கருத்துகளை நம் ஏற்றுக்கொள்ள முடியாது. நாடும் நாட்டு மக்களுமே எமக்கு முக்கியம்.

நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் மக்கள எம்மை ஆட்சியிலிருந்து விரட்டியடிப்பார்கள். எந்த நாட்டிலும் இல்லாத வகையில் மின்சாரம் இங்கு வீணடிக்கப்படுகிறது. மண்ணெண்ணெய் விலை உலகச் சந்தையில் அதிகரிக்கும்போது மின்சாரக்கட்டணமும் தானாகவே அதிகரிக்கும். இதற்கு மாற்று வழிகளைக் கையாளவேண்டும் - என்றார் அவர்.

இந்த நிகழ்வில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ வித்தாரண உட்படப் பல அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (க-3)

# நல்லூரிலே இன்று கற்பூரத் திருவிழா



தொல்லை வினை தீர்க்கின்ற நல்லைக் கந்தனுக்கு இன்று வியாழக்கிழமை கற்பூரத் திருவிழா. கலியுகவரதனாகிய கந்தப்பெருமானுக்கு மணவாளக்கோலம் நிகழும் இன்றைய நன்னாளில் ஷண்முகப்பெருமான் ஸ்ரீவள்ளி தேவசேனா பதியாகக் காட்சி தந்து அருள்புரிய நல்லூரில் வீதியுலா வருகின்றான்.

அடியார்கள் புடைசூழ, அழகிய பூந்தண்டிகையிலே சிங்கார வேலனாக, அகங்காரத்தை ஒடுக்கி, ஓங்காரத்தை நிலைநிறுத்தி, கன்னியரிருவர் களிப்புடன் அருகிருக்க, ஆறுமுகப் பெருமான் அழகு வீதியில் அருட்காட்சி தருகின்ற பொலிவு காணக் கண்கோடி வேண்டும்.

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கின்ற முருகன் நல்லை நகரிலே கோயில் கொண்டெழுந்தருளித் தம்மை வழிபடும் அடியார்களின் துயர் போக்கி அருளை அள்ளிச் சொரிகின்றான்.

இன்று நடைபெறும் கற்பூரத் திருவிழா அருளொளி கலந்த பெருவிழாவாகும். வீதியெங்கும் கற்பூரச் சட்டியும் கூட்டுப்பிரார்த்தனையும் நிகழ்த்த, பக்தர்கள் குழாம் பக்தியுடன் பாடிப் பரவிய வண்ணம் வீதியுலாவரும்போது மனதுக்கு உகந்த தெய்வீகச் சூழ்நிலை தென்படும்.

எல்லோருடைய முகத்திலும் அருளொளி. ஆறுமுகப்பெருமானின் தரிசனம் கண்டுவிட்டோம் என்ற திருப்தியான மனநிலை. வருகின்ற வல்வினையும் வந்துசேரும் தொல்வினையும் சூரியனைக்கண்ட பனி போல அகன்று ஓடி ஒளித்துவிடும். நான் என்ற அகந்தையும் எனது என்ற மமதையும் நீங்கப் பெற்றவர்களாக "முருகனே கதி" என்று எல்லாவற்றையும் அவனிடமே ஒப்படைத்துவிட்டு அடியார் கூட்டம் அலைமோதி வருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சி.

இன்று நல்லூரில் நடக்கும் கற்பூரத் திருவிழாவைக் கண்டுகளித்து ஆனந்தமயமான அருட்காட்சியை உள்ளத்திலே பதித்து அகந்தைக் கிழங்கை அடியோடு நீக்கவேண்டும். உருகாத மனத்தையும் உருக வைக்கும் நல்லைக் கந்தனை வழிபட்டு சகல ஐசுவரியங்களையும் அடைந்து எல்லா நலன்களும் பெற்று இச்சிவ பூமியில் சுகவாழ்வு வாழ ஆறுமுகப்பெருமானின் அருள்வேண்டித் தொழுவோமாக.

சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்.


## முக்கிய அறிவித்தல்

### தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

### வாக்காளர் இடாப்பு முடிவுறுத்தல்

தென்மராட்சி மேற்கு பல.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் வாக்காளர் இடாப்பு 31-05-2005 உடன் முடிவுறுத்தப்பட்டு கிளை இலக்கம் 01, 02, 03, 04, 05, 06, 10 ஆகிய கிளை நிலையங்களில் அங்கத்தவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. கிளை இலக்கம் 07, 08, 09, 11 ஆகிய கிளை நிலையங்களின் வாக்காளர் இடாப்பு சங்கத் தலைமையக விளம்பரப் பலகையில் தொங்கவிடப்பட்டுள்ளது. ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் 10.06.2005ஆம் திகதிக்கு முன்பதாக எழுத்து மூலம் சங்கச் செயலாளருக்கு அறியத்தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சி.சுப்பிரமணியம்,
தலைவர்

(சி-43155) (21-15-17-24)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off stanly Rd)
Tele:- 0777222422 , 077 3151647

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
QUICK BOOKS PRO + ACCPAC + MYOB
ஆரம்பம்:-04-06-2005/05-06-2005
Batch I :-10.30-12.30
Batch II :-01.30-3.00
80% OFF
காலம்:- 4மாதம்


# நெடுந்தீவு மேற்கில் மின் விநியோகம் விஸ்தரிப்பு

நல்லூர்,ஜூன்2

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின் விநியோக விஸ்தரிப்பு நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பான நிலைமைகளைப் பார்வையிட நேற்றையதினம் மின்சார சபையைச் சேர்ந்த அதிகாரிகள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்துள்ளனர்.

மேற்குப் பகுதிக்கான மின்சார விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு மின் கம்பங்களை நடுவதற்கென குழிகள் தோண்டப்பட்டு சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் மின்கம்பங்களை நடும் வேலைகள் எதுவும் இடம்பெறாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-111)

# இராணுவ உயரதிகாரி ஒருவரையே பாதுகாக்க முடியாத நிலையில் அரசு!

## ஜீ.எல்.பீரிஸ் விமர்சனம்

கொழும்பு,ஜூன்2

"நாட்டில் சட்டமும், ஒழுங்கும் சீகுலைந்து விட்டன. இராணுவ உயரதிகாரி ஒருவரைப் பாதுகாக்க முடியாத நிலையிலேயே இந்த அரசு இருக்கின்றது. எம்மீது அன்று கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்கள் இன்று வாய்மூடி மௌனிகளாகிவிட்டனர்" - இப்படி அரசைச் சாடுகிறார் ஐ.தே.க.பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

இராணுவப் புலனாய்வுத்துறையின் சிரேஷ்ட அதிகாரியான லெப்டினன்ட் கேணல் முத்தலிப் இராணுவ முகாம் ஒன்றுக்கு அருகில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் எமது அரசைக் கலைப்பதற்கு முன்னர் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது எனக் கூறப்பட்டது. ஆனால், இந்த அரசு ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் நடந்திருப்பது என்ன? என்றும் கேள்வி எழுப்பினார் பீரிஸ்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நாட்டில் இன்று சட்டம், ஒழுங்கு சீகுலைந்து விட்டன. ஒவ்வொருநாளும் பலர் கொலை செயயப்படுகின்றனர். கிழக்கில் நிலைமை படுமோசமாகியுள்ளது. கொழும்பிலும் இந்தநிலை தொடர்கின்றது.

பாதுகாப்புக் காரணங்களைக்கூறி எமது ஆட்சியைக் கலைத்தவர்கள் இன்று நடக்கும் கொலைகளுக்கு என்ன பதில் கூறப்போகிறார்கள்?

நாட்டில் ஜனநாயக விரோதப்போக்கு அதிகரித்துவிட்டன. மேல்மாகாணசபையில் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டவுடன் சபையின் நடவடிக்கைகளை இரண்டு வாரங்களுக்கு ஒத்தி வைத்தார்கள். இது முற்றிலும் ஜனநாயக விரோதச் செயலாகும். அந்த விவகாரத்தில் முதலமைச்சர் உடனடியாகத் தனது பதவியை ராஜினாமாச் செய்திருக்க வேண்டும். அதுவே நியாயமானது; ஜனநாயகமானது. ஆனால், இங்கு நடப்பது என்ன என்று எல்லோருக்கும் தெரியும் - என்றார் அவர். (க-3)


### பணியாளர்கள் தேவை

எமது பாமுக்கு
- காசாளர் (பெண்)
- வேலையாள்கள் (ஆண்கள்)

ஆகியோர் உடனே தேவை. நேரில் வரவும்.

வீனஸ் பாம்
79/5A பலாலி வீதி, திருநெல்வேலி.
0712 513721
0777 252978
(36056) (21-15-45)

### வீடு விற்பனைக்கு

நாமகள் பாடசாலை பின்புறம் புகையிரத நிலைய வீதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: K.றூபன்
கஸ்தூரி களஞ்சியம்,
திருநெல்வேலி.
(36010) (21-15-45)

ENJOY THE BENEFIT OF BOTH THE WORLDS
கனடாவில் கற்க வேலைசெய்ய அரியவாய்ப்பு
INDIA — Vinayaka Missions Chennai
Centennial College Canada — CANADA
VINAYAKA CENTENNIAL CANADIAN BUSINESS SCHOOL (VCBS)
#1, Whites Road, Royapettah, Chennai-600 014, Tamilnadu, India

THREE YEARS TWINNING PROGRAMS FOR STUDENTS 12th STD COMPLETED / GRADUATES.

I st Year in INDIA ,(Hostel Provided) IInd & IIIrd in CANADA or Ist & IInd year in INDIA, IIIrd year in CANADA or 3 Years in INDIA. Tution Fees: in India Rs:1,60,000/- in Canada $10,250 Canadian Dollars per Year



Average Earning for the co-op option during your two years of study in Canada for the following programs (Equivalent to BBA Degree in India)

| | Advanced Diploma in International Business | Advanced Diploma in Business Operations Management | Advanced Diploma in Human Resources Management |
|---|---|---|---|
| 1st work Term (after III sem for 3-4 months) | $377 Canadian Dollars per week | $ 477 Canadian Dollars per week | $ 477 Canadian Dollars per week |
| 2nd work Term (after IV sem for 3-4 month) | $ 317 Canadian Dollars per week | $417 Canadian Dollars per week | $ 417 Canadian Dollars per week |
| 3rd work Term (after V sem for 3-4 months) | $ 472 Canadian Dollars per week | $ 531 Canadian Dollars per week | $ 531 Canadian Dollars per week |

NN CONSULT
1st Floor, No 60, Peterson Lane,
Colombo - 06, T.phone : 5558833
Telefax: 2365093/5558844
Email : nnconsult@sltnet.lk

Further Details Contact: Admission Cell
Vinayaka Missions (Pandalai Hospital), #160, Poonamailee High Road, Kilpauk, Chennai-600010, Tamil Nadu, India.
Mobile : 9381203272/9444161782/9381205644/ 9841096255 in Hindi Phone : 044-28203776
(Dir)044-28255060/5294&044-28203783/2811
E-mail : admissions@vinayakadmissions.com



செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டி யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பெண் ஒருவர் தட்டெறிவதையும் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பெண்களுக்கான பலூன் உடைத்தல் போட்டியில் கலந்துகொண்டவர்களையும் மற்றும் போட்டிகளில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

### மாகாண மட்டச் சம்பியனைத் தெரிவு செய்ய

# எட்டு மாவட்ட அணிகள் மோதும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

## சனி, ஞாயிறு தினங்களில் மட்டுவிலில் நடைபெறும்

தென்மராட்சி,ஜுன் 2

வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் முதலிடம் பெற்ற அணிகள் மோதும் மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாளும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

மாவட்ட மட்டத்தில் பிரதேச செயலர் பிரிவுகளில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டுவந்த கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் பூர்த்தியாகியுள்ளன.

இச்சுற்றுப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற அணிகள் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றவிருக்கின்றன.

எட்டு மாவட்டங்களிலும் முதலிடம் பெற்ற அணிகள் மாகாணமட்ட இறுதிப் போட்டிகளில் மோதவுள்ளன.

இந்தப் போட்டியில் தெரிவாகும் மாகாண அணி தேசியப் போட்டியில் பங்குபற்றத் தகுதி பெறும்.

இந்த மாகாண மட்டப் போட்டிக்கான ஏற்பாடுகளை மாகாண விளையாட்டுத்திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. (3-117)

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்2

ஆனைக்கோட்டை சாவல்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவிருக்கின்றது.

இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் அணிகள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-190)

## சதுரங்கப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜுன்2

யாழ். மாவட்ட ரீதியான சதுரங்கப் போட்டி நாளைமறுதினம் காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இருபாலாரும் வயதுவேறுபாடின்றிப் பங்குபற்றலாம் என்றும் -

இப்போட்டியில் பங்குபற்றுவதற்கான விண்ணப்ப முடிவுதிகதி இன்று என்றும் தெரிவிக்கப்பட்டது. (3-202)

# ஆசிய லெவன் அணியில் இலங்கை வீரர் சங்ககார

லண்டன்,ஜுன்2

உலக லெவன் அணிக்கும் ஆசிய லெவன் அணிக்கும் இடையிலான 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 16ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் அமெரிக்காவின் ஹட்சன் நகரில் நடைபெறவுள்ளது.

ஆசிய லெவன் அணியில் இந்திய வீரர்களான சச்சின் டெண்டுல்கர், வரேந்தர் ஷேவாக், ராகுல் ராவிட், அனில் கும்ளே, ஹர்பஜன் சிங், இர்பான் பதான் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்நிலையில், டெண்டுல்கருக்கு இடது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக லண்டன் மருத்துவமனையொன்றில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதனால், அவர் ஆசிய லெவன் அணியில் விளையாட முடியாத நிலையில் உள்ளார்.

ஆகவே, டெண்டுல்கருக்குப் பதிலாக இலங்கை அணியின் வீரர் குமார் சங்ககாரவைக் களம் இறக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்துப் போட்டி ஒருங்கிணைப்பாளர் ஹசன் ஜலீல் தெரிவிக்கையில்,

டெண்டுல்கர் இல்லாதது எமக்குப் பெரும் பின்னடைவு. அவருக்குப் பதிலாக இலங்கை வீரர் சங்ககாரவை ஒப்பந்தம் செய்துள்ளோம் - என்றார். (8)

## கவுன்டி அணியில் ஹர்பஜன் சிங்

லண்டன்,ஜுன்2

பந்துவீச்சு சர்ச்சையில் இருந்து விடுபட்ட ஹர்பஜன் கவுன்டி அணியில் அறிமுகமாகிறார்.

இந்திய அணி எதிர்வரும் ஓகஸ்டில் தான் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கிறது. இந்த இடைவெளியில் இங்கிலாந்தின் சர்ரே கவுன்டி அணிக்காக விளையாட முடிவுசெய்தார் ஹர்பஜன். ஆனால், துஸ்ரா சர்ச்சை தொடரவே, இங்கிலாந்து செல்வதில் தாமதம் ஏற்பட்டது. இந்தச் சூழலில் சர்வதேசக் கிரிக்கெட் கவுன்சில் இவரை நிபந்தனையின் பேரில் விடுவித்தது. இதையடுத்தே சர்ரே அணிக்காக விளையாட லண்டன் சென்றார் ஹர்பஜன். (8)

விளையாட்டு

# மாகாண மட்ட கரப்பந்தாட்டம்; கைதடி பாடசாலை பங்கேற்கும்

## தென்மராட்சிக்கு கிடைத்த முதல் சந்தர்ப்பம்

தென்மராட்சி,ஜுன்2

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்டமட்ட 15 வயது பெண்கள் பிரிவு கரப்பந்தாட்டப் போட்டிகளில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி - நாவற்குளி அ.த.க.பாடசாலை அணி இரண்டாமிடத்தைப்பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாகாண மட்டப் பெரு விளையாட்டுப் போட்டிகளில் முதன் முறையாகக் கலந்து கொள்ளச் செல்லும் தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த அணி இது என்பது குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த இந்த அணியினரை விளையாட்டுத் துறையினர் விரைவில் பாராட்டிக் கௌரவிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது. (3-117)

### தரப்படுத்தலில் முன்னிலை வகிப்பதற்காக

# ஆஸ்திரேலிய அணிக்கு 4.5 கோடி ரூபா பரிசு

சிட்னி, ஜுன்2

தரப்படுத்தல் வரிசையில் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி தொடர்ந்து முதலிடம் வகிப்பதற்காக 4கோடி 50 லட்சம் ரூபாவை ஐ.சி.சி. பரிசாக வழங்கிக் கௌரவித்துள்ளது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டு வருகின்றது. இதில் ஓராண்டு காலத்தில் அதிக நாள்கள் முதலிடம் வகிக்கும் அணிக்குப் பரிசு வழங்கப்படுவதாக அது அறிவித்திருந்தது.

அதன்படி, 2004ஆம் ஆண்டு ஏப்ரலில் இருந்து ஆஸ்திரேலிய அணி டெஸ்ட் ஒருநாள் என இருபட்டியலிலும் தொடர்ந்து முதலிடத்தைத் தக்கவைத்துள்ளது.

இரு தர வரிசைப்பட்டியலுக்குமென தலா 2 கோடி 25லட்சம் ரூபாவுக்கான காசோலையை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தலைமைச் செயலாளர் ஜேம்ஸ் சதர்லான்ட் ஐ.சி.சியிடமிருந்து பெற்றுக் கொண்டார். (8)

# முல்லை. வலய தடகளப்போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு,ஜுன்2

முல்லை வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

19 வயதுப்பிரிவின் முடிவுகள் வருமாறு:-

### 19 வயதுப் பிரிவு

#### ஆண்கள்

**100 மீற்றர்** - ஏ.எம்.எம்.றொசான் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), எம்.தவேந்திரன் (முல்லைத்தீவு மகா வித்தி.), பி.கௌதமன் (செம்மலை மகா வித்தி.).

**200 மீற்றர்** - ஏ.எம்.எம்.றொசான் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஜே.பிலிப் நிரோஜன் (இரணைப்பாலை றோ.க.வித்தி.), ரி.சுகிர்தன் (வற்றாப்பளை ம.வித்தி.).

**400 மீற்றர்** - ஜெ.பிலிப் நிரோஜன் (இரணைப்பாலை றோ.க.வித்தி.), கே.பிருந்தன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**800 மீற்றர்** - கே.தேவதாஸன் (வித்தியானந்தாக் கல்லூரி), எஸ்.சதீஸ்கரன் (வற்றாப்பளை மகா வித்தி.), ஜி.கஜீவன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**1500 மீற்றர்** - கே.தேவதாஸன் (வித்தியானந்தாக் கல்லூரி), எஸ்.சதீஸ்கரன் (வற்றாப்பளை மகா வித்தி.), கே.இந்துஷன் (கலைமகள வித்தி).

**5000 மீற்றர்** - கே.தேவதாஸன் (வித்தியானந்தாக் கல்லூரி),கே.இந்துஷன் (கலைமகள் வித்தி.), எஸ்.சதீஸ்கரன் (வற்றாப்பளை மகா வித்தி.).

**110 மீற்றர்** - தடைதாண்டல் - என்.ரதீஸ் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), கே.எழில் குமாரன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**400 மீற்றர் தடைதாண்டல்** - ஜி.கஜீவன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), என்.ரதீஸ் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஏ.இளங்கோவன் (வற்றாப்பளை மகா வித்தி.).

**உயரம் பாய்தல்** - ரி.சுகிர்தன் (வற்றாப்பளை மகா வித்தி.), எஸ்.தர்சன் (குமுழமுனை மகா வித்தி.), ஜி.கஜீவன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**தடியூன்றிப் பாய்தல்** - எஸ்.தர்சன் (குமுழமுனை மகா வித்தி.), எஸ்.டில்சான் (வித்தியானந்தாக் கல்லூரி), எஸ்.அருள்ரதன் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**நீளம் பாய்தல்** - ஏ.எம்.எம்.றொசான் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), கே.ஜெனந்தன் (வித்தியானந்தாக் கல்லூரி), ஏ.இளங்கோவன் (வற்றாப்பளை மகா வித்தி.).

**முப்பாய்ச்சல்** - பி.கௌதமன் (செம்மலை மகா வித்தி.), ஏ.இளங்கோவன் (வற்றாப்பளை மகா வித்தி.), எஸ்.தபேந்திரன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**குண்டு போடுதல்** - என்.வசீகரன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஆர்.ரமேஸ்குமார் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), ரி.திபாகர் (குமுழமுனை மகா வித்தி.).

**தட்டெறிதல்** - ரி.திபாகர் (குமுழமுனை மகா வித்தி.), என்.வசீகரன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஜே.ஜெனந்தன் (வித்தியானந்தாக் கல்லூரி).

**ஈட்டியெறிதல்** - ரி.திபாகர் (குமுழமுனை மகா வித்தி.), கே.பார்த்தீபன் (புதுக்குடியிருபபு மத்திய கல்லூரி), என்.வசீகரன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**4x100 அஞ்சல்** - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, செம்மலை மகா வித்தியாலயம்.

#### பெண்கள்

**100 மீற்றர்** - ஈ.சர்மிளா (செம்மலை மகா வித்தி.), பி.ஊழியா (வற்றாப்பளை மகா வித்தி.), ரி.சோபிதா (விசுவமடு மகா வித்தி.).

**200 மீற்றர்** - ஈ.சர்மிளா (செம்மலை மகா வித்தி.), ரி.சோபிதா (விசுவமடு மகா வித்தி.), ஜே.மெரீனா (இரணைப்பாலை றோ.க. மகா வித்தி.).

**400 மீற்றர்** - ரி.சோபிதா (விசுவமடு மகா வித்தி.), எம்.சந்துஜா (செம்மலை மகா வித்தி.), கே. அஜிதா (கொக்குத்தொடுவாய் அ.த.க பாடசாலை).

**800 மீற்றர்** - எம்.சந்துஜா (செம்மலை மகா வித்தி.), ரி.கௌசலாதேவி (தேவிபுரம் அ.த.க.பாடசாலை), வி.வனசா (விசுவமடு மகா வித்தி.).

**1500 மீற்றர்** - ஐ.பிரியா (கலைமகள் வித்தி.), எம்.வாணி (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை), ஆர்.விஜிதா (விசுவமடு மகா வித்தி.).

**3000 மீற்றர்** - ரி.கௌசலாதேவி (தேவிபுரம் அ.த.க. பாடசாலை), எஸ்.சுரேந்தினி (வள்ளிபுனம் அ.த.க. பாடசாலை), ஏ.ஸ்ரீசாந்தி (விசுவமடு மகா வித்தி.).

**100 மீற்றர் தடைதாண்டல்** - ஈ.சர்மிளா (செம்மலை மகா வித்தி.), ஏநிரஞ்சலா (இரணைப்பாலை றோ.க.மகா வித்தி.), பி.வனசா (விசுவமடு வித்தி.).

**400 மீற்றர் தடைதாண்டல்** - எம்.சந்துஜா (செம்மலை மகா வித்தி.), ஏ.அமலிகா (இரணைப்பாலை றோ.க.மகா வித்தி.), ஏ.நிறஞ்சலா (இரணைப்பாலை றோ.க. மகா வித்தி.).

**உயரம் பாய்தல்** - எ.கலாரஜனி (வித்தியானந்தாக் கல்லூரி), கே.அஜிதா (கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை), கே.மீரா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**நீளம் பாய்தல்** - எம்.புஸ்பானந்தி (வள்ளிபுனம் அ.த.க. வித்தி.), கே.அஜிதா (கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை), எஸ் யாழினி ((முல்லைத்தீவு மகா வித்தி.).

**குண்டு போடுதல்** - எஸ்.சகுந்தலா (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை), பி.மேரி கம்சனா (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.).

**தட்டெறிதல்** - கே.மீரா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), வி.ரஜிதா (குமுழமுனை மகா வித்தி.), பி.மேரிகம்சனா (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.).

**ஈட்டியெறிதல்** - பி.மேரிகம்சனா (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.), எம்.புஸ்பானந்தி (வள்ளிபுனம் அ.த.க. பாடசாலை), எஸ்.சகுந்தலா (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை).

**4x100 அஞ்சல்** - செம்மலை மகாவித்தியாலயம், இரணைப்பாலை றோ.க.மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

**4x400 அஞ்சல்** - - செம்மலை மகா வித்தியாலயம், இரணைப்பாலை றோ.க. மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

(வளரும்) (3-410)

## பிக்கு கைது!

சிறுவர்கள் ஐந்து பேரை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் எனக் கூறப்படும் பௌத்த பிக்கு ஒருவர் மஹியங்கனை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெஹியத்தகண்டிய, உத்தயபுர பகுதியைச் சேர்ந்த விகாரையின் விகாராதிபதியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சிறுவர்கள் பலரை இவர் நீண்டகாலமாக பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் எனப் பொலீஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது என்று அதிகாரி ஒருவர் கூறினார்.

பொலீஸார் குறிப்பிட்ட பிக்குவைக் கைது செய்து மஹியங்கனை நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்தனர். அவரை ஜூன் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# இலக்கிய கலைவிழா போட்டி முடிவுகள்

தேசிய இலக்கிய கலைப்பெருவிழாவை முன்னிட்டு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தால் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

அந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**பாடசாலை மட்டம்**

**கட்டுரை**

சிரேஷ்ட பிரிவு - இ.஖ிஜயகுமார் (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), அ.விமல்ராஜ் (சில்லாலை றோ.க.த.க. பாடசாலை), த.மலர்வி'ரி (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி.)

கனிஷ்ட பிரிவு - சு.ஸ்ரீகாந்தன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), அ.ஆன்சிந்துஷா (மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை), ச.சர்மிளா (மானிப்பாய் மெமோறியல்).

**சித்திரம்**

சிரேஷ்டபிரிவு - செ.ராஜிஸ்ரன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), செ.கஜந்தன் (மானிப்பாய் மெமோறியல்), நே.பிரசாத் (மானிப்பாய் இந்துக் கல்லூரி),

கனிஷ்ட பிரிவு - அ.ஜோண்ஜிப் ரிக்கோ (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), இ.டர்சன் (மானிப்பாய் மெமோறியல்), பொ.கேதீஸ்வரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

**நாட்டார் பாடல்**

சிரேஷ்டபிரிவு - ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல்), கி.வாசுகி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), க.அருள்மதி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

கனிஷ்ட பிரிவு - இ.டயானா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.), ப.கீர்த்தனன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), பொ. அனற்றினா (மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ. க.த.க.பாடசாலை).

**திறந்த போட்டி**

கவிதை - க.ஜெகதீசன் (சண்டிலிப்பாய்), அ.யேசுரட்ணம் (ஆனைக்கோட்டை), ஜெ.கோக்கலே (மானிப்பாய்).

**குறுநாடக எழுத்துப்போட்டி**

திருமதி யோ.மகேந்திரன் (பண்டத்தரிப்பு).

**நாட்டுப்புறப் பாடல்**

தி.சுகிர்தன் (வடலியடைப்பு), த.சுகதாஸ் (சண்டிலிப்பாய்), இ.ரமணன் (சண்டிலிப்பாய்).

(ஒ-13-203)

# உயர் அரச அதிகாரிகளும் கூட பாடசாலை அனுமதி மோசடியில்!

பிரபல கல்லூரிகளில் தமது பிள்ளைகளுக்குத் தரம் ஒன்று வகுப்பு அனுமதி பெறுவதற்காக மோசடி செய்த பெற்றோர்கள் பொலீஸாரிடம் வகையாகச் சிக்கிக் கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் அரசில் உயர் பதவி வகிப்பவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

கொழும்பில் றோயல் கல்லூரி, விசாகாக் கல்லூரி, நாலந்தக் கல்லூரி மற்றும் நாத்தாண்டிய தம்மேஸ்வர போன்ற கல்லூரிகளில் தரம் ஒன்றுக்கு அனுமதி பெறுவதிலேயே இந்த மோசடிகள் இடம்பெற்றுள்ளன என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக் குழுவுக்குத் தலைமைவகிக்கும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் சி.வெத்தசிங்க தெரிவித்தார்.

கிராம சேவையாளர் மட்டத்திலிருந்து கல்வித் திணைக்கள அதிகாரிகள்வரை பல மட்டங்களில் ஆவண மோசடிகள் புரியப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளதாம்.

போலி ஆவணங்களைத் தயாரிப்பதற்கு உதவியவர்கள், போலிப் பதிவுகளை உறுதிப்படுத்தியவர்கள் என முப்பது பேர் பொலீஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். மேற்படி பாடசாலைகளின் அதிபர்களிடமும் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த மோசடிகளின் பின்னணியில் செயற்பட்டவர்கள் என உறுதிப்படுத்தப்படும் நபர்கள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

அரச உயர் அதிகாரிகளாக இருக்கும் இந்த மாணவர்களின் பெற்றோரின் விவரங்கள் அனைத்தும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன என மேலும் தெரிவிக்கப்பட்டது.

## விபத்தில் இருவர் காயம்

கோண்டாவில்,ஜூன்2

நேரெதிரே வந்த மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் அவற்றைச் செலுத்தி வந்த இருவரும் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை கோண்டாவிலில் இடம்பெற்றது.

காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர். (ஒ-49)




முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

02 06 2005

செல்வன் கு.நிஸ்ஷன்

புத்தூரைச் சேர்ந்த குகநேசன் – றஜிதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிஸ்ஷன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (02.06.2005) வியாழக்கிழமை அரியாலையில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், பாட்டன்மார், பாட்டிமார் ஆகியோர் நிஸ்ஷனை சகல கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்து கின்றனர்.

அரியாலை,
யாழ்ப்பாணம்.

ராசன்
(பாட்டன்)

(45889) (54-18-16)



கணபதி துணை

விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் வைகாசித் திங்கள் 20ஆம் நாள் நாளை (03.06.2005) வெள்ளிக்கிழமை அஸ்வினி நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 8.30 மணிமுதல் 9.10 மணிவரையுள்ள (புதிய நேரம்) மிதுன லக்ன சுபமுகூர்த்தத்தில்

பருத்தித்துறை பிரம்மஸ்ரீ ந.பாஸ்கரக்குருக்களின் பௌத்திரனும் நவிண்டில் பிரம்மஸ்ரீ அ.மகாதேவ சர்மாவின் தௌஹித்திரனும் எமது துவித்விய புத்திரனுமான சிரஞ்சீவி

ஈஸ்வரநிவாஸ சர்மாவுக்கு

சுன்னாகம், மயிலணி பிரம்மஸ்ரீ சி.சர்வேஸ்வரக் குருக்களின் பௌத்திரியும் மு.பரமசாமிக்குருக்களின் தௌஹித்திரியும் எமது ஏக புத்திரியுமான சௌபாக்கியவதி

உமாவை

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹணஞ் செய்ய விநாயகப் பெருமானின் திருவருளாலும் முருகப்பெருமானின் அனுக்கிரகத்துடனும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களுடன் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் – மணமகன் இல்லத்தில் காலை 5 மணிக்கு வதூவர கிரஹப்பிரவேசமும் வரவேற்பு உபசாரமும் – மணமகன் இல்லத்தில் மாலை 5மணிக்கு.

தங்கள் நல்வரவை அன்புடன் நாடும்:

ஸ்ரீமதி ஸ்ரீ.நாராயணசர்மா தம்பதிகள்
"கந்த இல்லம்" வி.எம்.வீதி, பருத்தித்துறை.

ஸ்ரீமதி ச.வரதராஜேஸ்வர குருக்கள்
பிரம்மஸ்ரீ வ.உமாசுதசர்மா
மயிலணி, சுன்னாகம்

சுபமஸ்து
(இருவீட்டார் அழைப்பு)

005)(50)



திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467 (43005)(39-11-15)

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22.சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.





இடம் மாற்றம்
புனிதா நகைமாடம்

இதுவரைகாலமும் இல. 239, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கி வந்த எமது புனிதா நகைமாடம் 01. 06. 2005 புதன்கிழமை முதல்- யாழ்ப்பாணம் பஸ் நிலைய முன்பாக 169 & 171 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு இடம் மாற்றப்பட்டு இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

\- உரிமையாளர்

169, 171 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். புனிதா நகை மாடம்.
(யாழ்.பஸ் நிலையம் முன்பாக) (45933) (39-11-15) T.P.021 222 7026







ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்
பண்டிதர் நரசிம்ம நாயுடு
(World Expert Astrologer)

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர். இவர் கைரேகை மூலமாக - நடந்தவை. நடக்கின்றவை. நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

பிள்ளையார் இன்,
அறை எண் 9, 31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 077 9122836. (39-11-15)

Pillaiyar Inn,
Room No. 9,
31, Manipay Road,
Jaffna, Sri Lanka.

(45573)



ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்

யாழ்ப்பாணம்- வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
ஏகாதசி உற்சவம்

நிகழும் பார்த்திப வருடம் வைகாசி மாதம் 19 ஆம் நாள் (02. 06. 2005) வியாழக்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆலயத்தில் ஏகாதசி உற்சவம் நடைபெறும். அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்கு பற்றி ஸ்ரீமத் நாராயணன் அருள் பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

ஆதீன மகா சபை.

பெருமாள் கோயில்,
யாழ்ப்பாணம்.

(ச. 43118) (39-11-15)



தங்க மகனே! நீயும் வாழிய பல்லாண்டே!



உயர் திரு
சண்முகம் குகபாஸ்கரன்
அவர்கள்
(உப முகாமையாளர்
இலங்கை வங்கி சுன்னாகம்)

இன்று 02. 06. 2005 அறுபதாண்டு நிறைவில் தனது 38 வருடகால வங்கிச் சேவையிலிருந்து இளைப்பாறுகின்ற உயர்திரு ச.குகபாஸ்கரன் அவர்களுக்கு இலங்கை வங்கி சுன்னாகக் கிளை தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

மங்குறா சேவை பல மாண்புடனே செய்திட்ட
எங்கள் 'குகபாஸ்கர' ஏந்தலே நீ வாழி!
இங்குள வங்கிகளில் இணையற்ற இலங்கை வங்கி
ஈடிணையில்லா சுன்னாகக் கிளை தன்னில்
பங்கமில்லாப் பன்னிரண்டாண்டு சேவை ஆற்றிய
பண்பாளா! பலர் போற்ற நீ
வங்கி தனில் இன்முகமாய் வளமுடனே சேவை செய்தாய்
தங்க மகனே நீயும் வாழிய பல்லாண்டு.

இலங்கை வங்கி- சுன்னாகம்.

முகாமையாளரும்,
ஊழியர்களும்.

(ச.43134) (39-11-15)

# விஷ மருந்தால் நாய்கள் இறக்கவில்லை; ஆகவே கடலில் அமிழ்த்திக் கொல்ல முடிவு!

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ். மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களை விஷம் வைத்துக்கொல்லும் திட்டம் திருப்திகரமான பயனைத் தராததால் அவற்றை கடலில் மூழ்கடித்துக் கொல்லத் திட்டமிடப்பட்டுள்ளது.

வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி நாயகளைக் கொல்வதற்கு 'ஸ்ரெச்சின்' என்ற நஞ்சு மருந்து கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது. இந்த மருந்தைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக பிரதேச செயலகங்களில் கூறப்படுகிறது.

இதேவேளை, சில இடங்களில் 'ஸ்ரெச்சின்' நஞ்சு மருந்து பயன்படுத்தப்பட்டபோதும் நாய்கள் இறப்பதற்கான சந்தர்ப்பம் குறைவாகவே உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனாலேயே மாற்று ஏற்பாட்டுத் திட்டத்தின் கீழ் வண்டில் மூலம் பிடிக்கப்படும் கட்டாக்காலி நாய்கள் கடற்கரையில் முகாம் இட்டுள்ள படையினரின் அனுமதியுடன் கடல் நரில் அமிழ்த்தப்பட்டுக் கொலைசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

வண்டில் மூலம் கொல்லப்படும் நாய்களில் ஒன்றுக்கு வழங்கப்படும் 50 ரூபா கொடுப்பனவை இரட்டிப்பாக்கி 100 ரூபாவாக வழங்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளரை சகல பிரதேச செயலாளர்களும் கேட்டுள்ளனர்.

கட்டாக்காலி நாய்களை உரிய காலத்தில் அழிப்பதில் உள்ளூராட்சி சபைகளும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளும் தீவிரமாகச் செயற்படாவிட்டால் எதிர்காலத்தில் விசர் நாய்க்கடியினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-185)

## உணவில்லாத பொருள்கள் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை,ஜூன்2

சுனாமி அனர்த்தத்தினால் தொழில்ரீதியாகப் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு 'வேல்ட் விஷன்' நிறுவனம் உணவில்லாப் பண்டங்களை வழங்கியுள்ளது.

சுனாமி தாக்கத்தினால் தொழில்ரீதியாகப் பாதிக்கப்பட்ட தொல்புரம், மூளாய், சுழிபுரம் பகுதிகளைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களுக் கும், காட்டுப்புலம் ஸ்ரீ முருகன் முகாம்களில் உள்ள குடும்பங்களுக்கு வாளி, படுக்கை விரிப்பு, பாய், செருப்பு, பற்பசை, தண்ணீர் சுத்திகரிக்கும் துணிகள் போன்ற பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஒ-161)

# மிதிவெடி அகற்றும் நடவடிக்கை வலி.தென்மேற்கில் தீவிரமாகும்

யாழ்ப்பாணம்,ஜூன்2

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியைத் தீவிரப்படுத்துமாறு யாழ். அரசஅதிபர் கே.கணேஸ் மிதிவெடி அகற்றும் பணிக்கான மாவட்ட அலுவலர் எல்மோ ஆனந்தராஜாவை கடிதம் மூலம் பணித்துள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட மாதகல், கடாப்புலம் பகுதியிலும் நவாலி இறங்குதுறைப் பகுதியிலும் மிதிவெடிகள் முற்றாக அகற்றப்படவில்லை என்று முறையிடப்பட்டு வந்தது.

இதனையடுத்தே, யாழ். அரசஅதிபர் மிதிவெடிகளை அகற்றி சபைச் செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மிதிவெடி அகற்றும் அலுவலரைக் கேட்டுள்ளார்.

மேற்கூறிய பகுதிகளில் உள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்டால் மட்டுமே எதிர்காலத்தில் நவீன தரத்திலான கொல்களங்கள் அமைக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.(ஒ-185)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# தென்மராட்சியில் 125 வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

சாவகச்சேரி,ஜூன்2

'நிக்கொட்' நிதியுதவியுடன் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள கிராமசேவையாளர் பிரிவுகளில் வறிய 125 குடும்பங்களுக்கு யாழ் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மந்துவில் மேற்கு சூரியகுமாரன் சனசமூக நிலையத்தில் இடம் பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.ஜெயராஜ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்ட அரசஅதிபர் க.கணேஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். நிகழ்வில் வண.பிதா கருணாரட்ணம் அடிகளார், மௌலவி ஈ.ஏ.எஸ்.சுபியான், யாழ.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நரவிராஜ், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, 'நிக்கொட்' பிரதித் திட்டப் பணிப்பாளர் க.நவரட்ணராசா, தென்மராட்சிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.வீரசிங்கம், சாவகச்சேரி அறவழி நிலையத் தலைவர் டாக்டர் சு.சி.அருளானந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரசஅதிபர் கே.கணேஸ பயனாளிகளுக்கு வீட்டு உரிமைச் சான்றிதழ்களை வழங்கினார். பயனாளிகள் சார்பாக எஸ்.பரமநாதன் உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வையடுத்து, மக்களிடம் கையளிக்கப்பட்ட வீடுகளுக்கு அரசஅதிபர் க.கணேஸ் சென்று மங்கள விளக்கேற்றி வீட்டினைப் பயனாளிகளுக்குக் கையளித்தார். நிகழ்வில் கிராம சேவையாளர்கள், நலன்விரும்பிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள், அரச திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ஒ-31)



வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிகையலங்கரிப்பாளர்களுக்கு 'பட்டினிக்கு எதிரான நிறுவனம்' தொழில் உபகரணங்களை வழங்குவதையும், பொது மக்களுக்கு 'வேல்ட் விஷன்' நிறுவனம் வீட்டுத் தளபாடங்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள : கரவெட்டிச செயதியாளா)*

## மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ். மாவட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுடைய பெயரும் சுட்டிலக்கமும் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் -

சுட்டிலக்கம் கிடைக்கப்பெறாதவர்கள் தங்கள் வலயக் கல்விப் பணிமனையில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாமெனவும் -

யாழ். மாவட்டத் தமிழ்த்தினப் போட்டி இணைப்பாளரும் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளருமான வே.தி.செல்வரட்ணம் தெரிவித்துள்ளார்.

(ஒ-12)

# கைதடியில் பொதுமண்டபம் 'நியாப்' திட்டத்தில் அமைப்பு

கைதடி கிழக்கு, கள்ளிநகரில் 'நியாப்' திட்டததின்கீழ் பொதுநோக்கு மண்டபம் அமைக கப்படவுள்ளது.

'நியாப்' திட்டத்தின்கீழ் கைதடி கிழக்கு கிராமசேவகர் பிரிவில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை கைதடி வடக்கு ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தில் கைதடி கிழக்கு கிராம அலுவலர் எஸ்.சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி உதவித் திட்டமிடற் பணிப்பாளர் ரி.குணாளன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ப.பரமேஸ்வரன உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

மக்களின் தேவைகளை இனங்கண்டு அவர்களின் ஒத்துழைப்போடு தெரிவுசெய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்று அப்போது வலியுறுத்தப்பட்டது.

பொதுநோக்கு மண்டபம் அமைத்தல், வீதிகள், கிணறுகள், வெள்ளவாய்க்கால்கள் புனரமைத்தல், சுயதொழில் முயற்சிக்குக் கடன் வழங்குவது போன்ற விடயங்கள் முன் வைக்கப்பட்டன. இறுதியில் மக்களின் முன்மொழிவுகளோடு கைதடி வானத்தலட்டி வீதி, நவபுரம் ஊற்றல் மயான வீதி, பச்சைப்புலவு சவரை வீதி ஆகியவற்றைத் திருத்தல், கைதடி, கள்ளிநகரில் பொதுநோக்கு மண்டபம் அமைத்தல், ஏழு விவசாயக் கிணறுகள், ஐந்து வெள்ளவாய்க்கால்கள் புனரமைத்தல் ஆகிய திட்டங்களை நிறைவேற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

(ஒ-75)

# திருட முயற்சித்த கும்பலை விரட்டிப் பிடித்தனர் மக்கள்

தென்மராட்சி,ஜூன்2

சாவகச்சேரி, நுணாவில் கிழக்குப் பகுதியில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட இருவரை அப்பகுதி மக்கள் விரட்டிப் பிடித்தனர். இந்தச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

சம்பவதினம் இரவு அப்பகுதியில் உள்ள வீடொன்றில் கும்பல் ஒன்று திருட முயற்சித்தது. அப் போது வீட்டில் இருந்தோர் குரரெழுப்பினர். இதனையடுத்து திருடர்கள் தப்பியோட எத்தனித்தனர். அவர்களில் இருவரை பொதுமக்கள் துரத்திப் பிடித்தனர். இந்தத் திருடர்களால் கொண்டுவரப்பட்டதாகக் கருதப்பட்ட இரண்டு இலக்கமில்லாத மோட்டார் சைக்கிள்களும் பொதுமக்களிடம் சிக்கின.

பிடிபட்ட இருவரையும் சாவகச்சேரி பொலீஸாரிடம் பொதுமக்கள் ஒப்படைத்தனர்.

இந்தத் திருடர்களுடன் வந்த மற்றொருவர் தப்பியோடி நுணாவில் கிழக்கிலுள்ள ஈ.பி.டி.பி. கட்சி அலுவலகத்தில் பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலீஸாரிடம் சரணடைந்தார்.

இந்தத் திருடர்களில் இருவர் கல்வியங்காட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## தென்மராட்சியில் கிராம தரிசனம்

வலி.வடக்கு,ஜூன்2

தென்மராட்சிப் பகுதியில் கிராம தரிசிப்புச் செயற்பாடுகளையும் அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறையினர் மேற்கொண்டுவருகின்றார்கள்.

கிராமம் கிராமமாக இடம்பெற்றுவரும் இக் கிராம தரிசிப்பு, கருத்தரங்குகள் மூலம் இன்றைய அரசியல் நிலைப்பாடுகள் சம்பந்தமாகப் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறப்படுவதுடன் பொதுமக்கள் தமது சந்தேகங்களையும், அபிப்பிராயங்களையும் தெரிவித்துவருகின்றனர்.

அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளைத் தொடர்ந்து அரசியல் சம்பந்தமான படக்காட்சிகளும் காண்பிக்கப்பட்டு வருகின்றன. (த-86)

# ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் திருத்தப்பட்ட சுற்றறிக்கை விவரம்

அச்சுவேலி,ஜூன்2

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் திருத்தி அமைக்கப்பட்ட புதிய சுற்றறிக்கை கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

2005-05-19ஆம் திகதிய 2005/2ஆம் இலக்க இந்த புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் சகல தரங்களிலும் உள்ளோருக்கு ஒரே காலத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

அத்துடன் 2004.12.31வரையுள்ள காலப் பகுதியின் ஆசிரியர் சேவைக்காலம் மற்றும் புள்ளிகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

அதேவேளை - ஆசிரியர் சேவைத்தரம் ஒன்றுக்கான பதவி உயர்வு வயதுக் கட்டுப்பாடு மற்றும் போட்டிப் பரீட்சை இன்றி வழங்கப்படல், 1990ஆம் ஆண்டு நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர் பதவி நியமனத்தில் பயிலுநர் ஆசிரியர்களாக கடமையாற்றிய 4 வருட காலத்திற்கு சேவைக்காலமாக கருதி புள்ளி வழங்கல்.

ஆசிரியர் சேவைக்காலம் தொடர்பாக புள்ளி வழங்கும் போது சேவைகாலம் ஒரு வருடத்திற்கு குறைந்த நிலையில் இருப்பின் அரைப் புள்ளி வழங்கப்பட்ட முறை மாற்றப்பட்டு சேவைக் காலம் 6 மாதத்திற்கு மேற்பட்டதாகி மேல் நிலைப் புள்ளி வழங்கல் ஆகிய ஏற்பாடுகள் இந்தச் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புதிய சுற்றறிக்கை தொடர்பான பதவி உயர்வுகளால் வழங்கப்படும் சம்பள நிலுவைகள் 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்படவிருக்கின்றது.

இலங்கை ஆசிரியர் சேவை 1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 1995ஆம், 2000ஆம் ஆண்டுகளில் வெளியான திருத்தங்களின் பின்னர் மூன்றாவது திருத்தம் 2005இல் நடைமுறைக்கு வருவதாகவும் -

இதன்மூலம் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பதவிஉயர்வு உள்ளிட்ட பல்வேறு விதத்தில் சம்பள அதிகரிப்பைப் பெற சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.(ஒ-11)

# வள்ளங்களைத் திருத்த நடவடிக்கை இல்லை

கரவெட்டி,ஜூன்2

சுனாமியால் பாதிப்படைந்த 28அடி நீள வள்ளங்களைத் திருத்துவதற்கு இதுவரை உதவிகள் எதுவும் கிட்டவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த 28 அடி நீள வள்ளங்கள் திருத்தப்படாமையாலும் சம்பந்தப்பட்ட வள்ள உரிமையாளர்களுக் புதிய வள்ளங்கள் வழங்கப்படாமையாலும் கடற்றொழிலாளர்கள் பலர் தொழில் இன்றிப் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடமராட்சியில் 128 அடிநீள வள்ளங்கள் 87 உள்ளன. இவற்றில் 30வள்ளங்கள் மட்டுமே சிறு சேதங்களுடன் உள்ளன. ஏனையவை முற்றாகச் சேதமடைந்துள்ளன. இவற்றைத் திருத்தவோ அல்லது புதிய வள்ளங்களை வழங்கவோ இதுவரை எந்த நிறுவனமோ அரசோ முன்வரவில்லை என்று கவலை தெரிவித்தார்.

(ஒ-70)

## கடும் எதிர்ப்புகள் கிளம்பியதால்

# கரையோரத் தடை வலயம் குறித்து அரசு தீவிர மீள்பரிசீலனை

கொழும்பு,ஜூன்2

ஆழிப்பேரலையின் பின்னர் நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் விதிக்கப்பட்ட தடை வலயப் பகுதி பற்றி அரசு தீவிரமாக மீளாய்வு செய்து வருகின்றது. தடைவலயம் பற்றிய அரசின் தற்போதைய அறிவிப்பில் விரைவில் களநிலைக்கு சாத்தியமான மாற்றம்வரும் என்று உறுதியாக எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிக ஆபத்துக்குள்ளாக்கக் கூடிய பகுதிகளில் - சமவுயரக் கோட்டின் அடிப்படையில் மிகவும் தாழ்வான பகுதி எனக் காணப்படும் கரையோரங்களில் - மட்டுமே தடை வலயத்தை அமுல்படுத்துவது பற்றியும் தீவிரமாக ஆராயப்படுகின்றது.

உயரமான கரையோரப் பிரதேசங்களில் - ஆபத்துக் குறைவான பகுதி எனக் கணிப்பிடப்படுபவை - இப்போதுள்ள தடை வலயத்தைத் தளர்த்தி முன்பிருந்தது போன்றே அபிவிருத்தி நடவடிக்கைகளை அனுமதிப்பது பற்றியும் ஆலோசிக்கப்படுகின்றது.

இது குறித்து மீளாய்வுக் குழு ஒன்று அதி தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது. விரைவில் அதன் சிபாரிசுகள் அமைச்சரவையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

### ஆழிப்பேரலை பாதிப்பு

கடந்த டிசெம்பர் 30 ஆம் திகதி நாட்டில் வரலாறு கண்டிராத பேரழிவு ஏற்பட்டது. 38 ஆயிரத்துக்கும் மேறபட்ட மனித உயிர்கள் பலியாகின. பல கோடி ரூபா பெறுமதியான சொத்தழிவுகள் ஏற்பட்டன.

இதனையடுத்து கரையோரப் பிரதேசத்தில் குடியிருப்புகளை நிறுவுவது தொடர்பாக அரசு கட்டுப்பாடுகளை அறிவித்தது. கரையோரப் பாதுகாப்புத் தடை வலயம் என இது பிரகடனப்படுத்தப்பட்டது. வடக்கு - கிழக்கில் இதன் எல்லை கரையிலிருந்து 200 மீற்றர் தூரமாகவும் ஏனைய பகுதிகளில் அது 100 மீற்றர் தூரமாகவும் அறிவிக்கப்பட்டது.

### எதிர்ப்பு

ஆனால், அரசின் இந்த அறிவித்தலுக்குப் பல தரப்பிடம் இருந்தும் கண்டனங்கள் எழுப்பப்பட்டன. இது விஞ்ஞான ரீதியான ஒரு முடிவு அல்ல என்று விமர்சிக்கப்பட்டது. அப்பகுதியில் ஏற்கனவே, வாழ்ந்த மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்றும் இதனால், ஏற்படப்போகும் சமூகப் பாதிப்பை அரசு கவனத்தில் கொள்ளவேயில்லை என்றும் உலக வங்கி போன்ற சர்வதேச அமைப்புகளும் அரசைச் சாடியிருந்தன.

இத்தகைய கடும் அழுத்தங்களை அடுத்து இந்தக் கரையோரத் தடை வலயத்தை அரசு தற்போது தீவிரமாக மீளாய்வு செய்து வருகின்றது. விஞ்ஞானபூர்வமான விடயங்களைக் கருத்தில் எடுத்து இந்த மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

### மீளாய்வு

கரையோர மக்களின் சமூக நலனைக் கருத்திற்கொண்டும் விஞ்ஞான பூர்வமான அடிப்படையிலும் இந்தப் பிரச்சினையை அரசு அணுகவுள்ளது.

தற்போதுள்ளது போன்று எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே அளவிலான தடை வலயத்தை அறிமுகப்படுத்தாமல் மிக அவசியமான இடங்களில் மட்டும் அதனை நடைமுறைப்படுத்த மீளாய்வுக் குழு உத்தேசிக்கின்றது.

பாதிப்பு அதிகம் ஏற்படுமெனக் கருதப்படும் தாழ்வான பகுதிகளில் தடை வலயத்தை அறிமுகப்படுத்துவதிலும் -

ஏனைய கரையோரப் பகுதிகளில் தடை வலயத்தை அகற்றி, அதற்குப் பதிலாக அபாய எச்சரிக்கை உட்கட்டுமானங்களை அப்பகுதிகளில் ஏற்படுத்துவதிலும் - மீளாய்வுக் குழு அதிக கவனம் செலுத்துகின்றது என்று அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மீளாய்வுக் குழுவின் பணிகள் அநேகமாக இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். குழுவின் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை அடுத்த வாரமளவில் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிகின்றது. (க-3)

# ஆழிப்பேரலை நிவாரணத்தை தமிழருக்கும் சமமாகப் பங்கிட அமெ.செனட் வலியுறுத்து

வாஷிங்ரன்,ஜூன்2

ஆழிப்பேரலையின் பின்னரான நிவாரணங்கள் தமிழர்களுக்கும் சம அளவில் பகிரப்படவேண்டும் என்று அமெரிக்க செனட் சபை வலியுறுத்தியுள்ளது. நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள், விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் நடக்கும் சமாதான முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் எனவும் செனட் தெரிவித்துள்ளது.

அமெரிக்க செனட்டின் அவசர நிதி ஒதுக்கீட்டுக் குழுவின் அறிக்கை அண்மையில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. அறிக்கையைக் குழுவின் தலைவர் செனட்டர் தாட் கொஹ்ரன் சமர்ப்பித்தார்.

ஆழிப்பேரலை நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள், சமபங்கீடு , வெளிப்படைத்தன்மை, பொறுப்புச் சொல்லல் என்பனவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அறிக்கை கேட்கிறது.

இலங்கை சமாதானம் தொடர்பில் அவ்வறிக்கை கூறுகையில், "இலங்கையிலும், இந்தோனேசியாவிலும் ஆழிப்பேரலை நிவாரண, மீள்கட்டுமான நிகழ்ச்சித் திட்டங்கள், சம பங்கீடு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புச் சொல்லல் எனும் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும்.

"இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள், இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும், இந்தோனேசிய அரசுக்கும் அச்சே விடுதலை இயக்கத்திற்கும் இடையில சர்வதேச அனுசரணையுடன் நடக்கும் பேச்சை வலுப்படுத்துவதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமைய வேண்டும். இந்நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைக்கு ஒத்துவருபவையாகவும் அமைதல் அவசியம்.

"நிவாரணம் மற்றும் மீள் கட்டுமான உதவிகள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குழுக்களுக்கும் சமமாகப் பங்கிடப்படல் வேண்டும். பங்கீட்டின்போது பாதிக்கப்பட்டவர்களின் நிலைமையைத்தான் கருத்திற்கொள்ள வேண்டுமே தவிர அவர்களின் சமூக அந்தஸ்தைக் கருத்திற்கொள்ளத் தேவையில்லை.

"இதன்படி, இலங்கையில் தமிழர்களும், தென்னிந்தியாவில் தலித்துக்களும் நிவாரணம் வழங்கப்பட வேண்டியவர்கள் எனக் குழு எதிர்பார்க்கிறது" - என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் திறைசேரியில் இருந்து வழமையான வரவு - செலவுத் திட்ட நடைமுறைக்குப் புறம்பாக நிதி பெறுவதற்கு அவசர நிதி ஒதுக்கீட்டு ஏற்பாடு வழிவகுக்கிறது. இந்த ஏற்பாட்டிலிருந்து பாதுகாப்பு, பயங்கரவாதத்திற்கான உலகப்போர், ஆழிபபேரலை நிவாரணம் என்பனவற்றுக்கு நிதி பெறப்பட்டது. அதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கையொப்பம் இட்டிருந்தார்.

அது தொடர்பிலான செனட் குழுவின் அறிக்கையிலேயே மேற்கண்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

# மாணவ ஆய்வாளர் விருதுக்கு விண்ணப்பித்த மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்.விஞ்ஞானச் சங்கத்தின் மாணவர் ஆய்வாளர் விருது - 2005 போட்டிக்கு 200இற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துளளனர்.

போட்டி ஆய்வு சம்பந்தமான கருத்தரங்கு எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் போட்டிக்குரிய ஆராய்ச்சித் தலைப்பு, ஆராய்ச்சி முறை, அறிக்கை சமர்ப்பிக்கும் முறை என்பன தொடர்பாகப் பூரண விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

எனவே, மாணவர் ஆய்வாளர் விருதுககு விணணப்பித்தவர்கள் உரிய நேரத்திற்குச் சமுகம் தருமாறு விஞ்ஞான சங்கச் செயலாளரும் இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஜெயரட்ணம் பிறின்ஸ் ஜெயதேவன் கேட்டுள்ளார்.

மேற்படி நிகழ்வுக்கு இதுவரை விண்ணப்பம் அனுப்பாத, போட்டியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள அனைவரும் இக்கருத்தரங்கில் பங்குகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறுவர்களுக்கு துறைவாரியாகச் சான்றிதழ், கிண்ணம், பணப்பாிசு என்பன வழங்கப்படும்.

மேலும் பங்குபற்றியவர்களுக்கான தராதர சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (த-185)


## அறிவித்தல்

வடக்கு - கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கத்தினரால் 11.05.2005 அன்று பி.ப 3 மணிக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் சங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் மர, உலோக தளபாடங்களை உற்பத்தி செய்வோரும் விநியோகிப்போரும் மர, உலோக உற்பத்தியாளர் பகுதியில் பதிவுகளினை மேற்கொள்ளவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இத் தொழில்களை மேற்கொள்வோர் தவறாது பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்பு:

வடக்கு - கிழக்குப் பிராந்திய நிர்மாணிகள் சங்கம்,
மர, உலோக உற்பத்தியாளர் பகுதி,
யாழ்.மாவட்ட செயலகம், ஜி.பி.எஸ். றோட்,
(36032)(32-14-34-26) கல்வியங்காடு, யாழ்ப்பாணம். - நிர்வாகம்.


## வேலணை பிரதேச சபை அறிவித்தல்
## நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய
## வருடாந்த உயர்திருவிழா - 2005

01. நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உயர்திருவிழாவானது 2005-06-08ஆம் திகதி முதல் ஆரம்பமாகி 2005-06-23 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இக்காலப்பகுதியில் ஆலய வீதியிலும் வெளிச்சுற்றாடலிலும் புங்குடுதீவு - குறிகாட்டுவான் பகுதியிலும் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபாரம் செய்வோர் வேலணை பிரதேச சபையின் நயினாதீவு, புங்குடுதீவு உப பணிமனைகளில் தொடர்புகொண்டு அனுமதிப்பத்திரம் பெற்று பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் வியாபாரத்தில் ஈடுபடல் வேண்டும்.

02. நயினாதீவு, புங்குடுதீவு படகுச் சேவையில் ஈடுபடுகின்ற படகு உரிமையாளர்களும் நயினாதீவு உப அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பிரதேச சபை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாகச் சபையால் விதிக்கப்படும் வரி அறவீட்டுத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.

03. உயர் திருவிழாக் காலப்பகுதியில் காலை 10.00 மணி முதல் 2.00 மணி வரையும் பிரதான வீதியிலும் யாத்திரிகர் மடத்திற்கு அப்பாலும் ஆலயத்திற்குத் தெற்கு மதிலுக்கு அருகிலுள்ள வீதியில் மேற்கு மதில் எல்லைக்குள்ளும் துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

04. குறிகாட்டுவான் பகுதியிலுள்ள வெற்றுக்காணிகள் வழமைபோல பிரதேச சபையினால் வாகனத் தரிப்பிடங்களாகப் பாவிக்கப்பட்டு வரி அறிவிடப்படும். தனியார் எவருக்கும் வாகனத்தரிப்பிட வரி அறிவீடு செய்ய அனுமதி வழங்கப்படவில்லை என்பதை அறியத்தருவதுடன், இவ் ஒழுங்கை மீறிச்செயற்படும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை உடன் மேற்கொள்ளப்படும். இந்நபர்கள் பிரதேசசபைக் கடமைகளைக் குழப்பியவர்களாகக் கருதப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் ஆளாக்கப்படுவர்.

05. குறிகாட்டுவான் துறைப்பகுதியில் புங்குடுதீவு உப அலுவலகத்தில் வாகனம் நிறுத்தும் இடவசதிகள், சுகாதார வசதிகள், குடிதண்ணீர், தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சகலரும் உரிய முறையில் பிரதேச சபையின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களினால் பணிக்கப்படும் ஒழுங்கு முறைகளைப் பேணுவதுடன் வாகன உரிமையாளர்கள் உரிய கட்டணத்தைச் செலுத்தி ஒத்துழைக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்,
வேலணை பிரதேச சபை. செயலாளர்,
2005-05-27 (26-14-34) வேலணை பிரதேச சபை. (சி-43145)

### பிக்குகள் எச்சரிக்கை

திருமலையில் நிறுவப்பட்டிருக்கும் திடீர் புத்தர் சிலையை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமானால் புத்த பெருமானுக்காக உயிரைத் தியாகம் செய்யவும் தாங்கள் தயாராயிருக்கிறார்கள் என திருமலை சீனத்துறைமுக சிறீ போதிராமாராதிபதி தெஹியோவிட்ட பிய திஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

திருமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாகக் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருமலையில் இருக்கும் புத்தர் சிலையை யாராவது கடத்த முற்படுவார்களாயின் அரசு தலையிட்டு, அதனைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அவ்வாறு நடக்காத பட்சத்தில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தாங்கள் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்போம் என்றும் பிய திஸ்ஸ தேரர் குறிப்பிட்டார்.

ஹர்த்தால் போராட்டத்தின் மூலம் திருகோணமலையில் புத்தர் சிலையை அகற்ற முடியுமாயின் அது தமிழ் ஈழத்திற்குக் கதவைத் திறந்துவிட்டதைப் போலாகிவிடும்.

திருகோணமலையில் இப்போது ஹர்த்தால் நடப்பதுபோல ஒரு காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி தெற்கில் ஹர்த்தால் நடத்திவந்தது. ஒரு துண்டுக்காகிதத்தினால் கடைகளை மூடச்செய்தது. ஆனால், அப்போது இருந்த ஆட்சியாளர்கள் இராணுவத்தையும், பொலீஸையும் பயன்படுத்தி மூடியிருந்த கடைகளைத் திறக்கச்செய்தனர். அப்படியாயின், ஏன் இன்றைய ஆட்சியாளர்களினால் திருமலையில் மூடப்படும் கடைகளைத் திறக்கச்செய்ய முடியவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (க-3)


## வீடுவளவு விற்பனைக்கு

கொக்குவில் ஸ்ரேசனுக்கு எதிர்ப்புறம் உள்ள ஒழுங்கையில் நாலு பரப்புடன் கூடிய வீடு வளவு சகல வசதிகளும் கொண்டது விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
(45950) இல.356, ஆஸ்பத்திரி வீதி,
(21-14-34-26) யாழ்ப்பாணம். T.P.: 5648.

உ

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்





இந்தியாவிலிருந்து வந்துள்ள

ராமகிருஸ்ண சாஸ்திரிகள்

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

அறை எண் 01, ரி.கே.ஸூறிஸ்ற் இன்,
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி),
(36004)(21-14-34-26) யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776 923623.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கான விலை மனு கோரல்

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுள்ள பாதுகாப்புச் சேவைகளை வழங்கக்கூடிய தனியார் நிறுவனங்கள் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து வட்டக்கச்சி விவசாயப்பண்ணைக்கு மாற்றலாகிச் செல்லும் விவசாயபீடத்திற்குக் கீழே குறிப்பிட்டவாறு சேவைகளை வழங்குவதற்கு விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

(அ) காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(ஆ) மாலை 6.00 மணி தொடக்கம் மறுநாள் காலை 6.00 மணி வரை

தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர் ஒரே தடவையில் ஆகக்குறைந்தது 10 பாதுகாப்புச் சேவையாளர்களை வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். மேலும் பல்கலைக்கழகம் கோரும் திகதியிலிருந்து பணியைப் பொறுப்பேற்கத் தயாராகவும் இருத்தல் வேண்டும்.

கூறுவிலைப்படிவங்களை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 250/= மட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காசாளர் கருமபீடத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 30-06-2005 இற்கு முன்பதாகப் பிரதிப்பதிவாளர்/நிர்வாகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் சீல் பண்ணப்பட்டு வேலையின் பெயரை உறையின் இடது மூலையில் குறிப்பிட்டு *தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 20-07-2005 அன்று மாலை 3.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாக அன்று மாலை 3.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விதாரர்களோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களோ கேள்விப்பத்திரங்களைத் திறக்கும் பொழுது பிரசன்னமாயிருக்கமுடியும்.

தபால் பெட்டி இல.57,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். துணைவேந்தர்
27-05-2005 (c/43144)(46-14-34-26) யாழ்.பல்கலைக்கழகம்.

# தமிழீழ உருவாக்கத்தின் அவசியத்தையே சமாதானக்காலம் வலியுறுத்தி நிற்கிறது

## புலிகளின் பிரமுகர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜுன்2

இலங்கையில் இருந்து பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை உருவாக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைச் சமாதானக்காலம் நன்கு உணர்த்தியுள்ளது என்று தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன்.

பரந்தன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் நடராசா தலைமையில் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் ஆரம்பத்தில் தனி ஈழம் கோரினோம். பின் நோர்வே அனுசரணையுடன் சமஷ்டி அரசினை ஏற்றோம். அதனையும் தரமறுத்தது அரசு. பின் இடைக்கால தன்னாட்சி முறையை கோரினோம். அதுவும் சாத்தியப்படாத நிலையில் பொதுக்கட்டமைப்பினை ஏற்றோம். ஆனால், எதுவும் கிடைக்கவில்லை. இந்தப் பேச்சுக்களை இழுத்தடிப்புச் செய்யப்பட்ட காலத்தில் நாம் பல போராளிகளை இழக்கவேண்டி ஏற்பட்டது. அந்த நிலையில்கூட எமது தேசியத் தலைவர் பொறுமை காத்துவந்தார்.

இன்று நீங்கள் ஒவ்வொருவரும் எழுச்சி கொள்வதைப் பார்த்தால் நாம் எமது இலட்சியமான தமிழீழத்தை வென்றெடுக்கும் காலம் அண்மையில் வந்துவிட்டதை உணருகிறோம்.

ஆயுதப்போராட்டம் மூலமே எமது தேச விடுதலையை வென்றெடுக்காலம் என்பதனை மக்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ளும் இக்காலகட்டத்தில் நாம் தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்தி வெற்றிகொள்வோம் என்பது உறுதி -என்றார் அவர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை, கிளி. கூட்டுறவு ஆணையாளர் மயூரன், அரச சார்பற்ற நிறுவனங்களின் பொறுப்பாளர் தியாகராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (க-3)

## கிராமிய வங்கியில் நீண்டகாலக் கடன்

புளியங்குளம்,ஜுன்2

கனகராயன்குளம் கிராமிய அபிவிருத்தி வங்கி நீண்டகாலக் கடனடிப்படையில் சூரிய மின்கலங்கள், இருசக்கர உழவு இயந்திரங்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள் என்பவற்றை வழங்கியுள்ளது.

வங்கியின் வாடிக்கையாளர்களது பொருளாதார மேம்பாட்டிற்காக குறைந்த வட்டியில் நீண்டகாலக் கடனடிப்படையில் இவை வழங்கப்பட்டன. இதில் 44 பேருக்கு சூரியமின்கலங்களும், 4 பேருக்கு இருசக்கர உழவு இயந்திரங்களும 57 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்களும் கடனடிப்படையில் வழங்கப்பட்டன. (ஒ-355-202)

## வீரமுரசு நிகழ்வு

கிளிநொச்சி,ஜுன்2

மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் வீரமுரசு நிகழ்வும் கடந்த 29 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சி பாரதி வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் பொதுச்சுடரினை பாரதி வித்தியாலய அதிபர் இராஜேந்திரம் ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ ஊடக வளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தமான் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சிறப்புரைகளும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஒ-305-202)

## கரப்புக்குத்தி பாடசாலையில் வசதியின்மை

புளியங்குளம்,ஜுன் 2

வவுனியா வடக்கு, கரப்புக்குத்தி அ.த.க. பாடசாலை அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கிவருகின்றது.

இப்பாடசாலை தற்காலிகக் கொட்டகையில் 2 ஆசிரியர்களுடன் குடிதண்ணீர், மலசலகூட வசதிகளற்ற நிலையில் இயங்கிவருகின்றது.

இதனால், ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-355-202)

## கருத்தமர்வுக் கூட்டம்

கிளிநொச்சி,ஜுன்2

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 5 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் கருத்தமர்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ஒ-202)

## கட்டடப் பணியில் தேக்க நிலை

வேரவில்,ஜுன்2

வலைப்பாடு றோ.க. பாடசாலைக்கான புதிய கட்டடத்தின் கட்டுமானப் பணியை துரிதப்படுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

இந்தப் பாடசாலைக்குப் புதிய கட்டடம் அமைக்க ஜனவரி மாதம் அடிக்கல். நடப்பட்டது.

இதேகாலப்பகுதியில் பூநகரியில் உள்ள பாடசாலை ஒன்றிலும் புதிய கட்டடத்துக்கான கட்டுமாணப்பணி ஆரம்பிக்கப்பட்டது என்றும்- அந்தப் பணி முடிவடைந்த நிலையில் வலைப்பாடு பாடசாலையின் கட்டடப்பணி தேக்கமடைந்துள்ளதாகவும் - பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆகவே, இந்தக் கட்டுமானப்பணியை விரைவில் நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவர்கள் கேட்டுள்ளனர்.

(ஒ-404)

## நயினாமடுவில் கிராமத் தரிசிப்பு


புளியங்குளம்,ஜுன்2

தமிழழ சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களும் தியாகதீபம் திலீபன் மருத்துவமனை நயினாமடுக் கிளையினரும் இணைந்து நடத்தும சுகாதாரம் பேணும் நடவடிக்கையான கிராமத் தரிசிப்பு கடந்த 18ஆம் திகதி வவுனியா வடக்கு, நயினாமடு, 10 ஏக்கர் திட்டக் கிராமத்தில் இடம்பெற்றது.

தியாகதீபம் திலீபன் மருத்துவமனை மருத்துவர் போராளி நளா மற்றும் தொண்டர்கள், தமிழீழ சுகாதார சேவைகளின் வவுனியா வடக்கு இணைப்பாளர் ஆகியோர் இணைந்து இக்கிராமத் தரிசிப்பை மேற்கொண்டனர்.

இதன்போது தனிநபர் சுகாதாரம் பேணல், சூழல் சுகாதாரம் பேணல், தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் போன்ற கருத்துரைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

(ஒ-355-202)



புளியங்குளம் -முல்லைத்தீவு வீதியில் சன்னாசி, பரந்தன் பகுதியிலுள்ள மதகு உடைந்து பாதுகாப்பற்றுக் காணப்படுகின்றது. இந்தப் பாலத்திற்கு அருகில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் தற்காலிக பாதையொன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் பயணிப்பது கடினமாக இருப்பதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். சேதமடைந்த மதகைப் படத்தில் காணலாம். *(படம்: புளியங்குளம் செய்தியாளர்)*

## ஒட்டுசுட்டான் – புதுக்குடியிருப்பு வீதி நிதி கிடைத்தும் திருத்தப்படவில்லை

ஒட்டுசுட்டான்,ஜுன்2

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் இந்த வீதி திருத்தப்படாது மிக மோசமாகக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதி மிக நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது காணப்படுகின்றது. இதனால் இவ்வீதியால் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதியின் புனரமைப்பிற்கென ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கடந்த ஆண்டு தெரிவிக்கப்பட்டது. இவ்வாண்டும் முன்னுரிமை அடிப்படையில் இவ்வீதி புனரமைக்கப்படும் என அரச அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும், இன்று வரை இவ்வீதியின் புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லையெனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஒ-341-202)




### ஒட்டுசுட்டான் பகுதியில்

## நீண்டகாலம் புனரமைக்காததால் குளங்கள் தூர்ந்துபோகும் அபாயம்

ஒட்டுசுட்டான்,ஜுன்2

ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள நீர்ப்பாசனக் குளங்கள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படவில்லை என்றும் -

அதனால் அவை தூர்ந்துபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் -

விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் சின்னகுளம், கற்சிலைமடுக்குளம், பெருங்கருவேப்பமுறிப்புக்குளம், துவரமோட்டைக்குளம், காஞ்சூரமோட்டைக்குளம், வெடுக்குநாறிக்குளம், குடிதாங்கிக்குளம், புளியங்குளம் ஆகியவை உட்படப் பல சிறிய குளங்கள் உள்ளன. இப்பகுதியின் நீர்ப்பாசனத் தேவையை இக்குளங்கள் ஓரளவாகவே பூர்த்தி செய்கின்றன. இக்குளங்களின கரைகள் சேதமாகியும் குளங்களினுள் மண்நிரம்பியும் இருப்பதால் அவற்றின் கொள்ளளவு குறைந்துள்ளதே இதற்கான காரணமாகும்.

இக்குளங்கள் மூலம் குறைந்தளவு விவசாய நிலங்களே பயனடைகின்றன. இவற்றில் கற்சிலைமடுக்குளம் 'நியாப்' திட்டத்தின் கீழ் புனரமைக்கத் தெரிவானபோதும் அந்தப் பணி தடைப்பட்டுள்ளது.

ஆகவே, இப்பகுதியில் உள்ள நீர்ப்பாசனக் குளங்களை உடனடியாகப் புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் கோரியுள்ளனர்.

(ஒ-341)

## மீன்பிடி உபகரணங்கள் அன்பளிப்பு

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட செம்மலை கிழக்கு, நாயாறு கிராமத்தைச் சேர்ந்த 38 மீனவர்களுக்கு கெயர் நிறுவன நிதியுதவியுடன் முல்லை மக்கள் நலன்புரிச் சங்கம் ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்களை வழங்கியுள்ளது.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 29ஆம் திகதி மேற்படி கிராமத்தில் இடம்பெற்றது. தலா 20ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

தொகுதி தொகுதியாக, பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக முல்லை மக்கள் நலன்புரிச் சங்க இணைப்பாளர் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (ஒ-402-202)

## வீதி திருத்தம்

வேரவில், பல்லவராயன்கட்டு வீதி தற்போது புனரமைக்கப்படுகிறது. கிராஞ்சி பிருந்தாவனம் சந்தியிலிருந்து மன்னார் வீதியை இணைக்கும் பல்லவராயன்கட்டு சந்திவரையான 5 கிலோமீற்றர் நீளமான வீதியின் திருத்தப் பணியே தற்போது ஆரம்பமாகியுள்ளது. இவ்வீதியில் எட்டுக்கும் மேற்பட்ட சிறிய மதகுகள் திருத்தப்படவேண்டியுள்ளன.

கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக இந்த வீதி புனரமைக்கப்படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-404)

★ ★ ★

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 67 லட்சத்து 90 ஆயிரத்து 507 ரூபா செலவில் நெடுங்கேணி வீதியில் 2 கிலோமீற்றர் தூரம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் இவ்வீதிப் புனரமைப்புப் பணியானது எதிர்வரும் நவம்பர் மாத இறுதியில் நிறைவடையும் எனத் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இவ்வீதியில் 2 கிலோமீற்றர் தூரம் மட்டுமே புனரமைக்கப்படுகின்றது. 15 கிலோமீற்றர் வரையான இவ்வீதியின் மிகுதித் தூரம் குன்றும்குழியுமாகவே காணப்படுகின்றது. (ஒ-355-202)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

நோர்வே அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடனும் பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரின் அனுசரணையுடனும் இலத்திரனியல், தட்டச்சு, கைப்பணி, மரவேலை ஆகிய தொழில்சார் பயிற்சிகளை நிறைவுசெய்த 178 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தில் இடம்பெற்றது.

பெண்கள் அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் திருமதி கமலா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் பிரதிநிதி திருமதி உமா ஏற்றிவைக்க தேசியக்கொடியினை நவம் அறிவுக்கூட பொறுப்பாளர் கலைக்கோன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனக் கொடியினை நிறுவனப் பணிப்பாளர் திருமதி சுதர்சினியும் கல்லூரிக் கொடியினை மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் செல்வி அதிஸ்ராவும் ஏற்றி வைத்தனர்.

அரச அதிபரின் பிரதிநிதி செல்வி ஜெயராணி, கிளி. மாவட்ட அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் கணேசபிள்ளை ஆகியோரது உரையினைத் தொடர்ந்து நவம் அறிவுக்கூட பொறுப்பாளர் கலைக்கோனின் சிறப்புரை இடம்பெற்றது.

## சோழர் பூங்கா ஆண்டுவிழா

விசுவமடு சோழர் சிறுவர் பூங்காவின் 12ஆம் ஆண்டு நிறைவு விழாவும், சிறார்களின் மெய்வன்மைப் போட்டியும் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்கு பூங்கா நிர்வாகி திருமதி இசைஞானவதி அருந்தவநாதன் தலைமை வகித்தார். சிறார்களின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதில் தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கனும் விளையாட்டுச் சுடரினை ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கி.சண்முகரத்தினம் ஏற்றினார்.

தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தங்கன் சிறப்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள், இசையும் அசைவும் போன்றன நடைபெற்றன. தொடர்ந்து வெற்றிபெற்ற சிறார்களிற்கு பரிசில் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வைத்து பூங்காச் சிறார்களின் கற்றல் நடவடிக்கையை மேம்படுத்தும் பொருட்டு பெற்றோர் - நலன்விரும்பிகள் சங்கம் மின்பிறப்பாக்கி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியது.

இந்தச் சிறுவர் பூங்கா தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதிப் பங்களிப்புடன் ஊரக வளர்ச்சிப் பணியினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-204)

## CALLING FOR TENDERS

**DEPARTMENT OF HEALTH SERVICES, TEACHING HOSPITAL, JAFFNA**

**RENOVATION OF MEDICAL OFFICER'S QUARTERS TOILETS**

01. The Chairman, Divisional tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for renovation of Medical Officer's quarters toilets. Teaching Hospital, Jaffna will be closed at 10.00 am on 17.06.2005.

    Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 08.06.2005 on payment of a non refundable fee of Rs. 2,000/-

02. Tenders will be opened immediately after the closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorised representatives are requested to be present atthe opening of tenders.
03. Tender forms will be issued only to contractors having valid registration in grade M8 and above in the field of building construction under the Institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractor's Association of Sri Lanka (NCCASL).
04. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, T.H.Jaffna or Deposited in the tender box kept at the address appearing below on or before the closing time and the date (17.06.2005).
05. Tender documents may be inspected free of charge at the Resident Engineers Office, CECB, T.H.Jaffna.
06. For further details please contact Hospital Secretary, G.H.Jaffna.

**Chairman**
**Divisional tender Board**
**TH.Jaffna.** (C/43156)(21)

## தமிழ்ச் சங்கத்தில் நூல் வெளியீடு

கொழும்பு,ஜூன்2

'மரபு தழுவிய திருமண நாண் பூணல்' நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்குக் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் அறிமுகவுரையை கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராஜாவும் ஆய்வுரையை இளைப்பாறிய கல்வி அதிகாரி கலாநிதி குமாரசாமி சோமசுந்தரமும் நிகழ்த்தவுள்ளனர். (3-202)

## மரத்திலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் காயம்!

தென்மராட்சி,ஜூன்2

மாங்காய் பறிப்பதற்கு மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் சுமார் 20 அடி உயரத்திலிருந்து தவறிவீழ்ந்து காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை மந்துவில் கிழக்கில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த ரீ.கேதீஸ்வரன் (வயது - 31) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ஓ-117)

### புடைவைக் கடைக்கு ஆள் தேவை

**புடைவை விற்பனைக்குப் பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவை.**

தொடர்பு:
**0773086894**
**021 222 2826**
(சி-43153) (21-17-45-24)

### ஆள் தேவை

**மருந்து விற்பனைக்குப் பெண் உதவியாளர் உடன் தேவை. பழக விரும்புபவர்களும் நேரில் வரவும் (அண்மையில் வசிப்பவர் விரும்பத்தக்கது).**

தொடர்பு:
**வாகி பாமஸி**
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.
(36076) (21-17-45-24)

## CALLING FOR TENDERS

**DEPARTMENT OF HEALTH SERVICES, TEACHING HOSPITAL, JAFFNA**

**TILING TO GROUND FLOOR AND 1ST FLOOR, NTS LECTURE HALL**

01. The Chairman, Divisional tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for tiling to Lectrue hall Ground and 1st Fioor, NTS Teaching Hospital, Jaffna will be closed at 10.00 am on 17.06.2005.

    Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 08.06.2005 on payment of a non refundable fee of Rs. 2,000/-

02. Tenders will be opened immediately after the closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorised representatives are requested to be present atthe opening of tenders.
03. Tender forms will be issued only to contractors having valid registration in grade M8 and above in the field of building construction under the Institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractor's Association of Sri Lanka (NCCASL).
04. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, T.H.Jaffna or Deposited in the tender box kept at the address appearing below on or before the closing time and the date (17.06.2005).
05. Tender documents may be inspected free of charge at the Resident Engineers Office, CECB, T.H.Jaffna.
06. For further details please contact Hospital Secretary, GH.Jaffna.

**Chairman**
**Divisional tender Board**
**TH.Jaffna.** (C/43158)(21)

# நெஞ்சை விட்டகலா 31ஆம் நாள் நினைவலைகள்

**கவுந்தில், கரவெட்டி கிழக்கு**

# திருமதி பார்வதிதேவி மகாலிங்கசிவம்



**பிறப்பு 24-04-1949**

**இறப்பு 03-05-2005**

அன்புடனும் பண்புடனும் ஆதரவு காட்டியே
அகிலமதில் மாண்புடனே புகழோடு வாழ்ந்தீர்களே!
இன்முகம் காட்டியே வந்தாரை வரவேற்று
புன்முறுவல் பூத்தவண்ணம் உபசரிப்பீர்களே!
என்றும் உங்கள் நினைவு எம் நெஞ்சில் நீங்காது
பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு மறையாது
இன்று உங்கள் ஆத்மா சாந்தி பெறவேண்டுமென
ஆண்டவனை வேண்டி நிற்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சி.பரமேஸ்வரி – கனடா,
சி.வாசவன் – லண்டன்,
சி.வாசுதேவன் – லண்டன்,
சி.வாகீசன் – கனடா,
வாசுகி – ஜேர்மனி,
ஜெயந்தீ – கனடா.

தகவல்: செ.திருஞானசுந்தரம்.

(36084) (24-17-45)

# ஈழத்தமிழர்களின் உயிர்மூச்சு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றோம். ஆனால், இத்தகைய தீர்மானத்தைக் கொண்டுவரும் நிலையில் நாம் இல்லையென கைவிரித்துவிட்டனர். நாம் அவர்களுக்கு விடையாகச் சொல்லியது, நாம் உங்களிடம் நற்சான்று பெறுவதற்காகவோ பட்டிமன்றம் நடத்தவோ நாடாளுமன்றம் வரவில்லை. உங்களுக்கு ஏற்படும் அழிவைத் தடுக்கவே இவ் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்பதாகும்.

கிழக்கு மாகாணத்தில் இஸ்லாம் தழுவிய தமிழ் மக்களின் இனப்பெருக்கத்திற்கு ஈடுகொடுக்குமளவிற்கு நிலப்பரப்பு இல்லை. அம்பாறையில் பெரும்பகுதி பறிபோனதற்குச் சிங்கள இனவெறியரின் வெறிப்போக்கு மட்டும் காரணமல்ல. இஸ்லாமிய தமிழ்த் தலைவர்கள் தமது எதிர்காலத்தை எண்ணிப் பார்க்காது ஆளும் கட்சிகளின் அடிவருடிகளானதே காரணம். இம் மன்னிக்க முடியாத குற்றத்தை முதலில் செய்தவர் முதலியார் காரியப்பர். பின்பு அம்பாறை பறிபோனதன் பின்பு காலம் கடந்த நிலையில் ஞானம் பெற்று அவர் கதறி அழுத நிகழ்ச்சியும் எமக்குத் தெரியும். அவர் விட்ட தவறை நீங்களும் தொடர்ந்து செய்யாதீர்கள் என நாம் கெஞ்சிக்கேட்டோம். கிடைத்த பதில் புன்முறுவல்தான்.

### கல்லோயாத் திட்டம் பற்றி தந்தையின் தீர்க்க தரிசனம்

தென்பகுதி முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் வியாபாரத்தை நம்பி வாழ்பவர்கள். ஆகவே, சிங்கள அரசுகளிடமிருந்து ஏற்றுமதி, இறக்குமதி அனுமதிப் பங்கைப்பெற அவர்களுடன் ஒட்டி உறவு கொள்கிறார்கள். அவர்களது செயலை நாம் ஏற்பதற்கில்லை. ஆனால், நோக்கம் புரிகின்றது. எனினும், கிழக்கு மாகாண முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்கள் உழவர்கள். மண்ணோடு ஒட்டிய வாழ்வைப் பெற்றவர்கள். 2போக, 3போக விளைச்சலுள்ள பூமிக்குச் சொந்தக்காரர்கள் அவர்கள். இந்த மண்ணை இழக்கும்போது அவர்களது வாழ்வு எங்கே? எனவேதான் தொலைநோக்குச் சிந்தனையுள்ள தந்தை செல்வா 1955 இல் கல்லோயாத் திட்டம் குறித்துத் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பார்த்துக் கூறிய அறிவுரை முன்கூட்டிய எச்சரிக்கை என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. அபிவிருத்தியின் பெயரில் இங்கு அபகரிப்பு நடக்கின்றது. இதை நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டுமென்று தந்தை கேட்டபோது கிடைத்த பரிசு அவருக்கு நெற்றியில் கல்லெறிந்து காயப்படுத்தியமையேயாகும். 1955 இல் வீரகேசரியில் வெளிவந்த முதற் பக்கச் செய்தி இதுவாகும். ஆனால், தந்தை உண்மைக் கிறிஸ்தவன் என்ற வகையில் 'தந்தையே இவர்கள் செய்யும் செயல் யாதென்றறியார் இவரை மன்னித்திடுக!' எனக் கூறிய கூற்றுக்களை இன்றும் நினைக்கும் போது எம்மை மீறிக் கண்கள் கலங்குகின்றன.

எனவே, திருமலையில் இன்று எழுந்துள்ள புத்தர் சிலைப் பிரச்சினையை ஓர் புதிய நிகழ்ச்சி என்று எண்ணி நாம ஏமாறாது, இன்று ஜூன் 2 ஆம் திகதிக்கிடையில் அதனை அகற்றாவிடின் ஈழப்போர் திருகோணமலையில் தொடங்கும் என்பது திருகோணமலையில் உயிர்த்துடிப்போடு இயங்குகின்ற தமிழ் மக்கள் பேரவையின் எச்சரிக்கை மட்டு மல்ல, ஈழத்தமிழ் மக்கள் அனைவரும் ஒருங்கே திரண்டு தெரிவிக்கும் கருத்தாக சந்திரிகா அரசு கொள்ள வேண்டும். இந்த எச்சரிக்கையை சந்திரிகா அரசு பொருட்படுத்த மறுப்பின் விளைவுகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர்.

### வரலாற்று உண்மைகள்

வரலாற்றைத் திரிப்பதனால் திருகோணமலையைத் தம்வசம் ஆக்கிவிடலாம் என சிங்களவர்கள் கனவு காணுவார்களாயின் அவர்களுக்கு வரலாற்றின் அடிப்படையில் சில முக்கிய செய்திகளைத் தர விரும்புகின்றோம்.

இலங்கையில் பௌத்த வரலாறு என்ற நூலை எழுதிய வண.வலப்பொல இராகுல என்பவர் தன் நூலில் பக்கம் 44 இல் கி.மு 5 ஆம் நூற்றாண்டில் சிங்களவரின் முன்னோர் என்று கருதப்படும் விஜயன் குழுவினர் வருவதற்கு முன் இங்கு சைவம் தழைத்தோங்கி இருந்தது என்று கூறுகின்றார். புத்தமதம் இந்து மத்தில் இருந்து தோன்றியதேயன்றி, இந்து மதம் புத்த மதத்தில் இருந்து தோன்றவில்லை என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். இந்த அடிப்படையில் பார்க்கையில், ஈழத்தின் மூத்த குடிமக்கள் இந்துமதம் தழுவிய தமிழர்கள்தான் என்பது வாய்வியல் நிலையில் ஏற்கத்தக்க வரலாற்று உண்மையாகும்.

இவ்வரலாற்று ஆசிரியரின் கருத்துக்கு வழிமொழி கூறும் முறையில் சேர்.போல் பீரிஸ் தனது போர்த்துக்கேய வரலாறு (தொகுதி 2) என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார். "விஜயன் இலங்கைக்கு வருகைதருவதற்கு மிகப் பழைய காலத்திற்கு முன்பே (கி.மு 534 இல்) இலங்கையில் பெயர்பெற்ற 5 சிவன் கோயில்கள் இருந்தன. இவை இந்தியா முழுவதையும் கவர்ந்திழுத்த கோயில்களாக விளங்கின. அவையாவன:- மகா தீர்த்தத்திற்கு அருகிலுள்ள திருக்கேதீஸ்வரமும், சலவத்தாவிலும், முத்துக்குளிக்கும் பகுதிகளிலும் முக்கியத்துவம் பெற்று விளங்கிய முனீஸ்வரமும், மாதோட்டத்திற்கு அருகிலுள்ள தொண்டீஸ்வரமும், கொட்டியாரக்குடாவிற்கு எதிரேயுள்ள திருக்கோணேஸ்வரமும், காங்கேசன்துறைக்கு அருகிலுள்ள நகுலேஸ்வரமும் ஆகும். துறைமுகங்களுக்கு அருகே இக்கோயில்கள் கட்டப்பட்டிருப்பது தற்செயலாக இருக்க முடியாது. இக்கோயில்கள் இப்பகுதிகளில் வசித்த பணம் படைத்த வணிகர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே உருவாக்கப்பட்டிருகக வேண்டும்.

இங்கு குறிப்பிட்டிருக்கும் 'Mercantile population' (வணிக மக்கள்) என்பது தமிழரையே குறிக்கும் என்பது நினைவில் பதித்தற்குரியது. மேற்குறித்த வல்பொல இராகுலவும், சேர். போல் பீரிஸும் தெரிவித்துள்ள கருத்துக்கள் வரலாற்று உண்மைகளாக இருப்பதால் இவர்களைச் சிங்களவர்கள் அல்ல என்று இன்று காளான் முளைப்பது போல் முளைக்கும் சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் கூறமாட்டார்கள் என்று எதிர்பார்ப்போமாக.

### இந்துக்களின் உரோமாபுரி

திருகோணமலை மிகத் தொன்மை வாய்ந்த காலத்திலேயே தமிழர் வழிபாட்டுத்தலமாக விளங்கியது என்பதை, திருகோணமலையை நேரில் பார்வையிட்ட தூய (பரிசுத்த) பிரான்சிஸ் சவேரியார் இவ்விடத்தை (கீழைத்தேய மிலேச்சின் உரோமாபுரி) என்று கூறியுள்ளார்.

மற்றும் ரெனண்ட் பேரறிஞர் திருகோணமலை மரபு வழியாகத் தமிழர் தாயகம் என்பதை பின்வருமாறு சுவைபட மொழிந்துள்ளார். 'திருகோணமலை மிகப் பழைமை வாய்ந்த இடம். எனினும், அரசியலைவிட சமயத் தொடர்புகளையே தன் பழம் பெருமையாகப் பெற்றுள்ளது. படையெடுத்த மலபார் இனத்தவர்கள் தமது வழிபாட்டுக்குரிய பெயர் பெற்ற தலங்களில் ஒன்றாக இதனைக் கருதுகின்றனர். இன்று சுவாமி மலை என்று கூறப்படும் உச்சப் பகுதியில் ஒரு பெரும் கோபுரம் இருந்தது. அத்துடன், இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் இருந்து வந்த யாத்திரியர்களும் தங்குவதற்கு ஏற்ற ஒரு மடமும் இன்றைய பிரெட்ரிக் கோட்டையில் இருந்தது. இக் கோட்டையில் புகழ் பெற்ற ஆயிரம்கால் மண்டபமும் இருந்தது. இதையொட்டி மிகச் சுவையான மரபுக் கதைகளும் உண்டு. இக் கோயில் பற்றி 'Tamil Legends' உண்டு என்று கூறினாரேயன்றி 'Sinhala Legends' பற்றி யாதும் கூறவில்லை என்பது ஈண்டு பதியத்தக்கது.

### பிரித்தானியக் கலைக்களஞ்சியத்தில்...

அத்துடன், தமிழன் ஆதியில் குடியேறிய இடங்களில் திருகோணமலையும் ஒன்று என்பதற்கு பிரித்தானியக் கலைக்களஞ்சியம் (Encyclopedia of Brittanica) தொகுதி 22 இல் பக்கம் 47 இல் திருகோணமலை பற்றிக் கூறப்படும் பின்வரும் கூற்று சான்றாக அமைகின்றது. 'The town was one of the first Tamil settlements in Ceylon' (இலங்கையில் தமிழர் முதலில் குடியேறிய பட்டணங்களுள் திருகோணமலையும் ஒன்றாகும்) ஏறக்குறைய இதே கருத்து அமெரிக்கக் கலைக்களஞ்சியம் தொகுதி 22 இல் பக்கம் 65 இல் காணப்படுகின்றது.

### பாங்குடன் விளங்கிய பழைய கோயிலின் அமைப்பு

கோணேசர் கோயில் தமிழரின் தனி உடைமை என்பதை மேலும் நிலைநாட்டத் துணைபுரியும நிலையில் திரு. சீ.ஈ.பீரிஸ் அவர்கள் தனது 'Portuguese in Ceylon' என்னும் நூலில் தொகுதி 2 இல் அத்தியாயம் 9 இல் பக்கங்கள் 168-189 இல் கூறிய பின்வரும் பந்தியில் கொன்ஸ்ரன்டிசா- (constantdesa) கோணேஸ்வரர் கோயிலை இடிக்கும் முன் அக்கோயிலின் கட்டட அமைப்பைப் பற்றிக் கூறியவை எம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்தும் முறையில் அமைந்துள்ளது.

இவ்விதம் மிகத் தெளிவான கோணேசர் கோயிலின் அமைப்பு கூறப்பட்டிருக்கையில், இங்கே கொக்கண்ண விகாரை இருந்ததென்று பொய்யைக்கூட பொருந்தக் கூற முடியாது தத்தளிப்போர் பற்றி நாம் கூறுவதற்கு என்ன உண்டு.

### சித்திரவேல் செப்பிய சிறப்புமிகு கருத்து

இன்றுள்ள கோணேசர் கோட்டை எல்லைப் பரப்புத்தான் கோணேசுவரர் கோயிலுக்குரியது என்ற அடிப்படையில் இப்பகுதியைப் புனித நகரமாகப் பிரகடனம் செய்யும்படி இந்துக்கள் கோரிக்கையிட்டபடியிருக்கின்றார்கள். ஆனால், இப்பெருமைமிக்க கோயிலின் வரலாறு இன்றுள்ள கோணேசுவரர் கோட்டையையும் தாண்டிய அளவில் கோயிலின் நிலப்பரப்பு இருந்தது என்பதற்கு இக்கோயிலின் அறங்காவலராக விளங்கிய காலஞ்சென்ற மருத்துவர் சித்திரவேல் அவர்கள் 1968 இல் ஈழநாடு செய்தி இதழுக்கு ஆய்வுள்ளத்தோடு வெளியிட்ட அறிக்கை சான்றாக விளங்குகின்றது. இதோ அப்பகுதி.

"கோணேசுவரர் ஆலயப் பகுதி இந்துக்களுக்கே உரியது என்பது சரித்திர நிறுவனமானதொரு விஷயம். இது போர்த்துக்கேயர் காலம பற்றி டாக்டர் போல் பீறிஸ் எழுதிய புத்தகத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. டச்சுக்காரர்களும் தமது தாய் நாட்டுக்கு அனுப்பிவைத்த தஸ்தா ஏடுகளில் 1000 தூண்களைக் கொண்ட மூன்று ஆலயங்கள் பற்றியும் பாவநாச ஊற்றைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த ஆலயங்கள் 3600 அடி நீளத்தையும் 320 அடி அகலப் பரப்பினையும் கொண்டு அமைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போதுள்ள கோணேசுவரர் ஆலய வாயிலிருந்து பிரட்ரிக் கோட்டை வாயில் வரையுள்ள தூரம் 3100 அடிகள் மட்டுமே. எனவே, பிரட்ரிக் கோட்டையிலிருந்து 500 அடி வரையான தூரத்திலுள்ள நிலமும் இந்த ஆலயத்திற்குச் சேர்ந்த ஆதனமே என்பது குறிப்பிடத்தக்கது. 1624 ஆம் ஆண்டில் போர்த்துக்கேய கட்டன் கொன்ஸ்டன்டைன்டிசா இந்த ஆலயத்தை இடித்து, இந்த ஆலயத்தைக் கட்ட உபயோகிக்கப்பட்ட கற்களைக் கோட்டைகட்டப் பயன்படுத்தினான்.

### புள்ளி விவரம் புட்டுக் காட்டும் உண்மை

இது மட்டுமல்ல, இன்று திருகோணமலை சிங்கள மக்களின் படையெடுப்பினால் பெருமளவு பாதிக்கப்பட்டடிருப்பினும் தொடக்க காலம் தொட்டு தமிழர்தான் திருகோணமலையில் குடியேறி வாழ்ந்தனர் என்பதற்கு மிகப் பழைய காலம் தொட்டு இன்றுவரை ஆக்கப்பட்ட குடிமக்கள் தொகை (Census) அறிக்கை சான்றாய் இருக்கும். இதனை நிலைகாட்டி 'Time of Ceylon' 20.09.1968 இல் வெளிவந்த கட்டுரையின் முக்கிய பகுதி அப்படியே இங்கு தமிழில் எடுத்தாளப்பட்டுள்ளது.

| | மொத்த மக்கள் தொகை | கீழ்நாட்டுச் சிங்களவர் | கண்டியச் சிங்களவர்கள் |
|---|---|---|---|
| 1881 | 22,197 | 935 | - |
| 1891 | 25,745 | 1109 | - |
| 1901 | 28441 | 532 | 671 |
| 1911 | 29,755 | 383 | 755 |
| 1921 | 34,112 | 768 | 733 |
| 1946 | 75,926 | 11,191 | 4,515 |
| 1953 | 83,917 | 10,262 | 5,034 |
| 1963 | 138,553 | 22,002 | 17,923 |
| 1971 | 191,989 | 29,008 | 26,300 |

### 1898 இல்...

1898 இல் திருகோணமலையில் அரச உதவி முகவராய் இருந்த திரு. சி.எம்.லூசிங்ரன் இலங்கைக்கு வரும் ஒருவர். ஓர் ஆண்டுக்கு ஒரு சிங்கள மனிதனைச் சந்திக்காது இலங்கையில் எந்தப் பகுதியிலாவது இருக்க முடியுமா என்பது நம்பமுடியாத ஒன்றாகும். ஆனால், திருகோணமலை வரும் பார்வையாளருக்கு இந்நிலை ஏற்படலாம். இங்கு வாழும் சிங்கள மக்கள் காசிங்ஸ் அல்லது ஸ்காலெராவில் வாழும் பிரெஞ்சு மக்கள் அல்லது சேர்மன் மக்களிலும் பார்க்க எண்ணிக்கையில் குறையுடையவர்களாக இருக்கின்றார்கள். அத்தோடு, மேலும் இலங்கையில் உள்ள எந்தவொரு பட்டணத்திலாவது சிங்கள மொழி பேசும் ஒருவரையாவது காணாமல் இருப்பது நம்பமுடியாத நிகழ்ச்சி. எனினும், திருகோணமலையைப் பொறுத்தவரை இது உண்மையாகும்.

### 1901 இல்...

1901ஆம் ஆண்டில் எடுக்கப்பட் குடிமக்கள் மதிப்பீட்டில் திருமலையில் மொத்த எண்ணிக்கையான 28,441 மக்களில் 532பேர் கீழ்நாட்டுச் சிங்களவராகவும் 671 பேர் கண்டிச் சிங்களவராகவும் இருந்தனர். அப்போது இலங்கை இந்தியத் தமிழர்கள் ஒன்றாகக் கருதப்பட்டு அவர்களது எண்ணிக்கை 17, 069 ஆகவும் முஸ்லிம்களது எண்ணிக்கை 8258 ஆகவும் அமைந்து இரண்டாவது பெரும் குழுவாக விளங்கினர்.

### 1911 இல்...

1911ஆம் ஆண்டு குடிமதிப்பீட்டின் போது கீழ்நாட்டுச் சிங்களவரின் எண்ணிக்கை உண்மையில் 383 ஆக வீழ்ச்சியுற, கண்டியச் சிங்களவரின் எண்ணிக்கை 755ஆக உயர்ச்சியுற்றது. தமிழரின் எண்ணிக்கை 1% உயர்வுற்றது.

### 1921 இல்...

குடிமதிப்பீட்டின்போது எல்.ஜே.பி. ரேணா குடிமக்கள் தொகை கணிப்பீட்டிற்கு முந்திய இடைக்காலப் பகுதியில் 1890ஆம் ஆண்டில் திருமலையில் புகையிலை உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வந்ததினால் தமிழரின் எண்ணிக்கை மேலும் கூடியது.

ஆனால், 1891 - 1901 காலப்பகுதியில் முன்னைய புத்தாண்டுக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டது. காரணம் புகையிலையைப் பயிரிடுகையில் ஏற்பட்ட வீழ்ச்சியேயாகும். மேலும், 1905இல் கடற்படைத்தளம் மூடப்பட்டதினால் 1901 - 1911 காலப்பகுதியிலும் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனால், புகையிரதப்பாதை திருமலைக்கு திறந்துவிடப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் தொகை மேலும் கூடியது.

இந்நூற்றாண்டின் முதல் அரைப்பகுதி முடியும் வரை தமிழர்களே திருகோணமலையில் மிகக் கூடிய எண்ணிக்கையுடையவராக இருந்தனர்.

### 1946 இல்...

சேர். ஆதர் ரணசிங்க தனது 1946இல் குடிமக்கள் அறிக்கையில் 1921 புள்ளி விவரங்களோடு 1941 புள்ளி விவரங்களை ஒப்பிட்டு இலங்கைத்தமிழர் இம்மாவட்டத்தில் இன்னும் எண்ணிக்கையில் அதிகமாக விளங்கினாலும், அவர்களின் எண்ணிக்கைப் பெருக்கு வீழ்ந்துவிட்டது என்றும் 1921இல் 53.2%மாக இருந்த எண்ணிக்கை 1946இல் 40.1% மாக வீழ்ந்துவிட்டது என்றும் கூறியுள்ளார். அத்தோடு, அவர் 1921 இல் 2.7% ஆக விளங்கிய கரைநாட்டுச் சிங்களவர் 16.7% ஆகவும் கண்டியச் சிங்களவர் 2.1% இலிருந்து 6% ஆகவும் அதிகரித்துள்ளளனர் என்றும் எடுத்துக்காட்டி திருமலைப் பட்டணத்தைப் பொறுத்தவரையில் சிங்களவர்களே இரண்டாம் இடத்தை வகிக்கின்றனர் என்றும் திருமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை முஸ்லிம்களே இரண்டாம் இடத்தைப் பெறுகின்றனர் என்றும் கூறியுள்ளார்.

### 1953 இல்...

1953 இல் திரு.எச்.பீரிஸ் நடத்திய மக்கட் தொகை மதிப்பீட்டிலும் தமிழ் மக்களே தனிப்பட்ட பெரும் பிரிவினராகக் காணப்பட்டனர். எனினும், மொத்த மக்கட் தொகையுடன் ஒப்பிடும் போது அவர்கள் பெருக்கத்தைக் காட்டவில்லை என்பது தெரியவருகின்றது. அதேவேளையில் கரையோரச் சிங்களவர்களினதும் கண்டியச் சிங்களவர்களினதும் முஸ்லிம்கள், பறங்கியர், யூரேசியர் ஆகியோர்களினதும் எண்ணிக்கையில ஏற்றம் காணப்பட்டிருந்தது.

### 1963 இல்...

திருமலையில் தமிழரின் எண்ணிக்கைக்கும் சிங்களவரின் எண்ணிக்கைக்கும் இடையேயுள்ள இடைவெளி சிங்களவர் குடியேற்றத்தினால் சுருங்கிவிட்டது. 1963 ஆம் ஆண்டின் குடிமக்கள் தொகையின் படி மொத்தம் இலங்கைத் தமிழரின் தொகை 51,060 ஆகும். கீழ்நாட்டுச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் ஆகியோரின தொகை 39,950 ஆகும்.

எனினும், இலங்கை முஸ்லிம்களின் தொகை இரண்டாம் இடத்தை வகிக்கும் முறையில் 41,950 ஆக விளங்கியது.

### 1971 இல்...

குடித்தொகையின் படி கீழ்நாட்டுக் கண்டிச் சிங்களவரின் கூட்டு எண்ணிக்கை 53,308 ஆகும. இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 67,516 ஆகவும் இந்திய மரபுவழித் தமிழர்களின் எண்ணிக்கை 5,739 ஆகவும் விளங்கியது. எனவே, தமிழர்களின் கூட்டுத்தொகை 73,255 ஆக விளங்கியது. அத்துடன், முஸ்லிம்களின் எண்ணிக்கை 60,698 ஆகவும் விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. எம் ஆய்வுத் தேவையின்படி பார்க்கையில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் உள்ள எண்ணிக்கை வேறுபாடு மிகச் சிறிய தொகையாகிய 17,974 என்பது மிக்க ஆழ்ந்த கவலையுடன் குறிப்பிடத்தக்கது. நோய் முற்றிவிட்ட தன்மையை மேற்குறிதத குடித்தொகை மதிப்பீடு புட்டுக்காட்டுகின்றது.

### 1981 இல்...

1981 இல்எடுக்கப்பட்ட குடிமக்கள் தொகை ஏற்ற முறையில் அமைந்துள்ளதோ நாம் அறியோம். பல தில்லுமுல்லுக்கள் இக்குடித்தொகை மதிப்பீட்டில் இடம்பெற்றதாக அறியப்படுகின்றது. எனினும், எமக்குக் கிடைத்துள்ள மக்கட் தொகை மதிப்பீடு எமக்கு ஏற்பட இருக்கும் பெரும பேராபத்தை அச்சுறுத்தியபடி இருக்கின்றது.

1981 இக்குடித்தொகையின்படி மொத்த மக்கள் தொகை 2,55,948, இலங்கைத் தமிழரின் எண்ணிக்கை 87,760 சிங்களவரின் எண்ணிக்கை 85,503, முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 75,039, இந்தியத் தமிழரின் எண்ணிக்கை 5,372, பறங்கியரின் எண்ணிக்கை 1,169, மலே முஸ்லிம்களின் எண்ணிக்கை 831, ஏனையோரின் எண்ணிக்கை 274. விழுக்காட்டின் அடிப்படையில் பார்க்கையில் இலங்கைத் தமிழர் 34.3%, சிங்களவர் 33.4%, இந்தியத் தமிழர் 2.1%, முஸ்லிம்கள் 29.3%, பறங்கியர் 0.5%, மலே மக்கள் 0.3%, ஏனையோர் 0.1 % ஆக விளங்குவது தெரியவருகிறது.

### 1991-2001

இலங்கையில் நிலவும் அரசியல் நெருக்கடி காரணமாக 1991 இல் குடித்தொகை மதிப்பீடு எடுக்கப்படவில்லை. 2001 இல் மக்கள் தொகை கணக்கு எடுக்கப்பட்ட முயற்சி, நிலவும் அரசியல் நெருக்கடி காரணமாகக் கைவிடப்படுகின்றது என்று குடித்தொகைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தமிழ் மக்கள் பெருமளவு தம் தாயகத்தில் இருந்து குடிபெயர்ந்த நிலையில் - வெளியேற்றப்பட்ட நிலையில் - எடுக்கப்படும் மதிப்பீடு நிலைமையைக் குழப்புமேயன்றி தெளிவை ஏற்படுத்தாது. ஆனால், திருமலையில் தமிழ் மக்களின் எண்ணிக்கை படுவீழ்ச்சி உற்றுவருவதை நாம் உணராமல் இருக்க முடியாது.

ஒரு மணித்துளியாவது நாம் தூங்காது விழிப்போடு இருந்தால்தான் திருகோணமலையைக் காப்பாற்றமுடியும் என்பதை நாம் உணர்ந்தே ஆகவேண்டும்.

### வடமேற்கை இழந்துவிட்டோம் வடக்கு - கிழக்கையாவது காப்பற்றுவோம்

தமிழர் மரபுவழித் தாயகம் வடக்கையும் கிழக்கையும் சிலாபத்துறை வரை இணைத்து பரந்து கிடந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏராளம் ஏராளம். 01.01.1803 இல் அரோசிமித் அலுவலக அறிக்கையாக வெளியிடப்பட்ட இலங்கைத் தீவின் படத்தினைப் பார்ப்போர் இவ்வுண்மையை உணர்வர். இங்ஙனம் இவ்வரலாறு உள்ளபோதிலும் ஈழத்தமிழ் நிலத்தில் இழக்கக் கூடாத எத்தனையோ பகுதிகளை இன்று இழந்துவிட்டோம். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் ஈழத்தின் வடமேற்கை நாம் இழந்துவிட்டோம். ஈழத் தமிழகத்தின் கிழக்குப் பகுதியை, குறிப்பாக எம் உயிரனைய திருமலையை அடுத்தடுத்து ஆட்சிபீடம் ஏறும் ஒவ்வொரு சிங்கள அரசும் விழுங்கி ஏப்பமிட வஞ்சனை தோய்ந்த சூழ்ச்சிகளை உருவாக்கியபடி இருக்கின்றன என்பதை அறிவுடைய எந்தத் தமிழனும் மறக்க முடியாது - மறுக்க முடியாது.

மறைந்தும் மறையாத நம் சிந்தனைச் சிற்பி சி.கதிரவேற்பிள்ளை அவர்கள் தனக்கேயுரிய ஆழ்ந்த சிந்தனைத் தெளிவோடு பின்வரும் பொருள் பொதிந்த கூற்றினை மொழிந்துள்ளார். கொழும்பை இழ, திருகோணமலையைப் பெறு (Lose Colombo and gain Trinco) என்று கூறியிருப்பதை ஒவ்வொரு தமிழனும் சிந்தித்துச் செயல் வடிவம் கொடுக்கவேண்டும்.

### திருமலை எம் உயிர் மூச்சு

தமிழன் தமிழனாக ஈழத் தமிழகத்தில் வாழ வேண்டின் உலகவர் முன் யாமும் மானிடர் தான் என்று மதிக்கப்படவேண்டின் Man who holds Trincomalee holds the key to the Indian Ocean) எவன் திருகோணமலையை வைத்திருக்கின்றானோ அவன் இந்துமாப் பெருங்கடலின் திறவுகோலை வைத்திருக்கின்றான் எனறு 19 ஆம் நூற்றாண டில் பிரித்தானிய பேரரசின் தலைமை அமைச்சராக விளங்கிய (Lord Wellington) பெருந்தகை வெலிங்டன் கூறிய கூற்று உலகை கடலால் ஆண்ட பிரித்தானிய பேரரசின் கூற்று எனவும் நாம் கொள்வோமாக. எனினும், கிழக்கின் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்க் குடிமக்கள் இன்னும் இவற்றை உணராமல் இருப்பது எமக்கு வியப்பைத் தருகின்றது. வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் 6337 போராளிகளையும், வன்னி மாவட்டம் 2462 போராளிகளையும், முல்லைத்தீவு மாவட்டம் 1252 போராளிகளையும், மன்னார் மாவட்டம் 1015 போராளிகளையும் [illegible] மாக 11066 போராளிகளை விடுதலை[illegible] வித்தாக்கியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் 4418 போராளிகளையும்,

(14ஆம் பக்கம் பார்க்க)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் பார்த்திப வருஷம் வைகாசித் திங்கள் 20ஆம் நாள் (03.06.2005) வெள்ளிக்கிழமை காலை 7.00மணி முதல் 8.40 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| | | |
|---|---|---|
| மணமகன்<br>எமது புத்திரன்<br>திருவளர் செல்வன்<br>**இராமகிருஷ்ணா**<br>அவர்களுக்கும் |  | மணமகள்<br>எமது புத்திரி<br>திருவளர் செல்வி<br>**சுபாசினி**<br>அவர்களுக்கும் |

திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு அராலி முத்துமாரி அம்மன் கோயிலில் திருமணம் நடைபெறவுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி இராமலிங்கம் குடும்பத்தினர்.
20, வாசிகசாலை வீதி.
அக்கரைப்பற்று.



திரு.திருமதி சின்னப்பு பவளக்கொடி குடும்பத்தினர்.
அராலி தெற்கு.
அராலி. (36086)(26-14-45)

## வரணி பொதுநூலக பரிசளிப்பு விழா

வரணி,ஜூன்2

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி வரணி பொதுநூலகம் நடத்திய பொது அறிவுப்போட்டி, வாசிப்புப் போட்டி, பேச்சுப போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசளிப்பு சமீபத்தில் இடம்பெற்றது.

நூலக மண்டபத்தில் நடந்த இந்நிகழ்விற்கு அபிவிருத்திச்சபைத் தலைவர் சி.அருணாசலம் தலைமை வகித்தார். விழாவில் வடபிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரிப் பிரதேச சபைச் செயலாளர் ந.பாலச்சந்திரன், வரணி மகாவித்தியாலய அதிபர் க.சுப்பிரமணியம், கொடிகாமம் அரசியல்துறைப் பொறுப்பாளர் மு.இரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-170)


**றஷியாவில் மருத்துவக் கல்வி**

Doctor Of Medicine

2005 இற்கான கல்வியாண்டு

செப்ரெம்பரில் ஆரம்பமாகிறது

IN TVER STATE MEDICAL ACADEMY

விசேட சலுகைகளுடன்

உங்களுக்கு உதவ நாம் தயார்!

மேலதிக தகவல்களுக்கு:

M.M.Remance

Mob:- 0776183055 Hom:- 0214590492

(சி.43154) (39-14-45-26)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான

திருமதி **உதயதேவி கனக இளந்திரையன்**

அவர்களின் அருமைத் தாயார்

திருமதி **மயில்வாகனம் மாணிக்கம்**

அவர்களின் மறைவுச்செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆற்றொணாக் கவலையும் அடைகின்றோம். துயரத்தில் ஆழ்ந்துள்ள குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்து, ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்தித்து, அன்னாருக்குக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி,**
**கரம்பொன், ஊர்காவற்றுறை.**
(36080)(32-14-45-26)

அதிபர், ஆசிரியர்கள்.
மாணவர்கள், ஊழியர்கள்.
பெற்றோர் ஆசிரியர் சங்கம்.


**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 683 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 31-5-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4506485-4521436 |

லக்கினம் மீனம்

வெற்றி இலக்கங்கள்

08 50 53 54

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 17,37,650/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இலை | 3,30,151 | 10/- | 33,01,510/- |
| 2.இலக்கங்கள் | 30,367 | 20/- | 6,07,740/- |
| 1.இல லக்கினம் | 30,013 | 30/- | 9,00,390/- |
| 2.இல லக்கினம் | 2,730 | 100/- | 2,73,000/- |
| 3.இலக்கங்கள் | 842 | 500/- | 4,21,000/- |
| 3.இல லக்கினம் | 54 | 5,000/- | 2,70,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 3,94,187 | - | 73,25,890/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 73,25,890/-

4519548-0-06
4510456-6-63
4509228-2-85
4514290-8-78
4514798-6-85


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்2

தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு பிள்ளையாருக்கு அபிசேகம் நடைபெற்று 8 மணிக்கு வசந்த மண்டபப்பூசை இடம்பெறும். தேர் ஆரோகணம் முடிவடைந்ததும் பஞ்சமுக அர்ச்சனை இடம்பெறும். நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழா நடைபெறும். (3-204-13)

★ ★ ★

கட்டப்பிராய் ஆலடி ஞானவைரவர் தேவஸ்தான மகா கும்பாபிசேகம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். இந்த நிகழ்வைத் தொடர்ந்து தசதர்சனம், மகாஅபிசேகம், சம்பாவனைகள் இடம்பெறும். (3-180)

★ ★ ★

மானிப்பாய் வடக்கு, உச்சியோடை பெரிய தம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது. (3-90)

★ ★ ★

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (3-202)

★ ★ ★

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாஷையூர் கடலில் அமைந்துள்ள புனித அந்தோனியார் திருச்சொரூபத்தில் ஆராதனை நடைபெறும். நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நவநாள் ஆராதனைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறவிருக்கின்றன. எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும் மறுநாள் காலை திருவிழாத் திருபபலி ஒப்புக்கொடுத்தலும் இடம்பெறும். (3-51-202)

★ ★ ★

வவுனியா வடக்கு புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய கும்பாபிசேக தின சகஸ்ர சங்காபிசேகம் இன்று காலை 7.22 மணிக்கு நடைபெறவுளளது. விநாயகர் பெருமானுக்கு விசேட பூசைகள, அபிசேகம் என்பன இடம்பெறும். எதிர்வரும் 6ஆம் திகதி பெருந்திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (3-204)

## ஈழத்தமிழர்களின் உயிர்மூச்சு...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை 2516 போராளிகளையும் களத்தில் இழந்திருக்கின்றன. தமிழ் ஈழத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் திருகோணமலை முன்னிலை வகிக்கின்றது. அண்மையில் ஏற்பட்ட கடல்கோளினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் திருகோணமலையும் ஒன்று. இந்த இழப்புக்கள் எமக்கு இடித்துரைக்கும் உண்மைகள் என்ன? ஓர் இனம் எதனையும் இழக்கலாம். மீண்டும் வாழ்வு பெறலாம். ஆனால ஓர் இனம் தன் தாயகத்தை இழந்து விட்டால் அந்த இனம் வேரோடும் மண்ணோடும் சாய்க்கப்படும் எம் மண்ணைக் காக்க நாம் போராளிகளைப் புதைக்கவில்லை. மாறாக, போராளிகளை விதைத்துள்ளோம். இதை நாம் உணர மறுப்பின் வரலாறு எம்மீது வசை பாடும்.

நம் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் தமிழீழத்தை, அதன் மண்ணை எப்படிக் காப்பாற்ற வேண்டும் என்பதை பின்வருமாறு பாடுகின்றார். நாமும் அவருடன் சேர்ந்து

எங்கள் அருந்தமிழ் மண்ணில்
இராவணனார் பொன் மண்ணில்
அங்குலமும் இனி நாங்கள்!
அயல் வெறியர் ஆள விடோம்!
கங்குல் விலகின காண்...!
எங்கள் தமிழ் மேல் ஆணை!
தங்கத் தமிழ் ஈழம்!
தமிழனுக்கே! தமிழனுக்கே!

என்று முழங்கி எம் தமிழீழம் தொடர்ந்து எம் தமிழீழமாக விளங்க திருகோணமலை அதன் தலைநகராக விளங்க இன்றே உறுதி பூணுவோமாக! ★

## இடம்மாற்றம்

இதுவரை காலமும் 181, நவீன சந்தை, யாழ்ப்பாணம் உட்புறத்தில் இயங்கி வந்த

**கவிதாஸ் எலக்ரோனிக்ஸ்**

ஸ்தாபனமானது

இன்று (02.06.2005) வியாழக்கிழமை முதல் 127/12, 127/13, சீமாட்டி கீழ்ப்புறமுள்ள ஜுபிலி பஜார் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

ஜுபிலி பஜார், யாழ்ப்பாணம். - **உரிமையாளர்.**

(36088) (39-14-45-26)

# மரண அறிவித்தல்கள்

## எஸ்.ஈ.நவரத்தினராசா

(இளைப்பாறிய தபாலதிபர்)



ஏழாலை தெற்கைச் சேர்ந்தவரும் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் வசித்தவருமாகிய இளைபபாறிய தபாலதிபர் எஸ்.ஈ.நவரத்தினராசா 30-05-2005 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியை செல்வரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் கிறிஸ்ரி ஜெயசீலன் (F.R.Video & Studio உரிமையாளர்), ஜறீன் ராதா (U.K.), வெஸ்லி தேவசீலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அமீலியா மாலதி ஜெயசீலன் (முன்னாள் கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த கல்லூரி ஆசிரியை), இரவீந்திரகுமார் (U.K.), மலர்விழி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற திரு. திருமதி P.A.சவுந்தரையாவின் அன்பு மகனும் இரத்தினாவதி, பத்மாவதி, கமலாவதி, கருணைராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சபாரத்தினம், இராசரத்தினம், ஜெயராசா, இன்பராணி, அழகராஜா (ஆஸ்திரேலியா), தேவரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அரியமலர் (ஆஸ்திரேலியா), தவராஜா ஆகியோரின் அன்புச் சகலனும் அன்றா, ஜோயல், சிந்துஜா, ராஜினி, அபிலக்ஷா, ரஞ்சிதா, யாமினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (02-06-2005) வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நல்லடக்க ஆராதனையின் பின் வத்தளை பொதுசேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

263/2-½ காலி வீதி,
கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி: 2370778 & 0777 316634.

தகவல்:
கிறிஸ்ரி ஜெயசீலன்
*(மகன்).*

(சி-43157)(26-14-45)

## திருமதி இராசரத்தினம் நாகேஷ்வரி

(புலவர் வீதி, நவாலி வடக்கு)



நவாலி வடக்கு - புலவர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் நாகேஷ்வரி கடந்த 31-05-2005 செவ்வாய்க்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் முத்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் இராசரத்தினம் (ஓய்வுபெற்ற சாரதி, விவசாயத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் இராசேந்திரம் (காலஞ்சென்றவர்), புவனேஸ்வரி, நாகராஜா (காலஞ்சென்றவர்), பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் உஷா, உமா, ஸ்ரீகாமராஜ், பத்மஸ்ரீதரன் (London), அனுஷா ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தையா செல்வராசா, ஸ்ரீகாமராஜ் சுலோஜினா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுகன்ஜா, லாவண்யா, நிரோஸ், சுலக்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் திருமதி குமரையா தங்கரத்தினம், வில்வராசா ருக்குமணிதேவியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-06-2005) வியாழக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய். (சி-43161)(26-14-45)

தகவல்:
மு.இராசரத்தினம்
*(கணவர்).*

## திருமதி குமாரசாமி தங்கச்சியம்மா



வருத்தலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி தங்கச்சியம்மா நேற்று (01.06.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிராமசபை லிகிதர் குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகராஜா (கூட்டுறவுச் சாரதி) அவர்களின அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வைகுந்தநாதன் (கணக்காளர்), அருணகிரிநாதன் (ஆவரங்கால்), ஏகாம்பரநாதன் (பிரான்ஸ்), பத்மலோஜினி (பிரான்ஸ்), கமலலோஜினி (சுவிஸ்), மீனலோஜினி (பிரான்ஸ்), நாகலோஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கௌரிதேவி (ஆவரங்கால்), பற்குணசீலன் (பிரான்ஸ்), மகேஸ்வரன் (சுவிஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), சிவபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோகுலநந்தன், கௌசிகா, ஜனிதா, கிரிஷாந்த், வக்சலா, அஜந்தன், அபிஷா, கோபிநாத், தர்மிகா, கார்த்திகா, துஷாந்த், அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால்.
T.P.: 0777 109298/0777 666323

தகவல்:
கு.அருணகிரிநாதன்
(மகன்).

(36089) (39-14-45-26)

## நன்றிப் பலியில் இணைய அழைப்பு

திருமதி

### அருளம்மா மத்தாயஸ்

எமது அம்மாவின் மரணச் செய்திகேட்டு தனிப்பட்ட விதமாகச் சந்தித்தும், பல்வேறு வழிகளில் அனுதாபச் செய்திகளை அனுப்பியும் மரணச் சடங்கில் பங்குகொண்டும் இன்னும் சிறப்பாக செபத்திலே ஒன்றிணைந்த உங்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், எதிர் வரும் 04.06.2005 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத்துறை, செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப் புக்கொடுக்கப்படவுள்ள நன்றித் திருப்பலியில் ஒன்றிணைய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அருள்திரு அன்ரன் மத்தாயஸ்.

(36096)(38-16-18)

## வேலணை பிரதேச சபை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் புதிதாக கட்டடங்கள், மதில்கள் கட்டுபவர்கள் மற்றும் கட்டடத் திருத்தவேலைகளை மேற்கொள்ளுபவர்கள் அனைவரும் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச்சட்டத்தின் 47ஆம் பிரிவின் கீழ் 01.06.2005ஆம் திகதியிலிருந்து பிரதேச சபையின் முன்னனுமதியினைப் பெற்ற பின்னரே கட்டடங்களை அமைத்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாது கட்டப்படும் கட்டடங்கள் அனைத்தும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அவை அகற்றப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**வேலணை.**

(சி-43167)(38-16-18)

ஓம் விராட் விஸ்வப் பிரமநே நம

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 19 - 02 - 1940



விண்ணில் 14 - 05 - 2004

### அமரர் நல்லையா

திதி :- வைகாசி ஏகாதசி

ஆண்டு ஒன்று சென்றதுவோ - ஐயா நீங்கள் எமைப் பிரிந்து எட்டாவது மாதத்தில் உங்களுடன் ஏக புத்திரனையும் ஏனையா அழைத்துச் சென்றீர்கள்? ஆறாது எம் துயரம் ஆற்றுவார் யாருமில்லை. உங்கள் ஆத்மசாந்திக்காக வேண்டி நிற்கும்

மனைவி, மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

காளிகோயிலடி, தாவடி வடக்கு, கொக்குவில். (36099)(38-16-18)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை செல்லத்துரை



உடுவிலைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் 29.05.2005 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் இராசா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நல்லையா, இராசம்மா, சின்னத்துரை, பாறுப்பிள்ளை, தங்கம்மா மற்றும் தம்பு, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவராஜசிங்கம், சற்குணசிங்கம், ரவீந்திரராணி, ஸ்ரீராஜசிங்கம், ஜெயராஜசிங்கம், காலஞ்சென்ற நிர்மலராணி, ஜெகதாசன், சுதாராணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பிரேமாவதி, தவஈஸ்வரி, நடராசா (அமரர்), கலையரசி, கிருஸ்ணவேணி, சாந்தினி, தவயோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2005) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரது இல்லத்தில் இருந்து பிற்பகல் ஒரு மணிக்கு சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

*கந்தரோடை மேற்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
செ.சிவராஜசிங்கம்
(பவா - மகன்).

(36092)(38-16-18)

## மீசாலை வீட்டில் இராட்சதப் பறவை

தென்மராட்சி,ஜூன்2

மீசாலை வடக்குப் பகுதியில் இராட்சதப் பறவையொன்று பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மழைபெய்து கொண்டிருந்த வேளையில் இப்பறவை மீசாலை வடக்கு டச்சு வீதியில் உள்ள வீடொன்றின் முற்றத்தில் வீழ்ந்ததாகக் கூறப்பட்டது.

அதனைப் பிடித்த வீட்டுக்காரர் கோழிக்கூடு ஒன்றில் அடைத்துவைத்துள்ளனர்.

இப்பறவையினை பெருமளவு மக்கள் பார்வையிட்டுவருகின்றனர்.

வெளிநாடு ஒன்றிலிருந்து பறந்துவந்த வேளை இடிமின்னல் தாக்கத்தினால் இந்தப் பறவை அப்பகுதியில் வீழ்ந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## 8 அடி நீள முதலை நுணாவிலில் பிடிபட்டது

யாழ்ப்பாணம்,ஜூன்2

நுணாவில் மேற்கில் நேற்றுமுன்தினம் இரவு 8 அடி நீளமுதலையொன்று பிடிப்பட்டது. அன்றிரவு 10.30 மணியளவில் அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்களால் இந்த முதலை பிடிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையிடம் நேற்று இந்த முதலை ஒப்படைக்கப்பட்டது.

## கலை இலக்கிய போட்டிகள்

காரைநகர்,ஜூன்2

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் நடைபெறவுள்ள பிரதேச மட்ட கலை இலக்கிய விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கலை இலக்கியப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை கலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

கவிதை, கட்டுரை, சித்திரம், சிறுகதை, சிறுநாடகப் போட்டி, நாட்டார் பாடல் என்பன காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் காரைநகர் பிரதேசத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். (எ-73)


### விற்பனையாகிறது

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான
**பரீட்சை வழிகாட்டி**
(S.S. ஆனந்தன்)
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-43169)(38-16-18)

### காசாளர் தேவை

மந்திகையில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பெண் காசாளர் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்
ஜெயபாலன்
தொ.இல.0777 701315
(சி-43168)(38-16-18)

### திருமணக்கார்

குளிரூட்டப்பட்ட நிசான் சனி திருமணத் தேவைகளிற்கு வாடகைக்கு உண்டு.
T.P.: 0777 283795 (C-42899)

### நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
**அறிந்தும் அறியாமலும்** (ரீலஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

### நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த
காட்சிகள: 11.00, 3.00, 7.00 (பு.நே.)



**சந்திரமுகி** (ரீலஸ்)

### ராஜா யாழ்ப்பாணம்.

புதிய வெளியீடு
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி, லக்ஸ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த
**சூர்யா** (ரீலஸ்)
ஆக்ஷன் படம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

### கல்பேட்ஸ் விற்பனைக்கு

அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் கல்பேட்ஸ் தொகையாக (மொத்தமாக) விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
தொலைபேசி இல.: 0602212926

(சி-43162)(38-16-18)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலசுப்பிரமணியம் நாகம்மா



வேலணை வடக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் நாகம்மா அவர்கள் நேற்று (01.06.2005) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் நயினாதீவைச் சேர்ந்த (3 ஆம் வடடாரம்) பாலசுப்பிரமணியம் (முன்னாள் காசாளர் நயினை நாகபூசணி அம்மன்கோயில்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் (கந்தையா ஸ்ரோர்ஸ், அம்பலாங்கொடை) - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் கந்தையா (கந்தையா ஸ்ரோர்ஸ், அம்பலாங்கொடை) - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு பெறாமகளும் வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் பத்மநாதன் (கணக்காளர் - அம்பிகை களஞ்சியம் - யாழ்ப்பாணம்), பாலராஜேஸ்வரன் (பொறியியலாளர் - பொஸ்வானா), நாகராஜேஸ்வரி (ஆசிரியை - துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை), சுந்தரேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் தியாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சகஸ்தினாவதி (சித்திரா), சாந்தினி (ஆசிரியர் - பொஸ்வானா), சுகிர்தலிங்கம் (தபாலகம் - யாழ்ப்பாணம்), சிவறஞ்சன் (கோல்டன் ஈகிள் பாதுகாப்பு ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற குழந்தைவேலு (கந்தையா ஸ்ரோர்ஸ் - அம்பலாங்கொடை, K.K.S. றான்ஸ்போட்) மற்றும் நடராஜா (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுஹாசினி (H.N.D.M. மாணவி - யாழ்.உயர்தொழில்நுட்பக் கல்லூரி), பிரணவன், செந்தூரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள்), பிரஹாசினி (பொஸ்கோ), கோபிகன் (பொஸ்வானா), சிந்துஜன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), அபிராமி (பொஸ்கோ), விதுசாஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.06.2005 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி,*
*கெனடிலேன்,*
*திருநெல்வேலி.*

தகவல்:
பா.பத்மநாதன் (மகன்).
(36095)(38-16-18)

### கந்தர் பொன்னம்பலம்

பூநகரி, சித்தங்குறிச்சியைப் பிறப்பிடமாகவும், 23/5, திருவள்ளுவர் வீதி, உக்கிலாம்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி கந்தர் பொன்னம்பலம் அவர்கள் நேற்று (01.06.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் பாசமிகு கணவரும் சண்முகரத்தினம் (ஆயுள்வேத வைத்தியர், கோப்பாய் பிரதேச சபை), ஸ்ரீஸ்கந்தராசா (ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி), கதிரநாயகி (பூநகரி), காந்தராணி (உக்கிலாம்குளம்), குகதாசன் (முன்னாள் உபதபாலதிபர் - கனடா), முருகவேள் (ஆசிரியர் - சுவிஸ்), முருகதாஸ் (உக்கிலாம்குளம்) ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் (விவசாய உத்தியோகத்தர்) மாமனாரும் நகுலேஸ்வரி, சத்தியதேவி, பாலசிங்கம் (தபாலதிபர், செட்டிகுளம்), வசந்தி (கனடா), நந்தினி (முன்னாள் கணக்காய்வாளர், கச்சேரி, வவுனியா - சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் கிருஸ்ணசாமி (முகத்துவாரம், கொழும்பு), வள்ளிநாயகி, இராகுநாதன், இரத்தினசிங்கம் (ஜெயபுரம்), பஞ்சாட்சரம், சடாசரம் (தபாலதிபர், பூநகரி) ஆகியோரது இரத்த உறவினருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும். விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23/5, திருவள்ளுவர் வீதி,*
*வவுனியா.*
*தொ.பே.இல. 0244589576* (சி-43163)(38-16-18)

தகவல்:
பொ.ஸ்ரீஸ்கந்தராசா,
(மகன்).

### திருமதி ஏகாம்பரம் அன்னப்பிள்ளை



நெடுந்தீவு மேற்கு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏகாம்பரம் அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (01.06.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதன் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் ஐயம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் ஏகாம்பரத்தின் அன்பு மனைவியும் சின்னத்தங்கம், காலஞ்சென்றவர்களான மருதையினார், பத்தினிப்பிள்ளை, பொனனம்மா. தையல்நாயகி, சின்னச்சித்தி, கோமளம் ஆகியோரின் சகோதரியும் பசுபதி, அன்னம்மா, கிருஸ்ணபிள்ளை, தனுக்கோடி, சோமலிங்கம், தனுக்கோடி, அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, மார்க்கண்டு ஆகியோரின் மைத்துனியும் விஸ்வலிங்கம், பத்மராணி, பத்மராசா ஆகியோரின் தாயாரும் நந்தகுமாரின் (யாழ் போதனா வைத்தியசாலை) மாமியாரும் தசாகனின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*லிங்கம் களஞ்சியம்*
*அன் கொமினிக்கேசன்,*
*காரைநகர் வீதி, கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
லிங்கம் (மகன்).
(36100)(38-16-18)

## ...ட்டுடன் 2 இளைஞர்கள் ...றையில் நேற்றுக் கைது

அம்பாறையில் நேற்று பொலீஸார் நடத்திய திடீர்த் தேடுதலில் மோட்டார் சைக்கிளில் குண்டை மறைத்து வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரு தமிழ் இளைஞர்கள் கைதாகினர்.

பொலீஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே இவ்விருவரும் அம்பாறை - அக்கரைப்பற்று வீதியில் 11.30 மணியளவில் பொலீஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் மறைத்து வைத்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படும் ரி - 82 ரக கிரனேட்டுக்கள் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. மாலை 6 மணியளவில் அம்பாறை விளையாட்டு மைதானத்தில் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் அந்தக் கிரனேட்டுக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டன.

பொலீஸாரால் பிடிக்கப்பட்ட இரு இளைஞர்களும் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள். கணேசன் புவியழகன் (வயது 27), மரியதாஸ் கனகராசா (வயது 26) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்கள் என அம்பாறைப் பொலீஸார் தெரிவித்தனர். (எ-க)

## கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சியில் இன்று

யாழ்ப்பாணம்,ஜூன்2

வடமாகாண அதிபர்சங்கம், யாழ்.மத்திய கல்லூரியின் லியோக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ்.எவ்.எம்.இல் இரவு 9.30 மணி முதல் 10.30 மணிவரை ஒலிபரப்பிவரும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டி நிகழ்ச்சியில் இன்று இரவு வியாழக்கிழமை பௌதீகவியல் பாடமும், நாளை வெள்ளிக்கிழமை உயிரியல் பாடமும் இடம் பெறவுள்ளன.

மாணவர்கள் இது தொடர்பான கேள்விகளை தொலைபேசி மூலம் கேட்டுப் பயன் பெறலாம் என யாழ்.மத்தியகல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (எ-12)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லகத்தினுள் இருந்தனர்.

இது குறித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறையிட்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும் தொடர்புகள் இருக்கின்றன என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அக்கரைப்பற்று பஸ்தரிப்பு நிலையத்திலும், அதனை அண்டிய பகுதிகளிலும் அதிரடிப்படையினர் 24 மணிநேரமும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுகின்றனர். அதிரடிச் சோதனைகளையும் அவ்வப்போது மேற்கொண்டுவருகின்றனர். இருப்பினும், இத்தனை பாதுகாப்பையும் மீறி இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. எனவே, இது அதிரடிப் படையினரின் திட்டமிட்ட தாக்குதல் - எனப் புலிகளின் தரப்பு குற்றஞ்சாட்டியது.

இத்தாக்குதலில் உயிர்ச்சேதம் ஏற்படாவிட்டாலும் கட்டடங்கள், தளபாடங்கள் என்பன சேதம் அடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-க-12)

## கொழும்பு தீவிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வெள்ளவத்தை, கிருலப்பனை போன்ற இடங்களில் தேடுதல் நடவடிக்கைகளில் பொலீஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக ஈடுபட்டனர்.

சந்தேகத்துக்கிடமானவர்களை உடனடியாக விசாரணை செய்வதற்கும் சந்தேகத்துக்கிடமான குடியிருப்புகளை சோதனையிடுவதற்கும் பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

முத்தலிப்பின் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் இருவர் அம்பாறைப் பகுதியில் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் என தமக்கு தகவலொன்று கிடைத்திருப்பதாகவும், அது பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க நேற்றுத் தெரிவித்தார். எனினும், அம்பாறை பொலீஸ் நிலையத்தில் இதுபற்றி வினவியபோது தாம் அப்படி எவரையும் கைதுசெய்யவில்லை என்று அம்பாறை பொலீஸார் தெரிவித்தனர். (எ-க-12)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமோசமான நிலையை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து முடிவுகளை எடுத்துச் செயற்படுத்துவதற்காக கூட்டமைப்பின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருமலையில் தரித்து நிற்பர் என்றார் எம்.பி.ஒருவர்.

யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமலை நோக்கி நேற்றே புறப்பட்டுவிட்டனர் என்றும் அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

புத்தர் சிலை அகற்றப்படாததை அடுத்து இன்று நள்ளிரவு முதல் அதாவது நாளை வெள்ளிக்கிழமை முதல் வடக்கு-கிழக்கு மாகாணம் முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும், இன்று திருமலையில் கூடும் தமிழ் எம்.பிக்களே இதுவிடயமாகக் கூடி இறுதி முடிவு எடுப்பர் எனக் கூறப்பட்டது. (எ-3)

## இனிப் பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்புப் படையினர் அங்கிருந்து உடனடியாக வெளியேற்றப்பட வேண்டுமென தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை அரசு உடனடியாக நிறைவேற்றுமென்று நம்புகிறோம்.

நீதிமன்றத்தின் மூலமோ, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தைப் பயன்படுத்தியோ புத்தர் சிலை விவகாரத்திற்குத் தீர்வுகாண 15 ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கியுள்ளோம். அதற்குள் சிலை அகற்றப்படாவிட்டால் இது தொடர்பான எந்தப் பேச்சுகளிலும் தமிழர் தரப்பு இனிக் கலந்துகொள்ளாது - இவ்வாறு விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (எ-க)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதை நடைமுறையை இறுக்கமாக அமுல் படுத்துதல்.

★ வீதிகளில் சமாந்தரமாக சைக்கிள்களில் செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்.

★ சாரதி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் என்பன இல்லாமல் வாகனம் செலுத்துவோருக்குத் தண்டம் விதித்தல்.

★ தனியார் மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களின் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றுகின்ற சாரதிகள் மீது நடவடிக்கை எடுத்தல்.

★ மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்வதை முற்றாகத் தடைசெய்தல்.

இதேவேளை -

யாழ்.போதனா வைத்தியசாலையின் பின்புறமுள்ள மின்சார நிலைய வீதியை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடுவது தொடர்பாக படைதரப்பினருடன் தாம் பேச விருக்கின்றார் என்றும் வடபிராந்திய பொலீஸ்மா அதிபர் கல்பதாது தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பல்வேறு தரப்பினரும் மின்சார நிலைய வீதியைத் திறந்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கேட்டுக் கொண்டதையடுத்தே அவர் படைத்தரப்பினருடன் பேசி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர், வடபிராந்திய போக்குவரத்துச்சபை அதிகாரி, தனியார் மினிபஸ் சங்கப் பிரதிநிதிகள், யாழ். ஆணையாளர் மற்றும் குடாநாட்டிலுள்ள பொலீஸ் நிலையங்களின் போக்குவரத்துப் பிரிவு பொறுப் பதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (கு-7)

## புத்தர் சிலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, கப்பற்றுறை பிரதியமைச்சர் டிலான் பெரேரா, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ, ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், கா.துரைரட்ணசிங்கம், திருமலைப் பிரதேச செயலாளர், நகரசபை செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுமார் நான்கு மணிநேரம் இந்தப் பேச்சு நடைபெற்றது. திருமலை புத்தர் சிலை விவகாரத்திற்கு தீர்வு காண்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் குறித்து இங்கு விளக்கிக்கூறிய அரச தரப்புப் பிரதிநிதிகள், இந்தப் பிரச்சனைக்குத் தீர்வுகாண மேலும் கால அவகாசத்தைத் தருமாறு கோரினர்.

ஏற்கனவே, இதுவிடயம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு எதிர்வரும் 13ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. இந்த நிலையில் சிலை விடயத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் தனியே மற்றுமோர் உத்தரவை நாளை வெள்ளிக்கிழமை பிறப்பிக்கவுள்ளது. எனவே, நடவடிக்கை எடுக்கத் தமக்கு மேலும் கால அவகாசத்தைத் தருமாறு அரச பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பின்போது வேண்டினர்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த தமிழர் தரப்புப் பிரதிநிதிகள், திருமலை புத்தர் சிலை விடயத்தில் அரசாங்கம் காலத்தை இழுத்தடிப்பதாகக் குற்றஞ்சாட்டினர். எனினும், அரசாங்கத்திற்கு இறுதிச்சந்தர்ப்பம் ஒன்றை வழங்கும் வகையில் இரு வாரகால அவகாசத்தை வழங்குவதற்கு இணங்கினர். அதற்குள் சிலை அகற்றப்படாவிட்டால் 15ஆம் திகதிக்குப் பின்னர் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தமிழர் தரப்பு இந்தச் சந்திப்பின் போது எச்சரித்தது.

ஆனாலும், இன்னும் இரு வார காலத்திற்குத் தமிழர் தரப்பு அமைதியைக் கடைப்பிடிப்பதால் இயல்பு வாழ்விற்கு இடைஞ்சலான விதத்தில் நகரில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை உடனடியாக அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் எனவும், இந்த விவகாரத்தில் பாரபட்சமாக நடந்துகொள்ளும் பொலீஸார் தொர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் மேலும் வலியுறுத்தினர். இது தொடர்ப்பில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார்.

### செய்தியாளர்களிடம் கருத்து

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியதாவது:-

இவ்விடயத்தைச் சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு எமது அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ளது. இங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டோம். சகல மதத்தலைவர்களையும் சந்தித்துப் பேசியபோதும் பௌத்த மதகுரு (சீனக்குடா) கொழும்பு சென்றதால் அவரை நேரடியாகச் சந்திக்கமுடியவில்லை. தொலைபேசியில் தொடர்புகொண்டு அவரோடு பேசினேன்.

தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட - பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்ட படையினரை உடனடியாகத் திருகோணமலை நகரில் இருந்து அகற்றும் - கோரிக்கை குறித்து ஜனாதிபதியுடன் உடனடியாகச் சந்தித்துப் பேசவுள்ளேன்.

புத்தர் சிலையை அகற்றுவது சம்பந்தமாக சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்வதற்காக 15ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கிய தமிழர் தரப்பினருக்கு நன்றி என்றார்.

### இரா. சம்பந்தன் எம்.பி.

புத்தர் சிலையை அகற்றுவது சம்பந்தமாக சட்டரீதியாக நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலமும் நடவடிக்கை மேற்கோள்ளவதற்கு கால அவகாசத்தை வழங்கியுள்ளோம். திருகோணமலை நகரில் நிறுத்தப்பட்டுள்ள பாதுகாப்புப் படையினரை உடனடியாக அகற்றுமாறு நாம் விடுத்த வேண்டுகோளுக்கு அரசதரப்பின் சார்பில் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டோர் நம்பிக்கையான தீர்க்கமான பதிலை அளித்துள்ளனர் - என்றார். (எ-க-12)

## பொதுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவிர ஆலோசனைகளுக்குப் பின்னர் யார் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தாலும் அதனை எதிர்ப்பது என்று கட்சியின் அரசியல்குழு தீர்க்கமான ஒரு முடிவை எடுத்தது என்று கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கையெழுத்திடுவது என்று ஜனாதிபதி முடிவெடுத்தால், மறுபேச்சின்றி அரசில் இருந்து வெளியேறுவது என்ற கட்சியின் முடிவை எக்காரணம் கொண்டும் மாற்றக்கூடாது என்று அரசியல் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்துப் பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அடுத்த ஒரு மணி நேரத்தில் அரசிலிருந்து வெளியேறுவது என்றும் அரசியல் குழு மிக உறுதியான தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஜே.வி.பியின் ஜனாதிபதி வேட்பாளராக நந்தன குணதிலக்கவை நியமிக்க வேண்டும் என இந்தக் கூட்டத்தின்போது பெரும்பாலான உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டனர் என்றும் கூறப்பட்டது. (எ-க)

## தமிழீழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்த நிகழ்வுகளில் குடாநாட்டில் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் பங்குபற்ற விருக்கின்றனர். (கு-13)

## வீதியில் நடந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறுக்குத் தெரு ஊடாக தமது காரில் கடமை நிமித்தம் சென்று கொண்டிருந்தார் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்

அப்போது சுமார் 2 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் தனியாக - தான் நினைத்தது போல வீதிக்குக் குறுக்காக சென்று கொண்டிருந்தான். அதனை நீதிவான் அவதானித்தார் எனினும் நீதிவான் அங்கு நிற்காது சிறுவனைத் தாண்டிச்சென்றுள்ளார்.

பின்னர் சிறிய தூரம் சென்ற நீதிவான் திரும்பிப் பார்த்திருக்கின்றார். அப்போதும் சிறுவனை யாரும் வந்து தூக்கிச் செல்லவில்லை. அவன் தன்பாட்டுக்கு நடந்துகொண்டிருந்தான்.

உடனே காரைத் திரும்பிக்கொண்டு சிறுவனுக்கு அருகாக வந்த நீதிவான் காரிலிருந்து இறங்கி சிறுவனைத் தூக்கிக் கொண்டு அப்பகுதியிலுள்ள வீடுகளில் விசாரித்து பிரஸ்தாப சிறுவனின் வீட்டைக் கண்டுபிடித்தார்.

சிறுவனின் தாயார் அவ்வேளையில் வெளியில் சென்றிருந்தார். அங்கு இருந்த சிறுவனின் பேர்த்தியாரிடம் விடயத்தைக் கூறிய நீதிவான் சிறுவனை நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்று பொலீஸாரிடம் ஒப்படைத்தார். சற்று நேரத்தில் சிறுவனின் தாயார் அங்குவந்து சேர்ந்தார்.

சிறுவனை கவனிப்பாரற்ற நிலையில் தனியாக வீதியில் விட்டமை தொடர்பாக பொலீஸார் சிறுவனின் தாயாருக்கு எதிராக வழக்கு ஒன்றைத் தாக்கல்செய்தனர்.

அந்த வழக்கை விசாரித்த நீதிவான் வாகனப் போக்குவரத்துக்கள் மிகுந்த வீதியில் தன்னந்தனியாக சிறுவனை செல்ல விட்டமைக்காக பிரஸ்தாப சிறுவனின் தாயாரை கடுமையாக எச்சரிக்கை செய்தார். பின்னர் சிறுவன் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டான். (கு)


D.C.C.A ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

A/L 06, 07 கலைப்பிரிவு

கலைச்சூரியன்களின் கூட்டணி

| | | |
|---|---|---|
| இ.நா. | :- | சிவமகாலிங்கம் |
| தமிழ் | :- | நாகதமிழிந்திரன் - பாலமுரளி |
| புவியியல் | :- | கிரிதரன் |
| அரசியல் | :- | பொன்சந்துரு |
| அளவையியல் | :- | ஜெயசுரேஸ் |
| நாடகம் | :- | சந்திரன் |
| வரலாறு | :- | சுஜிகரன் |
| கிறிஸ்தவம் | :- | றங்கன் |
| ஆங்கிலம் | :- | மதன் |

(36069)(38-18-16)

2005 - 06- 04 சனி 11 a.m. முழுவதும் ஆரம்பத்திலிருந்து.

அனுமதிக்கு முந்துங்கள்.

A/L 2007

பொருளியல்

K. உதயன்

ஆரம்பம்-

03-06-2005 (வெள்ளி)

திங்.,வெள்.- 6.30-7.30 a.m.

புதிய யூனிவேசல அக்கடமி.

A/L 2007

வர்த்தகப் பிரிவு

Eco:K. உதயன்

Acc:S. சயந்தன்

B.St:S. யசோ

ENG:T. கிரிதரன்

ஆரம்பம் 03.06.2005

2006 PAPER CLASS உடன் ஆரம்பம்

புதிய யூனிவேசல் அக்கடமி

அரசடி வீதி, யாழ்ப்பாணம். (36034)

Study in India

- மருத்துவம்
- பொறியியல்
- தாதியியல்
- மருந்தாளுநர்
- முடநீக்குயியல்
- கண் மருத்துவம்

மற்றும் ஏனைய பட்டப்படிப்பு அனுமதிகளுக்கும் தொடர்புகொள்க

NN CONSULT

Telephone: 5558833 Fax: 5558844

No:60,(First floor), Peterson Lane, Colombo-06.

E.mail: nnconsult@sltnet.lk

இதய அடைப்பு நோய் குணமாக வேண்டுமா?

இதய அடைப்பு நோய்க்காக வாழ்நாள் முழுவதும் சிகிச்சை பெறவேண்டியதில்லை. எங்களுடைய ஆயுர்வேத மருத்துவம் மூலம் அதனைச் சில வாரங்களில் குணமாக்கலாம், இதய அடைப்புத் தொடர்பான சிகிச்சைகளை நாங்கள் உரியமுறையில், குறைந்த செலவில் வழங்குகிறோம்.

விவரங்களுக்கு:

FAIR PHARMA (PVT) LTD

(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)

Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01.

Phone: 5517897, 5551879, Fax: 5517756

E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org

A BOI Approved & ISo 9001 : 2000 Qms Cetified Company.


## மரண அறிவித்தல்

### அந்தோனி அபிஷேகநாதன்

### (ராசையா - ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன் துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

பலாலியைப் பிறப்பிடமாகவும் 15/23, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அந்தோனி அபிஷேகநாதன் (ராசையா) அவர்கள் நேற்று (01.06.2005) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் யூலியானா பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி றெஜினா இம்மானுவேன், மாட்டின் ஜெயராஜா (ஜெயம் - கட்டடத் திணைக்களம்), திருமதி அலெக்ஸ்சாந்திரா செபரட்ணம் (ராஜி), அன்ரன் பீலிக்ஸ் (நல்லி சில்க்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இம்மானுவேல், செபரட்ணம் (வெல்டிங்), திருமதி நிர்மலா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி நேசம்மா, மரியரட்ணம், பாக்கியநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி மரியசெல்வராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதி மரியபுஸ்பம், திருஞானசீலன் (ஆசிரிய ஆலோசகர், தீவகம்), திருமதி மேரிறோஸ் முத்து ஆகியோரின் அன்பு மைத்துனரும், வினிபிறட்ஸ்ரீபன், டினோசியன், அமல்தேவ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.06.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இடம்பெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*15/23, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். 077 6916104*

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

(36061)(38-18-16)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.